
KEMENTERIAN PENDIDIKAN
JABATAN PENDIDIKAN NEGERI JOHOR

# MODUL MENGGILAP PERMATA SPM
# KESUSASTERAAN TAMIL

# எஸ்.பி.எம். தமிழ் இலக்கியச் சுடர்

## 3.0









**SUBUNIT BAHASA TAMIL**
**SEKTOR PEMBELAJARAN**
**JABATAN PENDIDIKAN NEGERI JOHOR**

| KANDUNGAN / பொருளடக்கம் | |
|---|---|
| தலைப்பு | பக்கம் |
| பொருளடக்கம் | 1 |
| Kata Alu-aluan | 2 |
| வாழ்த்துரை | 3 |
| பயிற்சி - தொகுதி 1 | 4-9 |
| விடைப்பட்டி – தொகுதி 1 | 10-19 |
| பயிற்சி - தொகுதி 2 | 20-25 |
| விடைப்பட்டி – தொகுதி 2 | 26-33 |
| பயிற்சி - தொகுதி 3 | 34-39 |
| விடைப்பட்டி – தொகுதி 3 | 40-46 |
| பயிற்சி - தொகுதி 4 | 47-53 |
| விடைப்பட்டி – தொகுதி 4 | 54-67 |
| பயிற்சி - தொகுதி 5 | 68-74 |
| விடைப்பட்டி – தொகுதி 5 | 75-84 |
| இலக்கியக் கலைச்சொற்கள் | 85-86 |
| ஆசிரியர் குழு | 87 |
| நன்றி மலர்கள் | 88 |

# KATA ALU-ALUAN



**Salam Sejahtera.**

Saya amat bersyukur kerana diberi ruang kepada saya untuk berbicara sepatah dua kata dalam pengeluaran modul Menggilap Permata SPM 3.0 mata pelajaran Kesusasteraan Tamil bagi tahun 2022. Tahniah dan syabas kepada guru-guru yang terlibat dalam penghasilan modul ini.

Pengeluaran modul dalam adalah amat sesuai dengan masa dan selaras dengan format SPM. Modul ini telah diteliti, dirancang dan disusun mengikut keperluan para pelajar yang mengambil mata pelajaran Kesusasteraan Tamil pada peringkat SPM. Pada masa yang sama, kami di Jabatan Pendidikan Negeri Johor percaya bahawa modul ini akan membantu pelajar ke arah pembelajaran kendiri murid pada masa kini. Selain itu, guru-guru mata pelajaran Kesusasteraan Tamil negeri Johor dapat memantapkan kefahaman mereka dalam melaksanakan proses pembelajaran dan pemudahcaraan (PdPc).

Setiap tahun penambahbaikan dibuat bagi meningkatkan kualiti modul selaras bagi meningkatkan keberhasilan penggunaan modul ini. Selain mengandungi soalan berunsurkan Kemahiran berfikir aras tinggi, contoh jawapan turut dimuatkan dalam modul ini. Sehubungan dengan itu, tidak dapat dinafikan bahawa modul ini sudah pasti akan menjadi sumber rujukan penting untuk guru dan para pelajar membuat persiapan bagi menghadapi peperiksaan SPM 2022.

Komitmen yang tinggi telah ditunjukkan oleh ahli panel dalam menyiapkan modul ini Pengorbanaan masa dan tenaga demi pembangunaan akedemik para pelajar harus dihargai. Oleh itu, diharapkan para pelajar akan menggunakan peluang ini dengan baik dan menjadikan modul ini sebagai bahan rujukan penting bagi melengkapakan diri untuk menghadapi peperiksaan SPM. Pada masa yang sama, modul ini juga akan menambahkan bahan atau sumber rujukan bagi mata pelajaran Kesusasteraan Tamil SPM.

Saya sekali lagi merakamkan ucapan penghargaan dan setinggi-tinggi tahniah kepada semua yang terlibat secara langsung atau tidak langsung dalam penghasilan modul ini. Jabatan Pendidikan Negeri Johor berharap usaha ini akan memberi semangat baharu kepada para pelajar dan guru dalam memastikan kecemerlangan akademik negeri Johor.

**HAJI SHAHILON BIN ABD HALIM**
Timbalan Pengarah,
Sektor Pembelajaran,
Jabatan pendidikan Negeri Johor

# *வாழ்த்துரை*



வணக்கம்.

எஸ்.பி.எம் தமிழ் இலக்கியப் பாடப் பயிற்றியான தமிழ் இலக்கியச் சுடர் 3.0 வெளியீடு காண்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இப்பயிற்றியானது மாணவர்களின் தன்னிலைக் கற்றலுக்குப் பெருந்துணையாய் அமையும் என்பது ஜொகூர் மாநிலக் கல்வித் கல்வித்துறையின் தமிழ்மொழித் துணைப்பிரிவின் நம்பிக்கையாகும்.

இப்பயிற்றியின்வழி தமிழ் இலக்கியப் பாடத்தைப் பயிலும் மாணவர்கள் இப்பாடத்தில் தங்களின் கற்றலை மேம்படுத்திக் கொண்டு தேர்வுத் தயார்படுத்திக்கொள்ள கொள்ளவும் வழியமைக்கும். 2022ஆம் ஆண்டு எஸ்.பி.எம் தேர்வுக்குத் தயாராகிக் கொண்டிருக்கும் சுடர் விளக்குகளாகிய மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் இந்தப் பயிற்றி முக்கிய மேற்கோள் நூலாக அமையும் என்பது மறுப்பதற்கில்லை.

மேலும், மாணவர்கள் தமிழ் இலக்கியப் பாடத்தில் சிறந்து விளங்கும் பொருட்டு, ஆசிரியர்கள் இப்பயிற்றி தயாரிப்புப் பணியில் தங்களின் உழைப்பையும் நேரத்தையும் செலவிட்டிருப்பது போற்றுதலுக்குகந்தது. எனவே, எஸ்.பி.எம் தேர்வெழுதத் தயாராகும் மாணவர்கள் இந்த வாய்ப்பை அரியதாகப் போற்றி நன்முறையில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

இம்முயற்சியின்வழி தமிழ் இலக்கியப் பாடத்தின் பயிற்சி நூல்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதோடு மட்டுமல்லாமல், இனிவரும் காலங்களில் இப்பாடத்தினைத் தேர்வுப்பாடமாக எடுக்கும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என்பது அனைவரின் எதிர்பார்ப்பாகும்.

இறுதியாக இப்பயிற்றி மின்னூலாக வெளியீடு காணப் பலவழிகளில் நேரடியாகவும் பின்புலமாகவும் துணைநின்று பங்காற்றிய அனைவருக்கும் எனது உளமார்ந்த வாழ்த்தினையும் பாராட்டினையும் பதிவு செய்கின்றேன். இப்பயிற்றி, அதன் தலைப்புக்கு ஏற்றவாறே மாணவர்கள் தமிழ் இலக்கியப் பாடத்தில் சுடர் விட்டுப் பிரகாசிப்பதற்கு இம்முயற்சி புதிய நம்பிக்கையையும் ஆர்வத்தையும் விதைக்கும் என்பது திண்ணம்.

இலக்கியமே பண்பாட்டின் வேர்; இனிய இலக்கியத்தை இணைந்து வளர்ப்போம்.

நன்றி, வணக்கம்.

**பிரகாஷ் சுந்தரம்**
**தமிழ்மொழித் துணைப்பிரிவு**
**ஜொகூர் மாநிலக் கல்வித்துறை**

## தொகுதி 1

*[எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்]*

**பாகம் - ஒன்று**

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**பிரிவு ஒன்று : கவிதை**

புத்தம் புதிய புத்தகத் தினிலே
என்னிடம் பறித்த எழுது கோலால்
என்மகன் ஏதோ எழுத லுற்றான்!
காற்றொடு காற்றாய்க் கடலொடு கடலாய்ப்
பூவொடு பூவாய்ப் புனலொடு புனலாய்
ஒன்றிப் பாட்டாய் உணர்வின் எல்லையில்
நின்றிவ் **வுலகை மறந்த வேளையில்**
பிள்ளைப் பாசமா பிறக்கும்? உடனே
விரைந்து நூலை வெடுக்கெனப் பிடுங்கினேன்;
தூவலைப் பற்றித் தொடர்ந்தேன் பணியை.

- **முரசு நெடுமாறன்**

**1.** இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **மையக்கரு** யாது?

(2 *புள்ளி*)

**2.** இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **ஓசைநயங்கள்** இரண்டனை எழுதுக.

(4 *புள்ளி*)

**3.** i) '**உலகை மறந்த வேளையில்**' என்பதன் பொருள் யாது? (2 *புள்ளி*)

நின்றிவ் வுலகை மறந்த வேளையில்
பிள்ளைப் பாசமா பிறக்கும்? உடனே
விரைந்து நூலை வெடுக்கெனப் பிடுங்கினேன்;
தூவலைப் பற்றித் தொடர்ந்தேன் பணியை.

ii) இவ்வடிகளில் கவிஞர் **விரைந்து நூலை வெடுக்கெனப் பிடுங்கியதற்கான காரணம்** என்ன? (2 *புள்ளி*)

[10 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

4. பிசிராந்தையார் நாடக ஆசிரியர் **ஈடுபட்ட துறைகளுள்** ஒன்றனைக் குறிப்பிடுக.
(2 *புள்ளி*)

5. i. பிசிராந்தையார் நாடகத்தில் இடம்பெற்றுள்ள **துணைக் கதைப்பாத்திரங்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

ii. பிசிராந்தையார் நாடகத்தின் **உத்திமுறை** ஒன்றனை எழுதுக. (2 *புள்ளி*)

6. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | | |
|---|---|---|
| பிசிராந்தையார் | : | வருக மேற்படியாரே! என்ன வரவர மேற்படியார் கீழ்ப்படியாராகி விட்டார். காலையில் வரும்படி சொன்னேன். கீழ்ப்படிந்தாரா? |
| மேற்படியார் | : | **வரும்படியிருந்தால்தானே வரும்படியாய் இருக்கும்**. என் குழந்தை சோறு கேட்டான். மனைவி இல்லையென்றாள். இரும்படி உன் நெஞ்சம் என்றேன். ஒரு பணம் தரும்படி கேட்டாள். அரிசி வாங்க வரும்படியிலிருந்தால் தானே! திரும்படி உன் ஆத்தாள் வீட்டுக்கு என்றேன். பெரும்படி வருந்தினாள். அங்கிருக்க முடியவில்லை. இங்கு வரும்படி நேர்ந்தது. |
| பிசிராந்தையார் | : | அரிசி வாங்க ஒரு பணமா இல்லை! சிரிக்க வைத்து என்னை இன்பத்திற் சேர்க்கும் நீவிர் இப்போது அழ வைத்துத் துன்பத்திற் சேர்த்தீர். முதலில் இதைக் கொண்டு போய் மனைவி மக்களின் பசித்துன்பத்தைப் போக்கி வர வேண்டும். *(மார்பின் கல்லிழைத்த பதக்கத் தொங்கலைக் கழற்றி மேற்படியார் கையில் கொடுக்க அவர் வாங்கிக் கொள்கிறார்.)* |
| மேற்படியார் | : | *(மற்றப் புலவர்களைப் பார்த்து நகைத்து)* இதைக் கொண்டு போய் வீட்டில் வைத்துவிட்டு வந்து விடுகிறேன். |
| புலவர் க | : | அப்படியானால் பணமில்லை அரிசியில்லை என்றதெல்லாம் பச்சைப் புளுகுதானா? |
| | | (காட்சி 1, பக்கம் 3 & 4)<br>(உமா பதிப்பகம் 2020) |

i) இச்சூழலில் வெளிப்படும் பிசிராந்தையாரின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக.
(2 *புள்ளி*)

ii) இச்சூழலில் காணப்படும் **மொழிநடை** ஒன்றனை எழுதுக. (2 *புள்ளி*)

iii) **“வரும்படியிருந்தால்தானே வரும்படியாய் இருக்கும்”** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 *புள்ளி*)

iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 *புள்ளி*)

[15 புள்ளி]

**பிரிவு மூன்று : நாவல்**

7. வாடா மலர் நாவலாசிரியரின் **அடையைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

8. i) வாடா மலர் நாவலில் எளிய வாழ்வைப் போற்றிய **இருவரைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

ii) வாடா மலர் நாவலின் **உச்சம்** யாது? (2 *புள்ளி*)

9. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> திடீரென்று என் மனத்தில் ஒருவழி பிறந்தது. அவனை அழைத்துக் கொண்டு சமையல் அறைக்குச் சென்றேன். என் தாயிடம் நடந்ததைச் சொன்னேன். "இந்தக் காயை நம் வீட்டுக்கு வைத்துக் கொள்ளலாம் அம்மா. இதற்குக் காசு கொடுத்து விடுவோம். காசை எடுத்துக் கொண்டு போய் இவன் வேறு வாங்கி விடுவான்," என்றேன்.
>
> என் தாய் பேசாமல் பெருமூச்சு விட்டுத் தானப்பனின் கையில் மூன்றணா கொடுத்தாள். **உடனே அவன் முகம் மலர்ந்தது.** மறுபடியும் கடைக்கு வருமாறு என்னை அழைத்தான். "இப்போது நீ மட்டுமே போய் நல்லதாகப் பார்த்து வாங்கிக் கொண்டு வா" என்று அவனை அனுப்பிவிட்டேன்.
>
> என் தாய் அப்போதும் ஒன்றும் பேசாமல் வேலையில் ஈடுபட்டாள்.
>
> "என் மேல் கோபமா அம்மா?" என்று கேட்டேன்.
>
> புன்முறுவலோடு என்னைப் பார்த்தாள். "நீ நல்லதுதான் செய்தாய். ஆனால், அவனுடைய சித்திக்கு நல்ல மனம் இல்லையே. என்ன செய்வது?" என்றாள்.
>
> (அத்தியாயம் 3, பக்கம் 31 & 32)
> (மல்டி எடுகேஷனல் புக் எண்டர்பிரைஸ் 2020)

i) இச்சூழலில் வெளிப்படும் குழந்தைவேலின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக**.** (2 *புள்ளி*)

ii) இச்சூழலின் **இடப்பின்னணியை** எழுதுக**.** (2 *புள்ளி*)

iii) **'உடனே அவன் முகம் மலர்ந்தது'** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 *புள்ளி*)

iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 *புள்ளி)*

[15 புள்ளி]

## பாகம் – இரண்டு

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கட்டுரையாக **மூன்று** கட்டுரைகள் எழுதுக.

### பிரிவு ஒன்று : கவிதை

**நாளை நமதே!**

தென்றல் விளையாடும் சோலை வனமெங்கள்
தேசமென்றே ஒன்றாய்க் கூடுங்கடி
குன்றினில் நின்றாடுங் கோல மயிலெனக்
கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி

தோட்டப் புறத்தினில் தொட்ட இடத்தினில்
நொய்வமும் செம்பனை ஈயமெலாம்
பாட்டன் வியர்வை நீர் பட்ட சிறப்பென
பாடுங்கடி பாடி ஆடுங்கடி

பத்து மலையினில் கொட்டும் மழையென
பார்க்க வருகின்ற கூட்டமெலாம்
முத்துக் கலையினில் மோகம் அடைந்ததால்
முல்லை மலர்களே கொட்டுங்கடி

முத்து மணித்திரள் மூழ்கி எடுத்தவர்
முன்னுரை வாழ்வெனக் கொட்டுங்கடி
முத்திரையிட்டவர் மூத்த குடியினர்
முத்தமிழர் என்றே கொட்டுங்கடி

வட்ட நிலவினில் பட்ட கறையென
வாழ்க்கை யமைந்தது பாருங்கடி
வெட்ட வெளியினில் பட்ட மரமென
வேரற்றுப் போனதேன் கூறுங்கடி

நாளை வருங்காலம் நம்மவர்க்கே என்று
நம்தமிழ்ப் பெண்களே கொட்டுங்கடி
வேளை வருமென்று வீணில் உறங்காமல்
வீறுகொண்டே கும்மி கொட்டுங்கடி!

- **கவிஞர் காசிதாசன்**

10 மேற்காணும் கவிதையின் **தெரிநிலைக் கருத்துகளை** விளக்கி எழுதுக.

[20 புள்ளி]

அல்ல

11 கீழ்க்காணும் கவிதையை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**காலம் பறக்குதடா!**

காலம் பறக்குதடா! - தமிழா
வாழப் பறந்திடடா!
கோளம் வலம்வரவே - உலகம்
கோலம் புனையுதடா!
நாளும் நடக்கையிலே - புதுமை
நாடிப் பெருகுதடா!
வாழும் வகைகளிலே - வளங்கள்
வந்து குவியுதடா!

நேற்றுத் திருந்தியவர் - உன்னை
நோக்கிப் பழகியவர்
ஊற்றுப் பெருக்கெனவே - இன்பம்
ஊறத் திளைக்கின்றார்!
காற்றுக் கிடையினிலே - அலை
கத்தும் கடலினிலே
ஆட்டம் நடத்துகின்றார்! - நீயேன்
ஆழக் கிணற்றிலுள்ளாய்?

நாளும் முழங்குகின்றாய் - அந்த
நாளில் இருந்ததெல்லாம்!
காலப் பயனறியாய்! - உய்வைக்
காணும் கடன் மறந்தாய்!
பாழும் பிரிவினைகள் - வளர்த்தே
பாதை தவறிவிட்டாய்!
மீளும் வகைமொழிவார் தம்மொடும்
மோதிக் கெடுத்திடுவாய்!

ஒன்றிச் செயல்புரிந்தால் - நாம்
உச்சிக் குயர்வோமென
ஒன்றி முறைவகுப்பாய்! - சின்னாள்
சென்று நிலையறிந்தால்
என்றும் இருந்ததுபோல் - இருப்பாய்
ஏதும் செயல்புரியாய்!
என்றிங் குயர்வதடா! - தமிழா
எண்ணிச் செயல்தொடடா!

\- **கவிஞர் கருதிருவரசு.**

i) இக்கவிதையில் காணப்படும் **நயங்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

ii) இக்கவிதையின் **படிப்பினைகள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

[20 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

12 பிசிராந்தையார் நாடகத்தின் **அறிவுடைநம்பி என்றென்றும் மக்களின் மனத்தில் இடம்பெற்றவன்**. இக்கூற்றை விளக்கி எழுதுக. [20 புள்ளி]

அல்லது

13 பிசிராந்தையார் நாடகத்தின் **கதைப்பின்னலை** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

## பிரிவு மூன்று : நாவல்

14 i) வாடா மலர் நாவலில் சுடர்விழியின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

ii) வாடா மலர் நாவலின் **பின்னணிகள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

[20 புள்ளி]

அல்லது

15 i) வாடா மலர் நாவலில் பூங்கொடியின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

ii) வாடா மலர் நாவலின் **மொழிநடைகள்** மூன்றனை விளக்குக. (10 *புள்ளி*)

[20 புள்ளி]

**முற்றுப் பெற்றது**
**SOALAN TAMAT**

# விடைப்பட்டி

## தொகுதி 1

| எண் | விடை | | புள்ளி |
|---|---|---|---|
| 1. | குழந்தையின் கலை உணர்வைப் போற்றுவோம். | | 2 |
| 2. | • எதுகை :<br>• பு**த்**தம் பு –**த்**தக<br>• கா**ற்**றொடு கா –**ற்**றாய்க்<br>• க**ட**லொடு க –**ட**லாய்க்<br>• பு**ன**லொடு பு –**ன**லாய்<br><br>மோனை :<br>• **பு**த்தம் –**பு**திய –**பு**த்தக<br>• **எ**ன்னிடம் –**எ**ழுது<br>• **எ**ன்மகன் –**ஏ**தோ –**எ**ழுத<br>• **கா**ற்றொடு –**கா**ற்றாய்க் -**க**டலொடு –**க**டலாய்க்<br>• **பூ**வொடு -**பூ**வாய் -**பு**னலொடு –**பு**னலாய்<br><br>இயைபு :<br>• காற்றொடு காற்றாய்க் கடலொடு கட**லாய்ப்**<br>பூவொடு பூவாய்ப் புனலொடு புன**லாய்**<br>• ஒன்றிப் பாட்டாய் உணர்வின் எல்லை**யில்**<br>நின்றிவ் வுலகை மறந்த வேளை**யில்**<br>(ஏதேனும் 2) | | 4 |
| 3. i) | கவிதை எழுதுவதில் ஆழ்ந்திருந்த நேரத்தில். | | 2 |
| 3. ii) | தன் மகன் எழுதுகோலைப் பறித்துச் சென்று வேறொரு புதிய புத்தகத்தில் எழுதத் தொடங்கியதைக் கண்டு கோபமடைந்ததால், கவிஞர் விரைந்து சென்று புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கினார். | | 2 |
| 4. | கவிதை/ நாடகம்/ திரைப்படம்/ கட்டுரை/ இசைப்பாடல்/ காவியம்/ புதினம்<br>(ஏதேனும் 1) | | 2 |
| 5. i) | அறிவுடைநம்பி/ கோப்பெருஞ்சோழன்/ பாண்டிய நாட்டு அரசி/ சோழ மன்னி/ அமைச்சர்/ அனிச்சை/ பச்சைக்கிளி/ மான்வளவன்/ தூயோன் / பிற<br>(ஏதேனும் 2) | | 2 |
| 5. ii) | பின்னோக்கு உத்தி, முன்னோக்கு உத்தி, நனவோடை உத்தி, பாடல்/ கவிதை உத்தி, கதைகூறல் உத்தி, ஓலை உத்தி, உரையாடல் உத்தி.<br>(ஏதேனும் 1) | | 2 |
| 6. i) | • உதவும் மனப்பான்மை கொண்டவர்.<br>• இரக்க குணம் உள்ளவர் பிறரின் / துன்பத்தைக் கண்டு வருந்துபவர்.<br>• நகைச்சுவை உணர்வு கொண்டவர்.<br>• எளிதில் எவரையும் நம்புபவர்.<br>(ஏதேனும் 2) | | 2 |
| 6. ii) | சந்த நடை / அடுக்கு மொழி | | 2 |
| 6. iii) | தனக்கு வருமானம் இல்லாததால், பிசிராந்தையார் சொன்ன நேரத்தில் தன்னால் வரமுடியவில்லை என்கிறார் புலவர் மேற்படியார். | | 2 |

| | | | |
|---|---|---|---|
| 6. iv) | பிசிராந்தையார் தம் கடைசிப் பேரனாகிய கோப்பெருஞ்சோழனைத் தோளில் தூக்கியபடி வெளியில் வருகின்றார். அவரைத் தொடர்ந்து புலவர் பலர் வருகின்றார்கள். அவர்கள் அனைவரும் உரையாடிக் கொண்டிருக்கும் போது மேற்படியார் அங்கு வருகிறார். சொன்ன நேரத்தில் வராமல் தாமதமாக வந்த மேற்படியாரைப் பிசிராந்தையார் நகைச்சுவையாக இடித்துரைக்கிறார். | | 3 |
| 7. | மு. வ. (மு. வரதராசன்) | | 2 |
| 8. i) | • முருகய்யா<br>• சுடர்விழி | | 2 |
| 8. ii) | • பூங்கொடி மனந்திருந்தி குழந்தைவேலுடன் கூட்டுக்குடும்பமாக வாழ்தல்.<br>• கனகம் மீண்டும் தானப்பன் வீட்டில் வந்து தங்குதல்.<br>• திடீரென்று ஒரு நாள் இருவரும் மரணமடைதல். | | 2 |
| 9. i) | • நட்பைப் போற்றுபவன்.<br>• இரக்க மனம் கொண்டவன்.<br>• உதவும் மனப்பான்மை கொண்டவன்.<br>• பிறர் நலத்தில் அக்கறை உள்ளவன்.<br>(ஏதேனும் 2) | | 2 |
| 9. ii) | குழந்தைவேலின் வீடு. | | 2 |
| 9. iii) | வேறு காய்கள் வாங்குவதற்குப் பணம் கிடைத்து விட்டதால் தானப்பன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தான். | | 2 |
| 9. iv) | தானப்பன் தவறாக வாங்கி வந்த கத்தரிக்காயை வேண்டாமென்றும் சித்தி கூறுகிறார். வேறு காய்கள் மாற்றிக் கொண்டு வருமாறு சித்தி கோபப்பட்டு அனுப்புகிறார். தானப்பன் செய்வதறியாது தவித்தப்போது குழந்தைவேல் அவனுக்கு உதவ முற்படுகிறான். | | 3 |
| 10. | தெரிநிலைக் கருத்துகள் :<br>முன்னுரை :-<br>• கவிதைத் தலைப்பு நாளை நமதே :<br>• கவிஞர் காசிதாசன் :<br>• பாடுபொருள் : வாழ்க்கை<br>• கேள்வியையொட்டிய வாக்கியம் சிந்திக்கத் தூண்டும் பல : .சமுதாயச் சிந்தனைகளை முன்வைக்கிறார் கவிஞர்<br><br>கருத்துகள் :<br>1. இயற்கை அழகு மிகுந்தது எங்கள் நாடென்றே ஒன்றாய்க் கூடுவோம். குன்றினில் நின்று தோகை விரித்தாடும் மயிலைப்போல கும்மி கொட்டி மகிழ்வோம் .<br>2. தோட்டத்தில் பார்க்கும் திசைகளிலெல்லாம் காணும் ரப்பர், செம்பனை, ஈயம் ஆகிய வளங்கள் எல்லாம் நம் முன்னோர்களின் சிறந்த உழைப்பைப் பறைசாற்றுகின்றன. அவை நமக்குக் கிடைத்த பெருமையென்று பாடி மகிழ்வோம்.<br>3. பத்துமலைக்குத் திரண்டு வருகின்ற மக்கள் கூட்டமெல்லாம் அங்குக் காணப்படும். உயர்வான கலை நுட்பத்தைக் கண்டு மனம் மயங்குகின்றனர். அப்பெருமையை எண்ணி நாம் கும்மி கொட்டுவோம்.<br>4. ஆழ்கடலில் மூழ்கி முத்தெடுத்துச் சிறப்பாக வாழ்ந்த நம் முன்னோர்களின் வாழ்க்கை. நமக்கு நல்லதொரு வழிகாட்டி. | | முன்னுரை : 2<br>கருத்துகள் : 15<br>முடிவுரை : 2<br>மொழி : 1<br><br>(20 புள்ளி) |

| | | | |
|---|---|---|---|
| | உலகில் சிறந்து விளங்கியவர்கள் முத்தமிழர்கள் என்று கும்மி கொட்டி மகிழ்வோம்.<br>5. முழு நிலவில் ஏற்பட்ட கறையைப்போல மலேசியத் தமிழர்களின் வாழ்விலும் களங்கம் இருப்பதை அறியவேண்டும். திறந்த வெளியிலுள்ள பட்டுப்போன மரம்போல் தமிழர்களின் வாழ்வு சீர்குலைந்து போனதற்கான காரணத்தையும் அறியவேண்டும்.<br>6. எதிர்காலம் நமது சமுதாயத்திற்கு உரியது என்ற நம்பிக்கையோடு தமிழ்ப் பெண்களே நீங்கள் கும்மி கொட்டுங்கள். நாம் வீணாகப் பொழுதைக் கழிக்காமல், வாய்ப்புக்குக் காத்திராமல் எழுச்சியோடு செயல்படுவோம்.<br><br>முடிவுரை :<br>இக்கவிதை சமுதாயத்தின் நன்மைக்கு வழிகாட்டும் நோக்கில் படைக்கப்பட்டுள்ளது.<br>*(ஏற்புடைய முடிவுரை)* | | |
| 11. | i) இக்கவிதையில் காணப்படும் மூன்று நயங்கள் :<br><br>1.ஓசைநயம்<br><br>அ. மோனை: கவிதையின் தொடக்கச் சீர்களில், முதல் எழுத்து ஓசையால் ஒன்றிவருவது.<br>• **கோ**ளம் –**கோ**லம்<br>• **நா**ளும் -**நா**டிப்<br>• **ஊ**ற்றுப் –**ஊ**றத்<br>• **கா**ற்றுக் –**க**த்தும்<br>• **நா**ளும் –**நா**ளில்<br>• **கா**லப் –**கா**ணும்<br>• **ஒ**ன்றிச் –**உ**ச்சிக்<br><br>ஆ. எதுகை: கவிதையின் தொடக்கச் சீர்களின் முதலெழுத்தின் அளவும் இரண்டாம் எழுத்தின் ஓசையும் ஒன்றிவருவது.<br>• கா**ல**ம் கோ –**ள**ம்<br>• நா**ளு**ம் வா –**ழு**ம்<br>• நே**ற்**றுத் ஊ –**ற்**றுப்<br>• பா**ழு**ம் மீ –**ளு**ம்<br>• ஒ**ன்**றிச் ஒ –**ன்**றி<br>• எ**ன்**றும் எ –**ன்**றிங்<br><br>இ. சந்தம்: சொற்களிலுள்ள ஒலிக்கூறுகள் – ஓசை பகுதிகள் ஒரே தாள அளவுக்குப் பொருந்த அமைவது.<br>• காலம் கோளம் –<br>• நாளும் வாழும் –<br>• பெருகுதடா குவியுதடா –<br><br>ஈ. இயைபு: சீர்களின் இறுதி அசை ஒன்றிவருவது. கவிதை அடியில் இறுதியிலிருந்து இரண்டாம் எழுத்து ஒன்றி வருவதாகும்.<br>• பறக்கு**தடா** – பறந்தி**டடா**<br>• பயனறி**யாய்** – மறந்**தாய்**<br>• திருந்திய**வர்** – பழகிய**வர்**<br>• குயர்வ**தடா**செயல்தொ - **டடா** | | 10 |

| | | | |
|---|---|---|---|
| | 2. அணிநயம்<br><br>அ. திரிபு அணி : கவிதையில் இடம்பெறும் சீர்களில் முதலெழுத்து<br>மட்டும் வேறுபட்டிருக்க மற்றவை எல்லாம் அதே<br>எழுத்துகளாக ஒன்றி வருவது ஆகும்.<br>எ.கா : **நே**ற்று – **ஊ**ற்று – **கா**ற்று<br>**நா**ளும் – **மீ**ளும்<br>மேற்காணும் நாளும் எனும் சொல்லில் 'ந'வும் மீளும் எனும் சொல்லில் 'மீ'யும் வேறுபட்டிருக்க மற்றவை எல்லாம் ஒன்றி வந்துள்ளன.<br><br>ஆ. உவமை அணி : ஒரு பொருளை அல்லது செயலை அதைப் போன்ற<br>தன்மையுடைய இன்னொரு பொருள் அல்லது<br>செயலோடு ஒப்பிட்டுக் கூறுவது ஆகும்.<br>எ.கா : "ஊற்றுப் பெருக்கெனவே"<br><br>இ. தன்மை நவிற்சி அணி : இயல்பான வருணனை<br><br>எ.கா : "நாளும் முழங்குகின்றாய் – அந்த<br>நாளில் இருந்ததெல்லாம்!<br><br>*(ஏதேனும் 3)* | | |
| | ii) இக்கவிதையின் படிப்பினை :<br>1. தமிழர்கள் தங்களிடையே உள்ள வேற்றுமைகளைக் களைந்து ஒற்றுமையை வளர்க்க வேண்டும்.**(படிப்பினை)** தமிழர்கள் இனம், மதம், மொழி, பொருளாதார நிலை போன்ற பிரிவினைகளைக் களைந்து ஒற்றுமையாகச் செயல்பட்டால் வாழ்வில் சிறந்த நிலையை அடையலாம்.**(விளக்கம்)** எனவே, தமிழர்கள் வாழ்வில் முன்னேற பிரிவினைகளைக் களைந்து ஒருவருக்கொருவர் ஒற்றுமையாக செயல்படுதல் வேண்டும்.**(வலியுறுத்தல்)**<br><br>****பிற விடைகளும் மேற்காணும் வாகையில் 'படிப்பினை, விளக்கம், வலியுறுத்தல்' என மூன்று கூறுகளை உள்ளடக்கி இருத்தல் அவசியம்.***<br><br>2. உலக முன்னேற்றத்திற்கு ஏற்பத் தமிழர்கள் தங்கள் வாழ்வைச் சீரமைத்தால்தான் வாழ்க்கையில் முன்னேற முடியும்.<br>3. பலவகையான ஆற்றல்களையும் திறன்களையும் உடைய தமிழர்கள் அதனை முழுமையாகப் பயன்படுத்தி, தங்கள் வாழ்க்கையில் முன்னேற முற்படுதல் அவசியம்.<br>4. பழம்பெருமைகளைப் பேசுவதை விட்டுவிட்டுத் தற்காலச் சூழலுக்கேற்ப செயலில் ஈடுபட்டு முன்னேறுதல் முக்கியம்.<br><br>*(ஏதேனும் 3)* | | 10 |
| 12. | அறிவுடைநம்பி (பாண்டிய நாட்டு மன்னன்) : | | |

முன்னுரை :-

- நாடகம் :பிசிராந்தையார்
- ஆசிரியர் :புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்
- கருப்பொருள் :அறமும் உயர்நட்பும்
- கேள்வியையொட்டிய வாக்கியம் :அறிவுடைநம்பி தனது சிறந்த பண்புகளால் மக்களின் மனத்தில் நீங்கா இடத்தைப் பெற்றுள்ளான்.

கருத்துகள் :

**1. மக்கள் நலனில் அன்பும் அக்கறையும் உடையவர்.**

- காற்று, மழையால் துன்பப்படும் மக்களைக் காணச் செல்லும் போது அரசி போக வேண்டாம் என தடுத்தும் தான் மக்களின் நலம் காண செல்கிறார்.
- நாட்டில் ஏழைகளும் தீயவர்களும் இருக்கக் கூடாது எனப் பாடுபடுபவர்.

**2. ஆராய்ந்தறியும் குணம் கொண்டவர்.**

- குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று ஆணை இடுகின்றார்.
- மான்வளவன் கொலைக் குற்றத்தை ஏற்றுக் கொண்ட பிறகு தண்டனை வழங்காமல் மேலும் ஆராயச் சொல்கிறார்.
- தூயனும் கொலைக் குற்றத்தை ஒப்புக் கொண்ட போதும் இருவரையும் தண்டிக்காமல் மேலும் தீர விசாரிக்கின்றார்.

**3. பாராட்டும் குணம் உடையவர்**

- பாண்டிய நாட்டில் நல்லவர்கள் உருவாகப் பெரும் உதவியாக இருந்தவர்கள் புலவர்கள் எனப் பாராட்டுகிறார்.
- அரசனுடைய அறிவிற்கும் ஆற்றலுக்கும் ஊட்டம் அளிப்பவர்கள் புலவர்கள் எனப் பாராட்டுகிறார்.
- பிசிராந்தையாரை நல்லாசிரியரின் திருவடியில் இருக்கிறேன் எனப் புகழ்கிறார்.

**4. கடமை தவறாதவர்**

- புயல் மழையால் மக்கள் அடைந்த துன்பத்தைப் பார்வையிடுவதற்குப் பிசிராந்தையாருடனும் மேற்படியாருடனும் செல்கின்றார்.

**5. நீதியை நிலைநாட்டுபவர்.**

- தான் உயிர் வாழ வேண்டுமெனில் குற்றவாளியைக் கண்டுபிடிக்க வேண்டும் என்று ஆணையிடுகின்றார்.
- பச்சைக்கிளி கொலை பற்றி விரைவில் தகவல் கிடைக்காவிடில் உயிர்விடுவதாக அறிவிக்கிறார்.

**6. மன்னிக்கும் குணம் உடையவர்.**

- குற்றத்தை உணர்ந்த மான்வளவன், தூயன் ஆகிய இருவரையும் மன்னிக்கின்றார்.
- நல்ல உள்ளம் படைத்த அவர்களைப் பாண்டிய நாடு இழக்க வேண்டாம் என்று எண்ணுகிறார்.

**7. பழிக்கு அஞ்சுபவர்.**

- பச்சைக்கிளி கொலையுண்ட சதி அறிந்து மனம் பதறுகிறார். மக்கள் தன் ஆட்சியைப் பற்றிக் குறை கூறுவார்கள் என்று அஞ்சி பதைபதைக்கிறார்.

முன்னுரை : 2
கருத்துகள் : 15
முடிவுரை : 2
மொழி : 1

(20 புள்ளி)

| | | | |
|---|---|---|---|
| | **8. இயற்கையை இரசிப்பவர்.**<br>• தூங்காமணி விளக்கத்தைத் தூக்கிக் கொண்டு ஓடிய கள்ளனைப்போல் வெள்ளிய நிலாவை அள்ளிக் கொண்டு போய் மறைத்தது கருமுகில் என்று பாண்டிய மன்னன் வருணனையோடு கூறுகிறான்.<br><br>*(ஏதேனும் 5)*<br>முடிவுரை :<br>உயரிய பண்புகளைக் கொண்ட அறிவுடைநம்பி மக்களின் மனத்தில் நீங்காத இடத்தைப் பெறுகிறான்.<br>*(ஏற்புடைய முடிவுரை)* | | |
| 13. | கதைப்பின்னல்:<br>முன்னுரை :-<br>• நாடகம் :பிசிராந்தையார்<br>• ஆசிரியர் :புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்<br>• கருப்பொருள் :அறமும் உயர்நட்பும்<br>• கேள்வியையொட்டிய வாக்கியம் வாசகர்களை ஈர்க்கும் : .வகையில் கதைப்பின்னல் அமைதல்<br><br>கருத்துகள் :<br><br>**தொடக்கம்**<br>பிசிராந்தையார், சோழமன்னனின் நட்பின் மேன்மை கருதி தன் பேரனுக்குக் கோப்பெருஞ்சோழன் எனப் பெயர் வைத்தது குறித்துப் புதுப்புலவரும் புலவர் 'க'வும் சிறப்பித்துப் பேசுதல்.<br>**வளர்ச்சி**<br>• அறிவுடைநம்பி காற்று, மழையால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் காக்கச் செல்லுதல்.<br>• பச்சைக்கிளியின் மரணம் குறித்த விசாரணை நடத்துதல்<br><br>**சிக்கல்**<br>இளங்கோச் சோழனின் பதவி ஆசை; ஆட்சியைப் பிடிக்கச் சதித்திட்டம் தீட்டுதல்.<br><br>**உச்சம்**<br>கோப்பெருஞ்சோழனின் புதல்வர்கள் தந்தைக்கு எதிராகப் போருக்குத் தயாராகுதல்.<br><br>**சிக்கல் அவிழ்ப்பு**<br>• ஆட்சியைக் கைப்பற்றும் சதித்திட்டங்கள் முறியடிக்கப்படுதல்.<br>• புல்லாற்றூர் எயிற்றியனாரின் அறவுரையால் சோழன் போரைக் கைவிடுதல்.<br><br>**முடிவு**<br>• பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழன், பொத்தியார் ஆகியோர் வடக்கிருந்து உயிர் துறத்தல்.<br>• இளங்கோச் சோழனும் செங்கோச் சோழனும் தம் தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்டல். | | முன்னுரை : 2<br>கருத்துகள் : 15<br>முடிவுரை : 2<br>மொழி : 1<br><br>(20 புள்ளி) |

| | | | |
|---|---|---|---|
| | • உலகம் அவர்களுடைய நட்பைப் புகழ்ந்து பாடுதல்.<br><br>முடிவுரை :<br>கதைப்பின்னல் கதையோட்டத்திற்கு வலுசேர்க்கும் வகையில் அமைந்துள்ளது.<br>*(ஏற்புடைய முடிவுரை)* | | |
| 14 i) | சுடர்விழியின் பண்புநலன்கள் :<br><br>**1. பெரியோரை மதிப்பவள்**<br>• சித்தி கடுமையாக நடந்து கொண்டாலும் அவளுக்கு அடங்கி நடக்க வேண்டுமெனக் குழந்தைவேலின் தாய் கூறியதைக் கேட்டு நடக்கிறாள்.<br>• குழந்தைவேலின் தாய் கொடுக்கும் பூவைச் சூடிக்கொண்டால் சித்திக்குக் கோபம் வரும் என அதை நல்ல முறையில் மறுக்கிறாள்.<br><br>**2. பிறருக்கு அடங்கி நடப்பவள்**<br>• சுடர்விழி சித்திக்கு அடங்கி இருப்பதைத் தானப்பன், குழந்தைவேலின் தாயிடம் கூறுகிறான்.<br>• தன் கணவரின் விருப்பப்படி அடங்கி நடப்பதைக் குழந்தைவேலின் தாயிடம் கூறுகிறாள்.<br><br>**3. கணவரின் கொள்கைகளைப் போற்றுபவள்**<br>• பூக்களைப் பறிக்கக் கூடாது என்ற தன் கணவரின் கொள்கைக்கு ஏற்ப குழந்தைவேலின் தாய் பூச்சூடுவதை ஏற்றுக்கொள்ள மறுக்கிறாள்.<br>• கணவரின் விருப்பமே தன்னுடைய விருப்பம் எனக் குழந்தைவேலின் தாயிடம் கூறுகிறாள்.<br><br>**4. எளிய வாழ்க்கையை விரும்புபவள்**<br>• சுடர்விழி தான் எளிமையாக வாழ விரும்புவதாகக் கூறியதைப் பூங்கொடி குழந்தைவேலிடம் கூறுகிறாள்.<br>• பட்டுச்சேலை அணியாமல் பருத்தித் துணி அணிந்து தானப்பனின் திருமணத்தில் கலந்து கொள்கிறாள்.<br><br>**5. அனைவருடனும் அன்பாகப் பழகுபவள்**<br>• குழந்தைவேலின் வீட்டிற்கு வந்த சுடர்விழி பூங்கொடியுடன் அறிமுகப்படுத்திக் கொண்டு பழகுகிறாள்.<br>• தன்னிடமும் தன் தாயிடமும் கலகலப்பாகப் பேசிப் பழகும் சுடர்விழியைக் கண்டு குழந்தைவேல் வியக்கிறான்.<br><br>**6. குடும்பப்பற்று மிக்கவள்**<br>• தானப்பன் சித்தியின் மீது வழக்குப் போடக்கூடாது என்பதற்காக கணவர் முருகய்யாவை அவனிடம் பேசச் சொல்லி அனுப்புகிறாள்.<br>• ஆடம்பரச் செலவு செய்யும் தானப்பனின் நடவடிக்கைகளை நினைத்துக் கவலைப்படுகிறாள். | | 10 |

| | | | |
|---|---|---|---|
| 14 ii) | • தானப்பன் வாழ்க்கையில் முன்னேறிவிட்டதாகக் குழந்தைவேல் கூறினாலும் மனைவியைவிட்டுப் பிரிந்து வாழும் தன் அண்ணனின் நிலையை எண்ணிக் கலங்குகிறாள்.<br><br>**7. தன்மானம் மிக்கவள்**<br>• தானப்பனின் திருமணத்தில் கலந்து கொண்ட பொழுது பட்டுச்சேலைக்குப் பதிலாக பருத்தித் துணி அணிந்திருக்கிறாள். வைரநகை இல்லாத கோலத்தையும் பார்த்து அவனுடைய மாமனார் வீட்டார் அவளை மதிக்கவில்லை. இதனால், அவள் திருமண விருந்தில் கலந்து கொள்ளாமல் வெளியேறுகிறாள்.<br><br>*(ஏதேனும் 3)* | | 10 |
| | பின்னணி :-<br>கருத்துகள்:<br>1. காலப்பின்னணி<br>• காலை நேரம்<br>• மாலை நேரம்<br>• இரவு நேரம்<br>• ஆடி மாதம்<br>• ஆனி மாதம்<br>• வெயில் காலம்<br><br>2. இடப்பின்னணி<br>• சோழசிங்கபுரம் (குழந்தைவேலின் பாட்டி ஊர்)<br>• தானப்பனின் வீடு<br>• குழந்தைவேலின் வீடு<br>• சென்னை<br>• திருவலம் (தானப்பன் சித்தியின் சொந்த ஊர்)<br>• ஆம்பூர் இரயில் நிலையம்<br><br>3. சமுதாயப் பின்னணி<br>அ. பொருளியல் அடிப்படை<br>• மேல்மட்ட வர்க்கம் (பூங்கொடியின் & கனகத்தின் குடும்பம்)<br>• நடுத்தர வர்க்கம் (குழந்தைவேல் & தானப்பன் குடும்பம்)<br>• கீழ்த்தட்டு வர்க்கம் (கிராமத்து மக்கள், தானப்பன் வீட்டுச்சமையலாள், வேலைக்காரர்கள், தோட்டக்காரர்)<br><br>ஆ. சமூகவியல் அடிப்படை<br>• நட்பைப் போற்றும் சமுதாயம் (குழந்தைவேல், தானப்பன்)<br>• எளிய வாழ்க்கை வாழும் சமுதாயம் (முருகய்யா, சுடர்விழி)<br>• ஆடம்பர வாழ்க்கை வாழ விரும்பும் சமுதாயம் (தானப்பன், கனகம், பூங்கொடி)<br>• இரக்க மனப்பான்மை கொண்ட சமுதாயம் (குழந்தைவேலின் தாய்தந்தையர்)<br><br>*(ஏதேனும் 3)*<br>***ஒவ்வொரு கருத்துக்கும் சம்பவம் கொடுக்கப்பட வேண்டும்.** | | |

| | | | |
|---|---|---|---|
| 15 i) | பூங்கொடியின் பண்புநலன்கள் :<br>1. **ஆடம்பரத்தை விரும்புபவள்.**<br>• சுடர்விழி வைர நகையும் பட்டுச் சேலையும் இல்லாமல், வேலைக்காரப் பெண்போல் இருப்பது தனக்குப் பிடிக்கவில்லை எனவும் ஆடம்பரமாக வாழ்ந்தால்தான் மதிப்புக் கிட்டும் எனவும் குழந்தைவேலிடம் கூறுகிறாள்.<br>• சுடர்விழி பட்டுச்சேலை அணியாமல் தன்னுடன் சினிமாவுக்கு வந்ததை<br>மதிப்புக் குறைவாகக் கருதுகிறாள்.<br><br>2. **இசையில் ஆர்வம் கொண்டவள்.**<br>• தாய் வீட்டிலிருந்து கொண்டு வந்த வீணையை உயிர்போல் போற்றிப்<br>பாதுகாக்கிறாள்.<br>• காலையில் எழுந்ததும் பூபாள இராகத்தில் இன்னிசை பாடிக் கொண்டிருப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறாள்; குழந்தைவேல்<br>அதைப் பெரிதும் இரசித்துக் கேட்கிறான்.<br>• தானே விரும்பி சில புதிய இராகங்களில் வீணை மீட்டி குழந்தைவேலுக்குப் பாடிக் காட்டுகிறாள்.<br><br>3. **பிறரின் அன்பைப் புரிந்து கொள்ளாதவள்.**<br>• மகளைப் போன்று அன்பாகக் கவனிக்கும் மாமனார் மாமியாருடன் கூட்டுக்குடும்பமாக வாழ விரும்பாமல் தனிக்குடித்தனம் செல்ல விரும்புகிறாள்.<br>• மனைவிக்கு ஒத்த உரிமையைத் தந்து அன்பு செலுத்துகிறான் குழந்தைவேல். ஆனால், அவள் அன்பைவிட வேறு எதை எதையோ மதிப்பதை நினைத்துக் குழந்தைவேல் கவலை கொள்கிறான்.<br>• திருமணமாகி ஊருக்கு வந்த தானப்பனுக்கு விருந்து வைக்க குழந்தைவேல் விரும்புகிறான். இதை அவளிடம் கூறிய பொழுது அவள் முகத்தில் புறக்கணிப்பையும் வெறுப்பையும் காட்டி, பேசாமல் இருக்கிறாள்.<br><br>**4. கடமையில் பொறுப்பில்லாதவள்.**<br>• மாமியார், வீட்டில் எல்லா வேலைகளையும் செய்ய இவள் ஓய்வெடுக்கிறாள்.<br>• மாமியார் வீட்டில் இல்லாத நிலையில், கணவருக்கும் மாமனாருக்கும் உணவு தயாரித்துக் கொடுக்கும் பொறுப்பை மறந்து தாய்வீட்டிற்குச் சென்றுவிடுகிறாள். | | : -<br><br>10<br><br><br><br><br><br><br>10 |
| 15 ii) | *(ஏதேனும் 3)*<br><br>மொழிநடைகள் :<br>1. **பேச்சுவழக்கு:** மக்கள் பயன்படுத்தும் இலக்கணமற்றதும் தூய்மையற்றதுமான பேச்சு<br>• எ.கா: "அய்யோ! தெய்வம் சாட்சியாய்ச் சொல்கிறேனுங்க; நான் இந்த வீட்டில் எத்தனை வருசமாய் இருக்கிறேன்! ஒரு கொடுமையும் செய்ததில்லைங்க." | | |

| | | | |
|---|---|---|---|
| | 2. **வருணனை:** ஒன்றின் தன்மையையும் இயல்பையும் சுவைபட அழகிய மொழியில் வெளிப்படுத்துதல்.<br>• எ.கா: அது வானமெல்லாம் புகை பரப்பிக் கொண்டு வந்து“ .நின்றது”<br><br>3. **மொழியணிகள்:** பழமொழி, மரபுதொடர், இணைமொழி, உவமைத்தொடர்<br>• எதன் கையே தனக்கு உதவி – பழமொழி :கா., கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும்<br>• இரட்டைக்கிளவி சலசல –, வளவள<br>• உவமைத்தொடர் பொன் பூத்த கொடி போல் –, காட்டுத்தீ போன்றது, மூலைவீட்டுக் குத்துவிளக்குப் போன்றது<br><br>4. **வசைமொழி:** ஒருவரை திட்டுவதற்காகப் பயன்படுத்தப்படும் மொழி<br>• எ.கா:யாருடா நீ“ ? கூட்டாளி வந்து விட்டாயா? வேலை இல்லையா வீட்டில்? நாளையிலிருந்து இந்தப் பக்கம் தலை காட்டாதே.சோம்பேறிக் கழுதைகள் .”<br><br>*(ஏதேனும் 3)* | | |

## தொகுதி 2

[எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்]

**பாகம் – ஒன்று**

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**பிரிவு ஒன்று : கவிதை**

தென்றல் விளையாடும் சோலை வனமெங்கள்
தேசமென்றே ஒன்றாய்க் கூடுங்கடி
குன்றினில் நின்றாடுங் கோல மயிலெனக்
கொட்டுங்கடி கும்மி கொட்டுங்கடி

தோட்டப் புறத்தினில் தொட்ட இடத்தினில்
நொய்வமும் செம்பனை ஈயமெலாம்
**பாட்டன் வியர்வை** நீர் பட்ட சிறப்பென
பாடுங்கடி பாடி ஆடுங்கடி

\- **கவிஞர் காசிதாசன்**

1. இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **பாடுபொருள்** யாது? (2 *புள்ளி*)

2. இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **அணிநயங்கள்** இரண்டனை எழுதுக. (4 *புள்ளி*)

3 i) “**பாட்டன் வியர்வை”** என்பதன் பொருள் யாது? (2 *புள்ளி*)

தோட்டப் புறத்தினில் தொட்ட இடத்தினில்
நொய்வமும் செம்பனை ஈயமெலாம்
**பாட்டன் வியர்வை நீர் பட்ட சிறப்பென**
பாடுங்கடி பாடி ஆடுங்கடி

ii) இவ்வடிகளில் **‘பாட்டன் வியர்வை நீர் பட்ட சிறப்பென’** கவிஞர் கூறக் காரணம் என்ன? (2 *புள்ளி*)

[10 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

4. பிசிராந்தையார் நாடக ஆசிரியரின் **கொள்கையைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

5. i) பிசிராந்தையார் நாடகத்தில் இடம்பெறும் **அரசர்கள்** இருவரைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

   ii) பிசிராந்தையார் நாடகத்தின் **மொழிநடை** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

6 கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக .

| | |
|---|---|
| மான் வளவன் | :அந்தத் தீயவன் செய்த வஞ்சத்தால் – தெரியாமல் மறைத்தேனோ அழகோவியத்தை |
| பிசிராந்தையார் | :கழிவிரக்கம் வேண்டாம்.இதைக் கேள். இந்தப் பாவையை, இந்தப் பச்சைக்கிளியை - நீ எந்த நிலையில் எப்படிக் குத்தினாய்? அதுபோல இப்போது நீ செய்து காட்ட வேண்டும். |
| மான்வளவன் | :ஐயோ! ஐயோ! அவையத்தார்களே! அரசர் பெருமானே! நான் அவ்வாறு செய்ய மாட்டேன். என் மனைவியைத் துன்புறுத்தச் சொல்லாதீர்கள். |
| அரசன் | :அவள் உரு அமைந்த மரக்கட்டையைத் துன்புறுத்தவும் ஒப்பாத நீ, உயிரோவியத்தையே படுகொலை செய்தாயே அப்பா! |
| மான்வளவன் | :கொடியவன் ! நான் தொலைய வேண்டும். என் போன்ற கொடியவர்களைப் பாண்டி நாடு **சுமக்கப் பொறாது**. நான் உயிரோடிருந்தால் என் மனத்தொல்லை ஆறாது! |
| அரசன் | :அப்படியானால், அவளைக் கொலை செய்தது போல் செய்து காட்டமாட்டாயா? |
| மான்வளவன் | :நினைத்தாலே நெஞ்சு வெடித்துவிடும் போலிருக்கின்றதே! |

(காட்சி 15, பக்கம் 75)
(உமா பதிப்பகம், 2020)

i) இச்சூழலில் வெளிப்படும் மான்வளவனின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

ii) இச்சூழலில் காணப்படும் **சமுதாயப்பின்னணி** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

iii) **"சுமக்கப் பொறாது"** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 *புள்ளி*)

iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 *புள்ளி*)

[15 *புள்ளி* ]

## பிரிவு மூன்று : நாவல்

7. வாடா மலர் நாவலாசிரியர் பெற்ற **விருதினைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

8. i) வாடா மலர் நாவலில் குழந்தைவேலின் **கல்லூரி நண்பர்கள்** இருவரைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

   ii) வாடா மலர் நாவலின் **சிக்கல்** யாது**?** (2 *புள்ளி*)

9. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> "சுடர்விழியிடம் சித்தி கொஞ்சம் அன்பாக இருக்கிறாள் அல்லவா?" என்று கேட்டேன்.
>
> "சித்திக்கு அன்பு இல்லை. ஆனால், சுடர்விழி நல்ல பெண். சித்தியின் **மனமும் கரையும் படியாக** நடந்து கொள்கிறாள். என்ன சொன்னாலும் கேட்டுக் கொlள்கிறாள். எப்போதும் பணிவாக நடக்கிறாள். அதனால்தான் சித்தியாலும் ஒன்றும் செய்ய முடியவில்லை," என்றான்.
>
> "நீயும் அப்படி நடந்து தொலைக்கலாமே?" என்றேன்.
>
> "முடிந்த வரைக்கும் நடக்கிறேன். சில சமயங்களில் முடியவில்லை என வெறுப்பைக் காட்டிவிடுகிறேன். அதற்காகத் தண்டனை கிடைக்கிறது. சுடர்விழி எப்படியோ ஒட்டிக் கொள்கிறாள். இன்னும் எவ்வளவு காலம் என்னால் இருக்க முடியும் என்று தெரியவில்லை," என்று கண் கலங்கினான்.
>
> " ஏன் கவலைப்படுகிறாய்? நாளடைவில் எல்லாம் சரியாய்ப் போகும்".
>
> (அத்தியாயம் 8, பக்கம் 62&63)
> (மல்டி எடுகெஷனல் புக் எண்டபிரஸ், 2020)

i) இச்சூழலில் வெளிப்படும் தானப்பனின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ii) இச்சூழலில் காணும் **மொழிநடை** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

iii) **"மனமும் கரையும் படியாக"** என்பதன் சூழலுக்கு ஏற்ற பொருள் யாது? (2 புள்ளி)

iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]

## பாகம் – இரண்டு
## பிரிவு ஒன்று : கவிதை

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருதும் ஒரு கட்டுரையாக மூன்று கட்டுரைகள் எழுதுக.

### மடமை மூடிய இருட்டு

குறுக்கு வழியில் வாழ்வு தேடிடும்
குருட்டு உலகமடா – இது
கொள்ளையடிப்பதில் வல்லமை காட்டும்
திருட்டு உலகமடா – தம்பி
தெரிந்து நடந்து கொள்ளடா – இதயம்
திருந்த மருந்து சொல்லடா

இருக்கும் அறிவை மடமை மூடிய
இருட்டு உலகமடா – வாழ்வில்
எந்த நேரமும் சண்டை ஓயாத
முரட்டு உலகமடா – தம்பி
தெரிந்து நடந்து கொள்ளடா – இதயம்
திருந்த மருந்து சொல்லடா

விளையும் பயிரை வளரும் கொடியை
வேருடன் அறுத்து விலையாடும் – மனம்
வெந்திடும் தோட்டக்காரனிடம்
மிரட்டல் வார்த்தைகளாடும் – பல
வரட்டுக் கீதமும் பாடும் – விதவிதமான
பொய்களை வைத்துப்
புரட்டும் உலகமடா – தம்பி
தெரிந்து நடந்து கொள்ளடா – இதயம்
திருந்த மருந்து சொல்லடா

அன்பு படர்ந்த கொம்பினிலே ஒரு
அகந்தைக் குரங்கு தாவும் – அதன்
அழகைக் குலைக்க மேவும்
கொம்பு ஒடிந்த கொடியும் குலைந்து
குரங்கும் விழுந்து சாகும் – சிலர்
குணமும் இதுபோல் குறுகிப் போகும்
கிறுக்கு உலகமடா – தம்பி
தெரிந்து நடந்து கொள்ளடா – இதயம்
திருந்த மருந்து சொல்லடா (குறுக்கு)

- **கவிஞர் பட்டுக்கோட்டைக் கல்யாணசுந்தரம்**

10. மேற்காணும் கவிதையின் **கருத்துகளைத் தொகுத்து எழுதுக**. [20 புள்ளி]

**அல்லது**

11. கீழ்க்காணும் கவிதையை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**சஞ்சிக்கூலி**

சஞ்சிக் கூலியில் வந்தேன் என்று
தலைமுறையாகச் சொல்லிச் சொல்லி
வஞ்சித் தவனை வாழ்த்தி வாழ்த்தி
வாழ்ந்தாருக்கே மாரடித்தாய் – உன்
வாணா ளெல்லாம் போரடித்தாய்!

சஞ்சிக் கூலியில் வந்தாலென்ன?
சம்பாதித்ததுவும் கொஞ்சமா என்ன?
கஞ்சிக் கின்றும் கையை ஏந்திக்
கடைவா சலிலே நிற்கின்றாய் – உன்
கட்டுடலைத்தான் விற்கின்றாய்!

காலை எழுந்த கடன்முடி யாமல்
கையில் வாளிக் கனம்குறையாமல்
பாலை நிரப்பிக் கொடுத்ததை யன்றிப்
பலனை முழுதும் கண்டாயா? – உன்
பங்கை முழுதாய்க் கொண்டாயா?

தேடிய பணத்தில் ஓடிய செலவைத்
திடமாய்க் கொஞ்சம் சேமித்திருந்தால்
வாடிய நாளே வாய்த்திருக் காது
மற்றவர் போல நின்றிருப்பாய்! – வெறும்
மழுங்க னாகவா இன்றிருப்பாய்?

**-கவிஞர் காரைக்கிழார்**

i) இக்கவிதையில் காணப்படும் **ஓசைநயங்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

ii) இக்கவிதை உமக்குள் ஏற்படுத்திய **தாக்கங்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

[20 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

12. i) பிசிராந்தையார் நாடகத்தில் தூயோனின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

ii) பிசிராந்தையார் நாடகத்தில் **இடப்பின்னணிகள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

**அல்லது**

13. i) பிசிராந்தையார் நாடகத்தில் மான்வளவனின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

ii) பிசிராந்தையார் நாடகத்தின் **உத்திமுறைகள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

## பிரிவு மூன்று : நாவல்

14. வாடா மலர் நாவலில் தானப்பனின் **பண்புநலன்களை** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

**அல்லது**

15. வாடா மலர் நாவலின் **படிப்பினைகளை** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

**முற்றுப் பெற்றது**
**TAMAT**

**விடைப்பட்டி**

**தொகுதி 2**

| எண் | விடை | புள்ளி |
|---|---|---|
| 1 | வாழ்க்கை | 2 |
| 2 | • உவமை அணி- கோல மயிலென<br>• உருவக அணி சோலை வனம்- முல்லை மலர்களே<br>• பின்வருநிலை அணி – கொட்டுங்கடி-கொட்டுங்கடி<br>• திரிபு அணி ஆடுங்கடி-பாடுங்கடி –<br>• தற்குறிப்பேற்ற அணி தென்றல் விளையாடும் சோலை –<br>• உயர்வு நவிற்சி அணி தொட்ட இடத்தினில் நொய்வமும் – செம்பனை ஈயமெல்லாம் | 4 |
| 3 i) | நம் முன்னோர்களின் உழைப்பு | 2 |
| 3 ii) | நமது முன்னோர் கடுமையாக உழைத்துக் காட்டை அழித்துச் செழிப்பாக்கினர். | 2 |
| 4 | மொழிப்பற்று | 2 |
| 5 i) | கோப்பெருஞ்சோழன் | 2 |
| 5 ii) | இலக்கிய நடை/ பேச்சு வழக்கு/ வர்ணனை/ வசைமொழி/ உருவகம்/ மொழியணிகள் | 2 |
| 6 i) | • மனைவி மீது அன்பு கொண்டவன்<br>• சந்தேகக் குணம் கொண்டவன்<br>• செய்த தவற்றுக்காக வருந்துபவன்<br>• குற்ற உணர்ச்சிக்கு ஆட்பட்டவன்<br>(ஏதேனும் 2) | 2 |
| 6 ii) | ஆள்வோர் சமுதாயம்/ ஆளப்படுவோர் சமுதாயம் | 2 |
| 6 iii) | பச்சைக்கிளியைப் படுகொலை செய்த மான்வளவன் பாண்டிய நாட்டில் வாழ தகுதியற்றவன். | 2 |
| 6 iv) | பச்சைக்கிளியின் படுகொலை சம்பவம் தொடர்பாக அரண்மனையில் விசாரணை நடத்தப்படுகிறது. மான்வளவன், பொன்னன் ஆகியோர் வாக்குமூலம் கொடுக்க அழைக்கப்படுகிறார்கள்.இறந்தவள் பச்சைக்கிளிதான் என இருவரும் அடையாளம் காட்டுகின்றனர். | 3 |
| 7 | சாகித்திய அகாடமி விருது | 2 |
| 8 (i) | கருணாகரன், பழனிச்சாமி | 2 |

| | | |
|---|---|---|
| 8 ii) | மனைவியின் விருப்பத்திற்கேற்ப குழந்தைவேல் தனிக்குடித்தனம் செல்லுதல். தானப்பனுக்கும் மனைவி கனகத்திற்குமிடையே மனக்கசப்பு ஏற்படுதல்; மணவிலக்குப் பெற்று இருவரும் பிரிதல். | 2 |
| 9 i) | சிக்கலைச் சமாளிக்கத் தெரியாதவன் , தன்மான உணர்வு கொண்டவன் | 2 |
| 9 ii) | பேச்சு வழக்கு | 2 |
| 9 iii) | கொடுமைக்காரியான சித்தியும் சுடர்விழியின் பணிவான நடவடிக்கைகளினால் அவளிடம் மென்மையாக நடந்து கொள்கிறாள். | 2 |
| 9 iv) | சுடர்விழி கண்ணாடிக் குவளையை உடைத்து விட்டாள். அதனால் வீட்டிற்கு வெளியே விரட்டப்பட்ட சுடர்விழி சாப்பிடாமல் அமர்ந்திருக்கிறாள். அதைப்பற்றி தானப்பனிடம் குழந்தை வேல் விசாரிக்கிறான். | 3 |
| 10 | முன்னுரை :-<br><br>கவிதைத் தலைப்பு : மடமை மூடிய இருட்டு<br>கவிஞர் : பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்<br>பாடுபொருள் : அறியாமை<br>மையக்கரு : சமுதாயத்தில் சிலரின் பண்பற்ற போக்கு<br>கேள்வியையொட்டிய வாக்கியம் : சமுதாயத்தில் உள்ள பண்பற்ற செயல்களை முன்வைத்து எவ்வாறு நல்வழியில் வாழ வேண்டும் என்ற கருத்தினைக் கவிஞர் முன்வைக்கிறார்.<br><br>**தெரிநிலைக் கருத்துகள் :**<br><br>1. இன்றைய காலத்தில் உலக மக்கள் முறையற்ற வழிகளில் வாழ்க்கையை அமைத்துக் கொண்டு கண்மூடித்தனமாக வாழ்கின்றனர்.<br>2. பிறருடைய உழைப்பையும் செல்வங்களையும் கொள்ளையடித்து வாழும் போக்கு மக்களிடத்தே உள்ளதென்பதை உணர்ந்து நாம் கவனமுடன் செயல்பட வேண்டும்.<br>3. அறியாமை எனும் மடமை நம்முடைய அறிவினை மழுங்கடைய செய்கின்றது.<br>4. எதற்கெடுத்தாலும் முரண்பட்டு சண்டையிட்டுக் கொள்ளும் முரடர்கள் வாழும் உலகமிது என்பதனை அறிந்து நடந்து கொள்ள வேண்டும்.<br>5. தோட்டத்தில் விளையும் பயிரையும் கொடியையும் பாழ்படுத்தி மகிழ்வதோடு மட்டுமில்லாமல், அதனால் மன வேதனையுறும் தோட்டக்காரனையும் மிரட்டி ஆளும் உலகம் இது.<br>6. பிறரின் வளர்ச்சியைத் தடைசெய்து அதைக் கொண்டாடுவதோடு மட்டுமல்லாமல் அதனால் பாதிப்படைபவர்களையும் ஏமாற்றுகின்றனர்.<br>7. இந்தச் சூழலில் அவ்வகையான மனிதர்களிடம் நாம் கவனமாக இருக்க வேண்டும்.<br>8. அன்பு நிறைந்த உள்ளத்தில் ஆணவம் படர்ந்து அதனைச் சீர்குலைத்து விடும்.<br>9. இதனால் நாம் குணம் இழந்து, வாழ்வையும் சீரழிக்கும். | முன்னுரை : 2<br><br>கருத்துகள் : 15<br><br>முடிவுரை : 2<br><br>மொழி : 1<br><br>(20 புள்ளி) |

| | | |
|---|---|---|
| | 10. இவ்வாறான மனிதர்களிடத்தில் நாம் மிகவும் கவனமாகச் செயல்பட்டு அவர்கள் திருந்த வழிவகுக்க வேண்டும்.<br>**புதைநிலைக் கருத்துகள் :**<br>1. பிறரை ஏமாற்றி துன்புறுத்தி அதில் இன்பமடைந்து வாழக் கூடாது.<br>2. சுயசிந்தனையோடும் சுயமுயற்சியோடும் வாழ வேண்டும்<br>3. அறியாமையை நீக்கித் தெளிந்து செயல்பட வேண்டும்.<br>4. ஆணவம் கொள்ளக் கூடாது<br>5. வன்முறையை ஒழிக்க வேண்டும்<br><br>முடிவுரை :<br>வாழ்வில் முன்னேற்றம் காண்பதற்குத் தீய வழிகளையும் எண்ணங்களையும் தவிர்க்க வேண்டும். நல்ல எண்ணங்களை விதைத்து அதன் பாதையில் நாம் செல்ல வேண்டும்.<br>*(ஏற்புடைய பிற முடிவுகள்)* | |
| 11 i) | இக்கவிதையில் காணப்படும் ஓசைநயம் :<br>**1. மோனை -** கவிதையின் தொடக்கச் சீர்களில் முதல் எழுத்து ஓசையால் ஒன்றிவருவதே மோனையாகும். அடிகளில் மோனை வருதல் அடிமோனை எனவும், சீர்களில் மோனை வருதல் சீர்மோனை எனவும் கூறப்படுகிறது.<br>எ.கா : **ச**ஞ்சித் – **த**லைமுறையாகச்<br>**வ**ஞ்சித் – **வா**ழ்ந்தாருக்கே – **வா**ணா<br>**ச**ஞ்சித் – **ச**ம்பாதித்ததுவும்<br>**2. எதுகை -** கவிதையின் தொடக்கச் சீர்களிண் முதலெழுத்தின் அளவும் இரண்டாம் எழுத்தின் ஓசையும் ஒன்றிவருவது எதுகையாகும். அடிகளில் எதுகை வருதல் அடிஎதுகை எனவும் சீர்களில் எதுகை வருதல் சீர்எதுகை எனவும் பெயர் பெறும்.<br>எ.கா : ச**ஞ்**சிக் – வ**ஞ்**சித்<br>ச**ஞ்**சிக் – க**ஞ்**சிக்<br>கா**லை** – பா**லை**<br>**3. சந்தம் -** சொற்களிலுள்ள ஒலிக்கூறுகள் – ஓசைப் பகுதிகள் ஒரே தாள அளவுக்குப் பொருத்த அமைவதே சந்தமாகும்.<br>எ.கா : மாரடித்தாய் – போரடித்தாய்<br>நிற்கின்றாய் – விற்கின்றாய்<br>கண்டாயா – கொண்டாயா<br>**4. இயைபு -** சீர்களின் இறுதி அசை ஒன்றி வருவது. கவிதை அடியில் இறுதியிலிருந்து இரண்டாம் எழுத்து ஒன்றி வருவதாகும்.<br>எ.கா : சொ**ல்லி** – சொ**ல்லி**<br>வாழ்**த்தி** – வாழ்**த்தி**<br>மாரடித்**தாய்** – போரடித்**தாய்**<br>*(ஏதேனும் 3)* | 10 |

| | | |
|---|---|---|
| 11 ii) | இக்கவிதை ஏற்படுத்திய தாக்கங்கள் (பாதிப்புகள்) :<br><br>**1.** **கருத்து** :இந்தியர்கள தங்களைச் சஞ்சிக்கூலிகள் என அடையாளப்படுத்தி அடிமைப்பட்டு வாழ்ந்து வருகிறார்கள். **உணர்வு** :இவ்வாறான வாழ்க்கை நிலையைப் பார்க்கும்பொழுது எனக்கு மிகுந்த வருத்தமளிக்கிறது. **தீர்வு** :ஆதலால், நான் என்னுடைய சிந்தனையை முன்னேற்ற பாதையை நோக்கி அமைக்க கங்கணம் கட்டுகிறேன்.<br><br>***பிற விடைகளும் மேற்காணும் வகையில் 'கருத்து, உணர்வு, தீர்வு என மூன்று கூறுகளை உள்ளடக்கி இருத்தல் அவசியம்.**<br><br>**2.** உயிரைக் கொடுத்து விசுவாசத்துடன் உழைக்கத் தெரிந்தும் அவ்வுழைப்பிற்கேற்ற பலனை அனுபவிக்க தெரியாததால் இந்தியர்களின் வாழ்க்கைத் தரம் உயராமல் இருக்கின்றது என்ற உண்மை எனக்கு வருத்தமளிக்கிறது.<br>**3.** வரவுக்கு ஏற்பச் செலவு செய்து சிக்கனமாக வாழ வேண்டியதன் அவசியத்தை உணராமல் இருப்பதால் நாம் வாழ்வில் பின்தங்கிய நிலையில் உள்ளோம் என்பது வருத்தமளிக்கிறது. | 10 |
| 12 i) | தூயோனின் பண்புநலன்கள்<br><br>**1. உதவும் மனப்பான்மை கொண்டவன்**<br>எ.கா : பச்சைக்கிளியைக் கரடியிடமிருந்து காப்பாற்றுகிறான்<br>**2. அன்பு உள்ளம் கொண்டவன்**<br>எ.கா : பச்சைக்கிளியிடம் தன் காதலைத் தெரிவித்து அன்பாகப் பழகுகிறான்<br>**3. பழிவாங்கும் தன்மை கொண்டவன்**<br>எ.கா : பச்சைக்கிளியின் கணவரிடம் இலந்தைப் பழத்தைக் காட்டித் தனக்குக் கிடைத்த அன்பளிப்பு என்கிறான்.<br>**4. காதல் நிறைவேறாததை ஏற்கும் பக்குவம் இல்லாதவன்**<br>எ.கா : பச்சைக்கிளிக்கும் மான்வளவனுக்கும் திருமணம் என்று தெரிந்தவுடன் மனம் நொந்து பேசுகிறான்.<br>**5. தவற்றை எண்ணி வருந்துகிறான்**<br>எ.கா : பச்சைக்கிளியின் கொலைக்குக் காரணமானதை எண்ணி வருத்தம் கொள்கிறான்.<br><br>*(ஏதேனும் 3)* | 10 |
| 12 ii) | இடப்பின்னணி<br><br>**1. பிசிராந்தையார் வீடு**<br>எ.கா : மேற்படியார் என்ற புலவர் பொய்யான தனது வறுமையைக் கூறி பிசிராந்தையாரிடம் பதக்கத் தொங்கலைப் பெறுகிறார்.<br>**2. சிற்றூர் தோப்பு** | 10 |

| | | |
|---|---|---|
| | எ.கா : உடையப்பன் என்ற மீனவன் தோப்பில் உள்ள குட்டையில் வலை வீசி மீன் பிடிக்கும் போது கர்ப்பிணிப் பெண்ணின் உடலைத் தன் வலையில் மாட்டிய பெட்டியில் காண்கிறான்.<br>**3. தூக்கு மேடை**<br>எ.கா : அமைச்சரைத் தூக்கிலிடுவதற்கு முன் அரசன் மக்களைப் பார்த்துக் குற்றவாளி குற்றத்தை ஒப்புக் கொண்டு முன் வருமாறு வேண்டுகிறார். கூட்டத்திலிருந்து 'நான்தான் குற்றவாளி' என ஒரு குரல் வந்தது.<br>**4. அரண்மனை உணவு விடுதி**<br>எ.கா : அரசனும் அரசியும் இறந்த பெண்ணான பச்சைக்கிளியைப் பற்றியும் அவள் இறப்பில் யார் எல்லாம் குற்றம் செய்தவர்கள் என்பதைப் பற்றியும் உரையாடினார்கள்.<br>**5. சோழ நாடு – வடக்கிருந்த இடம்**<br>எ.கா : சொந்த மக்களே தமக்கு எதிராக இருப்பதால் இனி வாழ்வதில் பயனில்லை என்று எண்ணி வடக்கிருந்து உயிர் துறக்கிறார். அதை அறிந்த பிசிராந்தையார் தன் ஆருயிர் நண்பனின் நிலையை எண்ணி அவரும் நட்புக்காக வடக்கிருக்கின்றார்.<br><br>*(ஏதேனும் 3)* | |
| 13 i) | மான்வளவனின் பண்புநலன்கள்<br><br>**1. மனைவி மீது அன்பு கொண்டவன்**<br>எ.கா : பச்சைக்கிளியைத் திருமணம் புரிந்து கொண்டு பாசத்துடன் பார்த்துக் கொள்கிறான். கர்ப்பிணிப் பெண்ணான தன் மனைவியை அக்கறையுடன் பார்த்துக் கொள்கிறான்.<br>**2. சந்தேகம் கொண்டவன்**<br>எ.கா : தன் மனைவிக்கு வாங்கி தந்த இலந்தைப் பழம் தூயனிடம் இருப்பதைக் கண்டு நடந்ததைத் தீர விசாரிக்காமல் பச்சைக்கிளியின் மீது சந்தேகப்படுகிறான். அவளைக் கொலையும் செய்கிறான்.<br>**3. உண்மையை ஒப்புக்கொள்பவன்**<br>எ.கா : பச்சைக்கிளியைத் தான் கொலை செய்ததை அரசரின் முன் ஒப்புக்கொள்கிறான். அதற்காகத் தண்டனையை ஏற்றுக் கொள்ளவும் தயாராக இருந்தான்.<br>**4. தவற்றை உணர்ந்து வருந்துபவன்**<br>எ.கா : தூயவளான பச்சைக்கிளியைச் சந்தேகப்பட்டுக் கொலை செய்ததை எண்ணி வருந்துகிறான்.<br><br>*(ஏதேனும் 3)* | 10 |
| 13 ii) | நாடகத்தின் உத்திமுறைகள்<br><br>**1. பின்னோக்கு உத்தி** – கடந்த கால நிகழ்ச்சிகளைக் கதையோட்டத்திற்கு ஏற்ப பின்னோக்கிப் பார்த்தல்<br>எ.கா : நினைவு வருகிறது. நான் சின்னவளாயிருந்த போது, கரடி வந்ததென்று என்னை விட்டு ஓடி விட்டார்கள் கூட இருந்த குட்டிகள்! | 10 |

| | | |
|---|---|---|
| | **2. முன்னோக்கு உத்தி** – எதிர்காலத்தில் நடக்கப்போகும் நிகழ்வை முன்கூட்டியே குறிப்பால் உணர்த்துதல்<br>எ.கா : இளங்கோச் சோழன் தன் தந்தைக்கு எதிராகச் செயல்படுவான் என முன்கூட்டியே நமக்குக் கோடி காட்டல்.<br>**3. நனவோடை உத்தி** – கதைப்பாத்திரம் தன் மனக்கண் வழி காணுகின்ற காட்சியாகவும் எண்ணங்களின் பதிவாகவும் அமைதல்.<br>எ.கா : குழந்தை ஒன்று கையில் பலாப்பழம் போல அவள் பெற்றுக் கொடுத்துவிடுவாள் காப்பாற்ற வேண்டுமே! எளிதா அது? – தூயன்<br>**4. கதைகூறல் உத்தி** – கதைப்பாத்திரங்களே கதை கூறி கதையை நகர்த்திச் செல்லுதல்.<br>எ.கா : தூயன் பச்சைக்கிளியின் மரணத்திற்கான காரணத்தைக் கூறுதல்.<br>**5. உரையாடல் உத்தி** – கதைக்கு மெருகூட்ட கதைப்பாத்திரங்களின் பேச்சு உத்தியாகப் பயன்படுத்துதல்.<br>எ.கா : பிசிராந்தையார் – கழிவிரக்கம் வேண்டாம். இதைக் கேள். இந்தப் பாவையை. இந்தப் பச்சைக்கிளியை. நீ எந்த நிலையில் எப்படிக் குத்தினாய்? அதுபோல் இப்போது நீ செய்து காட்ட வேண்டும்.<br>*(ஏதேனும் 3)* | |
| 14 | தானப்பனின் பண்புநலன்கள்<br><br>முன்னுரை :<br>நாவல் : வாடா மலர்<br>ஆசிரியர் : மு.வரதராசனார்<br>கருப்பொருள் : நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம்<br>கேள்வியையொட்டிய வாக்கியம் : இந்நாவலில் தானப்பனின் பண்புநலன்கள் மிகவும் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன<br><br>கருத்துகள் :<br><br>**1. நட்பைப் போற்றுபவன்**<br>தன்னுடைய திருமண விருந்தில் குழந்தைவேலைத் தன் மனைவிக்கு அறிமுகம் செய்து வைக்கும் பொழுது அவனைப்பற்றி மிகப் பெருமையாகப் பேசினான். தான் நடத்தும் உணவகத்தைப் பற்றிய இரகசியங்களைக் குழந்தைவேலுடன் பகிர்ந்து கொள்கிறான்.<br><br>**2. உடன்பிறப்புகளின் மீது அதிகம் பாசம் கொண்டவன்**<br>தன் சித்தி தன்னைக் கொடுமைபடுத்தினாலும், அவள் வயிற்றில் பிறந்த மனோன்மணியைச் சொந்த தங்கை போலவே பாசம் வைத்தான். மகப்பேற்றுக்குத் தன் வீட்டிற்கு வந்த சுடர்விழியைக் கவனித்துக் கொள்கிறான்.<br>**3. கல்வியில் அக்கறை உள்ளவன்**<br>வீட்டில் அதிக வேலை சுமையால் பல நேரங்களில் படிக்க இயலாத போது குழந்தைவேலிடம் கேட்டு மனப்பாடம் செய்கிறான். தேர்வுக் காலங்களில் குழந்தைவேலின் அருகில் அமர்ந்து அவன் படிப்பவற்றைக் கேட்டே அவனும் படித்துக் கொள்கிறான்.<br>**4. ஆடம்பரமாகவும் பகட்டாகவும் வாழ விரும்புபவன்**<br>திருமணத்திற்குப் பின் பெரிய வாடகை வீட்டில் வாழ விரும்புகிறான். | முன்னுரை : 2<br><br>கருத்துகள் : 15<br><br>முடிவுரை : 2<br><br>மொழி : 1<br><br><br>(20 புள்ளி) |

| | | |
|---|---|---|
| | தனது திருமண இசை விருந்தின் போது கோட்டும் கால்சட்டையும் அணிந்து கொண்டு மேல்நாட்டின் கலாச்சார உடையில் தோற்றமளிக்கிறான்.<br>**5. வாசிப்புப் பழக்கம் உடையவன்**<br>மைத்துனர் முருகய்யா மற்றும் குழந்தைவேலுடன் சொற்பொழிவு ஒன்றிற்குச் சென்று வந்ததிலிருந்து தானப்பன் வாசிப்புப் பழக்கத்தினைத் தொடங்குகிறான். நேரம் கிடைக்கும் பொழுதெல்லாம் ஒரு பங்கு புத்தகங்கள் படிக்கச் செலவிடுகிறான்.<br>*(ஏதேனும் 5)*<br><br>முடிவுரை :<br><br>வாடா மலர் நாவலில் இடம்பெற்றுள்ள தானப்பனின் கதைப்பாத்திரத்தின் வழி நாவலாசிரியர் பல நற்பண்புகளை வாசகர்களுக்கு வெளிப்படுத்துகிறார். அவற்றை வாழ்க்கையில் பின்பற்றினால் வாழ்க்கையைச் சீர்ப்படுத்தலாம். | |
| 15 | வாடாமலர் படிப்பினைகள்<br><br>முன்னுரை :<br>நாவல் : வாடா மலர்<br>ஆசிரியர் : மு.வரதராசனார்<br>கருப்பொருள் : நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம்<br>கேள்வியையொட்டிய வாக்கியம் : இந்நாவல் வாசகர்களுக்குப் பல படிப்பினைகளை உணர்த்துகிறது<br><br>கருத்துகள் :<br><br>**1. நல்ல நட்பினைப் போற்ற வேண்டும்.(படிப்பினை)** தானப்பனுக்கு அவனது சித்தியால் ஏற்படும் துன்பங்களைக் கண்டு அழுகிறான். மேலும் சென்னையில் கல்லூரியில் படிக்கும் பொழுது பல உணவுக்கடையில் ஏறி இறங்கி தானப்பனைத் தேடுவதை அவனது நண்பர்கள் கேலி செய்தாலும் தனது முயற்சியைக் கைவிடவில்லை. **(விளக்கம்)**. எனவே நமக்கு இருக்கும் நல்ல நட்பு வட்டாரத்தை என்றும் நாம் போற்றி தக்க வைத்துக் கொள்ள வேண்டும். **(வலியுறுத்தல்)**<br><br>***பிற விடைகளும் மேற்காணும் வகையில் 'படிப்பினை, விளக்கம், வலியுறுத்தல்' என மூன்று கூறுகளை உள்ளடக்கி இருத்தல் அவசியம்.**<br><br>**2. பிறர் பிள்ளைகள் மீது அன்பு காட்டுதல் வேண்டும்**<br>-குழந்தைவேலின் பெற்றோர் தானப்பன் மீதும் சுடர்விழியின் மீதும் காட்டிய அன்பும் அக்கறையும்<br>**3. பிள்ளைகள் பெற்றோரை மதிக்க வேண்டும்**<br>-குழந்தைவேலு எந்த வயதிலும் தன் பெற்றோர்களின் மீது வைத்திருந்த மதிப்பு<br>4. **திருமணமான தம்பதிகள் புரிந்துணர்வோடு இல்லற வாழ்க்கையை இனிமையாக வாழ வேண்டும்**<br>-சுடர்விழி தன் கணவனைப் புரிந்து இல்லற வாழ்க்கையைச் சிறப்பாக நடத்துதல்<br>**5. அறநூல்களை வாசிக்கும் பழக்கம் வேண்டும்** | முன்னுரை : 2<br><br>கருத்துகள் : 15<br><br>முடிவுரை : 2<br><br>மொழி : 1<br><br><br>(20 புள்ளி) |

| | | |
|---|---|---|
| | -தானப்பனின் வாசிப்புப் பழக்கம்<br>**6. ஆடம்பரம் இல்லாமல் எளிய வாழ்க்கை வாழ வேண்டும்**<br>-ஆரம்பக் காலக் கட்டத்தில் தானப்பன் ஆடம்பர வாழ்க்கையை நாடுதல்<br>**7. பெண்கள் உயரிய பண்போடு குடும்பத்தை வழிநடத்த வேண்டும்**<br>-சுடர்விழி / பூங்கொடி<br>**8. ஆண் பெண் பழக்கத்தில் கட்டுப்பாடு அவசியம்**<br>-தானப்பன் வீட்டில் இல்லாத நேரத்தில் வச்சிரநாதனுடன் நெருக்கமாகப் பேசிப் பழகுகிறாள் கனகம்<br>*(ஏதாகினும் 5)*<br><br>முடிவுரை :<br><br>வாடா மலர் நாவல் பல படிப்பினைகளை உணர்த்துகிறது. வாசகர்கள் அவற்றை வாழ்க்கையில் பின்பற்றினால் நலமான வாழ்க்கையை வாழலாம். | |

## தொகுதி 3

*[எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்]*

### பாகம் - ஒன்று

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

### பிரிவு ஒன்று - கவிதை

சஞ்சிக் கூலியில் வந்தேன் என்று
தலைமுறையாகச் சொல்லிச் சொல்லி
வஞ்சித் தவனை வாழ்த்தி வாழ்த்தி
வாழ்ந்தாருக்கே **மாரடித்தாய்** - உன்
வாணா ளெல்லாம் போரடித்தாய் !

சஞ்சிக் கூலியில் வந்தாலென்ன ?
சம்பாதித்ததுவும் கொஞ்சமா என்ன ?
கஞ்சிக் கின்றும் கையை ஏந்திக்
கடைவா சலிலே நிற்கின்றாய் – உன்
கட்டுடலைத்தான் விற்கின்றாய் !

**கவிஞர் காரைக்கிழார்**

1. இக்கவிதைக் கண்ணிகளில் இடம்பெற்றுள்ள கவிதையின் **மையக்கரு** யாது? (2 *புள்ளி*)
2. இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **ஓசைநயங்கள்** இரண்டனை எழுதுக. (4 *புள்ளி*)
3. i) '**மாரடித்தாய்** ' என்பதன் பொருள் யாது? (2 *புள்ளி*)

சஞ்சிக் கூலியில் வந்தாலென்ன ?
சம்பாதித்ததுவும் கொஞ்சமா என்ன ?
கஞ்சிக் கின்றும் கையை ஏந்திக்
கடைவா சலிலே நிற்கின்றாய் – உன்
கட்டுடலைத்தான் விற்கின்றாய் !

ii) இவ்வடிகளில் காணப்படும் கவிஞரின் ஆதங்கத்திற்குக் **காரணம்** யாது? (2 *புள்ளி*)

[10 புள்ளி]

## பிரிவு இரண்டு - நாடகம்

4. பிசிராந்தையார் நாடக ஆசிரியர் பெற்ற **விருது** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

5. i) பிசிராந்தையார் நாடகத்தில் இடம்பெற்றுள்ள **புலவர்கள்** இருவரைக் குறிப்பிடுக.

(2 புள்ளி)

ii) பிசிராந்தையார் நாடகத்தின் **சிக்கல்** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

6. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக

அரசன் : மான்வளவனே, ஒருத்தி உன் கண் எதிரில் காட்சியளிப்பாள். உன்னால் கொலைசெய்யப்பட்டவள் அவள்தானா என்று பார்த்துச் சொல்ல வேண்டும் *(அங்கு ஒருபுறம் கட்டப்பட்டிருந்த திரை விலக்கப்படுகின்றது. இறந்த பச்சைக்கிளி காட்சியளிக்கின்றாள்)*

மான்வளவன் : ஆ! பச்சைக்கிளி .....

*(அவள் மேல் பாயும் முன் சூழ்ந்திருந்த போர் வீரர்கள் பிடித்து நிறுத்துகின்றார்கள்)*

கற்புள்ளவளே ! கருதாது உன்னைக் கொல்ல முயன்றேன். உயிர் தப்பினாய்.! உடல் நலம் அடைந்தாய் அரசர் அருளாலே ! துன்பப்படுத்தினேன். ஆயினும் **எதிரில் நின்றென்னை இன்பப்படுத்தினாய்.** என்னை மன்னித்துவிடு. அரசர் பெருமானே ! அவையத்தாரே கத்தியால் குத்தினேன். கத்தியால் வெட்டினேன். அதுபற்றி நீங்கள் இடும் தண்டனையை ஏற்றுக் கொள்ள அட்டியில்லை. ஆனால், இதோ இருக்கிறாள். இதோ வாழ்கின்றாள் .நான் வாழ விரும்புகின்றேன் எனக்குத் தூக்குத் தண்டனை மட்டும் வேண்டாம்.

( காட்சி 15, பக்கம் 74)
(உமா பதிப்பகம் 2020)

i) இச்சூழலில் வெளிப்படும் மான்வளவனின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

ii) இச்சூழலில் காணப்படும் **இடப்பின்னணியை** எழுதுக. (2 புள்ளி)

iii) **'எதிரில் நின்றென்னை இன்பப்படுத்தினாய்'** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 *புள்ளி*)

iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது ? (3 *புள்ளி*)

[15 புள்ளி]

## பிரிவு மூன்று – நாவல்

7. வாடா மலர் நாவலாசிரியர் **ஈடுபட்ட துறை** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

8 i) வாடா மலர் நாவலில் **தானப்பனின் தங்கைகள்** இருவர் யாவர்? (2 *புள்ளி*)

ii) வாடா மலர் நாவலின் **கருப்பொருள்** யாது? (2 *புள்ளி*)

9. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்து வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> "உங்களுக்குக் கடையைப் பிரித்துக் கொடுத்தது போல் , ஒரு வீடு பார்த்துத் தனிக்குடித்தனம் வைத்துக் கொடுத்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் ! படித்தவர் நீங்கள் .உங்களுக்கு இது தெரியாதா ? அங்கங்கே எப்படி வாழ்கிறார்கள் ! நாங்கள் உங்கள் அம்மா அப்பாவைப் பற்றி ஏதோ குறை சொல்வதாக எண்ணிவிடாதீர்கள் **நாங்கள் அப்படிப் பட்டவர்கள் அல்ல** .ஒரு நாளும் அந்த வழிக்குப் போக மாட்டோம். உங்கள் நன்மைக்குத்தான் சொல்கிறேன் " என்று மெல்லத் திட்டத்தைப் புலப்படுத்தினார். அதன் பிறகுதான் எனக்குக் காரணம் புலப்பட்டது. மகள் பூங்கொடியை என்னிடம் நெருங்கவிடாமல் செய்தது அந்தத் திட்டத்தில் ஒரு பகுதிதான் என்று உணர்ந்தேன் .
>
> "ஏன்? எங்கள் வீட்டில் பூங்கொடிக்கு ஏதாவது குறை நடந்ததா? எனக்கு அண்ணன், தம்பி, அக்கா, தங்கை யாராவது இருந்து ஏதாவது கொடுமை செய்தார்களா? மாமியின் கொடுமை உண்டா? அப்படி ஏதாவது இருந்தால் சொல்லுங்கள் .பூங்கொடி சொல்லட்டும் , கேட்கலாம்" என்றேன்.
>
> **(அத்தியாயம் 18, பக்கம் 139)**
> **(மல்டி எடுகெஷனல் புக் எண்டபிரைஸ் 2020)**

i) இச்சூழலில் வெளிப்படும் குழந்தைவேல் மாமியாரின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

ii) இச்சூழலில் காணும் **சமுதாயப் பின்னணியைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

(iii) "**நாங்கள் அப்படிப்பட்டவர்கள் அல்ல"** என்பதன் சூழலுக்கு ஏற்ற பொருள் யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]

**பாகம் - இரண்டு**

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கட்டுரையாக **மூன்று** கட்டுரைகள் எழுதுக.

**பிரிவு ஒன்று : கவிதை**

வாழ்க்கையே ஒரு திருவிழா

வாழ்க்கை யேஒரு திருவிழா
வந்துள் ளோம்கொண் டாடவே
ஆழ்ந்துள் ளோம் அன் பிணைப்பினில்
அனைத்துயி ரிலும்நாம் வாழுவோம்!

காலை எழுந்ததும் உன் அன்பினில்,
காரணம் இலாத மகிழ்ச்சியில்
சாலையில் நீர்தெ ளிக்கையில்
தழுவும் நம்மனம் களிப்பினில்!

நம்மைச் சுற்றிலும் அழகொளி
ஞாயிறு ஒண்கதிர் நேருறச்
செம்மை அன்பையே பொழிந்திடும்
சேர்ந்து வந்திடும் ஊரெலாம்!

வியப்புற மக்கள் இயக்கமும்
வேறு வேறொலிப் புட்களின்
தயக்கம் ஒன்றிலாப் பல்லிசை
தழுவச் செய்திடும் வாழியே!

நாள்பொழு தெலாம்உன் அன்பொலி
நல்வழிக்கு என்னை அழைத்திடும்
நாள்பொழு தெலாம்உன் அன்புளம்
நம்பிக் கையின்மகிழ் வூட்டிடும்!

நாள்பொழு தெலாம்அன் புறவுதான்
நலமும் வலுவும் தந்திடும்;
நாள்பொழு தெலாம்உன் அன்புயிர்
கணந்தொறும் வாழ உதவுமே!

- த. கோவேந்தன்

10. மேற்காணும் கவிதையின் **தெரிநிலைக் கருத்துகளை** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

**அல்லது**

**11** கீழ்க்காணும் கவிதையை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக**.**

ஞான வழி

ஈனவழிச் சென்றே நாளும்
  இயல்பிலாச் செயல்க ளாற்றிப்
போனவழி நெறியென் கின்றாய்;
  பொய்க்கு, மெய் வண்ணம் பூசி
ஊனவிழிக் குயர்வு சேர்ப்பாய்;
  உனக்கொன்று சொல்வேன், நல்லோர்
ஞானவழி நிற்பாய், நெஞ்சே
  நல்லுப தேசம் இஃதே!

குணம்விட்டுக் குறிகள் கெட்டுக்
  குவலயம் தன்னில் ஆன்றோர்
இனம்விட்டுச் சிறுமை செய்,தீ
  இயல்பினர் தம்மை நாடிப்
பணங்கண்டு பல்லி ளிக்கும்
  பாங்கினைப் பெற்றாய், அன்பால்
உனக்கொன்று சொல்வேன், நெஞ்சே
  உயர்ஞான நெறிநிற் பாயே!

உற்றுற்றுப் பார்க்கின் றாயே,
  உன்னைத்தான் மனமே கேளாய்!
எற்றுப்பட் டுழன்று வாழ்வில்
  ஏதப்பட் டழிகின் றாய், நீ
பற்றற்று வாழ்வார் வாழ்வின்
  பளுவற்றுத் திகழ்வார்; அந்த
வெற்றிக்கு வித்தாம் ஞான
  விளக்கினைப் பற்று வாயே!

- கவிஞர் பொன்முடி

i) இக்கவிதையில் காணப்படும் **அணிநயங்கள்** மூன்றனை விளக்கி எழுதுக**.**

(10 *புள்ளி*)

ii) இக்கவிதை வழி நீ பெற்ற **படிப்பினைகள்** மூன்றனை விளக்கி எழுதுக**.**

(10 *புள்ளி*)

[20 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

12 பிசிராந்தையார் நாடகத்தின் கோப்பெருஞ்சோழனின் **பாத்திரப்படைப்பை** விளக்கி எழுதுக. (20 புள்ளி)

**அல்லது**

13 பிசிராந்தையார் நாடகத்தின் **கதைச்சுருக்கத்தை** எழுதுக. (20 புள்ளி)

## பிரிவு மூன்று : நாவல்

14 i) வாடா மலர் நாவலின் முருகய்யாவின் **பாத்திரப்படைப்புகள் மூன்றனை** விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

ii) வாடா மலர் நாவலின் **உத்திமுறைகள் மூன்றனை** விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

[20 புள்ளி]

**அல்லது**

15 i) வாடா மலர் நாவலில் மோகனாவின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக (10 *புள்ளி*)

ii) வாடா மலர் நாவலின் **இடப்பின்னணிகள்** மூன்றனை விளக்கி எழுதுக (10 *புள்ளி*)

[20 *புள்ளி*]

**முற்றுப் பெற்றது**
**SOALAN TAMAT**

**விடைப்பட்டி**

**தொகுதி 3**

| எண் | விடை | புள்ளி |
|---|---|---|
| 1 | தோட்டப்புறத் தமிழர்களின் அவலநிலை | 2 |
| 2 | ஓசை நயங்கள் :<br>i) எதுகை ச**ஞ்**சி - வ**ஞ்**சி<br>ச**ஞ்**சி - க**ஞ்**சி<br>2) மோனை **ச**ஞ்சி - **த**லைமுறையாக<br>**வ**ஞ்சி - **வா**ழ்ந்திருக்கே - **வா**ணா<br>**ச**ஞ்சி - **ச**ம்பாதித்ததுவும்<br>**க**ஞ்சி - **க**டைவாசலிலே - **க**ட்டுடலை<br><br>3) சந்தம் - மாரடித்தாய் - போரடித்தாய்<br>சஞ்சி - வஞ்சி<br>சஞ்சி - கஞ்சி<br>நிற்கின்றாய் - விற்கின்றாய்<br><br>4) இயைபு -<br>தலைமுறையாகச் சொல்லிச் சொ**ல்லி**<br>வஞ்சித் தவனை வாழ்த்தி வாழ்**த்தி**<br>கடைவா சலிலே நிற்கின்**றாய்**<br>கட்டுடலைத்தான் விற்கின்**றாய்**<br><br>*(ஏதேனும் 2)* | 4 |
| 3 i) | இன்னல்பட்டாய் / துன்பப்பட்டாய் | 2 |
| 3 ii) | முன்னேற வாய்ப்பிருந்தும் முன்னேறாமல் இருப்பதற்குத் தமிழர்களின் மனப்பான்மையே காரணம் | 2 |
| 4 | சாகித்திய அகாடமி விருது | 2 |
| 5 i) | பிசிராந்தையார்,மேற்படியார், பொத்தியார், புல்லாற்றூர் எயிற்றியனார், புதுப்புலவர், புலவர் க | 2 |
| 5 ii) | இளங்கோச் சோழனின் பதவி ஆசை; ஆட்சியைப் பிடிக்கச் சதித்திட்டம் தீட்டுதல் | 2 |
| 6 i) | தன் தவற்றுக்காக வருந்துபவன், தண்டனையை ஏற்கும் தன்மையன் | 2 |
| 6 ii) | ஆய்வு மன்றம். | 2 |
| 6 iii) | பச்சைக்கிளி உயிரோடு இருப்பதாக எண்ணி மகிழ்ந்தான் | 2 |
| 6 iv) | பச்சைக்கிளியின் மரணத்திற்கு மான்வளவனும் தூயனும் தாங்களே காரணம் என்று ஒப்புக்கொண்டனர். மன்னர் உண்மையை அறிய விரும்பினார். இருவரையும் தனித்தனியே ஆய்ந்தறிய ஏற்பாடு செய்கிறார். | 3 |

| | | |
|---|---|---|
| 7 | கல்வித்துறை தமிழ் இலக்கியத்துறை / அரசுதுறை / | 2 |
| 8 i)<br><br>8 ii) | சுடர்விழி, மனோன்மணி<br><br>நல்வாழ்விற்கு அன்பே ஆதாரம் | 2 |
| 9 i) | மகளின் மீது அதிக அன்பு கொண்டவர் ,சூழ்ச்சிக்காரர், உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுபவர், | 2 |
| 9 ii) | மேல்மட்ட வர்க்கம் – பூங்கொடி பெற்றோர் | 2 |
| 9 iii) | குழந்தைவேலின் பெற்றோரிடமிருந்து பிரிப்பவர் அல்லர் குழந்தைவேலையும் பூங்கொடியையும் தனிக்குடித்தனம் போகச் சொல்பவர்கள் அல்லர் | 2 |
| 9 iv) | பூங்கொடியின் பெற்றோர் மகளைத் தனிக்குடித்தனம் வைக்கத் திட்டம் தீட்டினர் . அதனால் அவர்கள் பூங்கொடியைத் தங்களோடு அழைத்துச் சென்று விட்டனர். வேதனையடைந்த குழந்தைவேலை அவன் பெற்றோர் பூங்கொடியை அழைத்து வரும்படி கூறுகின்றனர். | 3 |
| 10 | கவிதையில் காணப்படும் தெரிநிலைக் கருத்து<br><br>முன்னுரை<br><br>கவிதை : வாழ்க்கையே ஒரு திருவிழா<br>கவிஞர் : கவிஞர் த. கோவேந்தன்<br>பாடுபொருள் : வாழ்க்கை<br>கேள்வியையொட்டிய வாக்கியம் – இக்கவிதை மனித வாழ்க்கைக்கு முக்கியமான அன்பின் மேன்மையை உணர்த்துகிறது<br><br>1. மனித வாழ்க்கையே திருவிழா போன்றது. அதைக் கொண்டாடுவதற்காகவே நாம் பிறந்துள்ளோம். அத்தகைய வாழ்வில் நாம் அன்பில் திளைக்கும்போதுதான் முழுமையான மகிழ்ச்சி ஏற்படும்<br><br>2. நம் அன்பான வாழ்க்கையின் ஒவ்வொரு காலைப்பொழுதையும் மகிழ்ச்சியாக தொடங்க வேண்டும்.காலையில் கோலம் போட நீர் தெளிக்கும்போது மனதில் மகிழ்ச்சி தோன்றுகிறது<br><br>3. ஒவ்வொரு காலையிலும் தோன்றுகின்ற சூரியனின் ஒளி உலக உயிர்களின் மேல் சூரியன் வைத்திருக்கின்ற ஆழமான அன்பைக் காட்டுகின்றது<br><br>4. மனித வாழ்க்கையின் பல்வேறு செயல்பாடுகளும் பறவைகள் சுதந்திரமாக ஓசைகள் எழுப்பி நம்மை வியக்க வைக்கின்றன. இவையனைத்தும் நம் வாழ்விற்கு இனிமை சேர்க்கின்றன.<br><br>5. வாழ்நாள் முழுவதும் கிடைக்கின்ற அன்புதான் நம்மை நல்வழிக்கு இட்டுச் செல்கிறது. மகிழ்ச்சியை அளிக்கிறது | முன்னுரை : 2<br><br>கருத்துகள் : 15<br><br>முடிவுரை : 2<br><br>மொழி : 1<br><br>(20 புள்ளி) |

| | | |
|---|---|---|
| | 6.நமக்குக் கிடைக்கின்ற இந்த அன்புதான் நமக்கு நலத்தையும் வலுவையும் கொடுக்கின்றது. இந்த அன்புதான் நாம் ஒவ்வொரு நொடியும் மகிழ்வோடு வாழ துணைபுரிகிறது<br><br>முடிவுரை :<br><br>உலக உயிர்களின் மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு இன்றியமையாதது அன்பு ஆகும். அதனைக் குறைவறாது பெறுவதற்கான முயற்சிகளில் ஈடுபட வேண்டும் | |
| 11 i) | இக்கவிதையில் காணப்படும் அணிநயம் :<br><br>**1 தன்மை நவிற்சி அணி** : ஒன்றன் தன்மையை அப்படியே இயல்பாக அழகுபட நவில்வது தன்மை நவிற்சி அணி ஆகும்<br><br>எ.கா ஈனவழிச் சென்றே நாளும்<br>இயல்பிலாச் செயல்க ளாற்றி<br><br>தவறான வழியைத் தேர்ந்தெடுத்ததால் தவறான செயல்களாற்றும் நிலை ஏற்படுகிறது என்ற பொருள் இயல்பாக விளக்கப்பட்டுள்ளது<br><br>**2 உருவக அணி** : உவமையும் பொருளும் வேற்றுமை இன்றி ஒன்றெனக் கொள்வது உருவகம்.<br><br>எ.கா. ஞான விளக்கு<br><br>இவ்வரியில் ஞான விளக்கு எனும் சொல் அனைத்தும் அறிந்த நிலை என்ற பொருளை உணர்த்துகிறது. ஞானம் என்பது அறிவையும் விளக்கு என்பது இருளை அகற்றி, வெளிச்சம் கொடுத்து அனைத்தும் அறியும் நிலையைக் காட்டுகிறது.<br><br>**3 திரிபு அணி** : கவிதையில் இடம்பெறும் சீர்களில் முதலெழுத்து மட்டும் வேறுபட்டிருக்க மற்றவை எல்லாம் அதே எழுத்துகளாக ஒன்றி வருவது ஆகும்.<br><br>எ.கா. போனவழி – ஞானவழி<br><br>மேற்காணும் போனவழி – ஞானவழி எனும் சொல்லில்'போ', 'ஞா' எனும் எழுத்து மட்டும் மாறியிருக்க மற்ற எழுத்துகள் ஒன்றி வந்துள்ளன. | 10 |
| 11 ii | **இக்கவிதையின் படிப்பினைகள் :**<br><br>1. சான்றோர்கள் காட்டும் நல்வழியில் நடத்தல் அவசியம் **(படிப்பினை)** . சான்றோர்கள் எப்பொழுதுமே வாழ்வுக்கு முன்னேற்றம் தரும் நல்ல கருத்துகளையே கூறுவர். **(விளக்கம்)** சான்றோரின் கருத்துகளை ஏற்று வாழ்வை மேம்படுத்திக் கொள்வேன்) .**வலியுறுத்தல்(**<br><br>2. பற்று நீங்கினால் நிம்மதியாக வாழலாம் **(படிப்பினை)** பொறாமையும் ஆடம்பரமும் நமக்கு அதிக சிக்கலைக் கொடுக்கும். **(விளக்கம்)** ஆக, அளவுக்கு மீறிய ஆசைகளை வளர்த்துக் கொள்ள மாட்டேன் )**வலியுறுத்தல்(** | 10 |

| | | |
|---|---|---|
| | 3. ஞான வழியைப் பின்பற்றி நடந்தால், வாழ்வு முழுமை பெறும் **(படிப்பினை)** சான்றோரின் புத்தகங்களைப் படித்து, உரைகளைக் கேட்டு ஞான வழியைப் பின்பற்றி வாழ வேண்டும்***(விளக்கம்)***<br>முட்டாள்தனமான முடிவு, கருத்துகளை ஒதுக்கிச் சிறப்பான வாழ்வு வாழுவேன் (**வலியுறுத்தல்)** | |
| 12 | **கோப்பெருஞ்சோழன் )பாத்திரப்படைப்பு(**<br><br>முன்னுரை :<br>நாடகம் – பிசிராந்தையார்<br>நாடகாசிரியர் – புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்<br>கருப்பொருள் – அறமும் உயர்நட்பும்<br>தலைப்பையொட்டிய வாக்கியம் **–** இந்நவநாகரீக வாழ்க்கையில் சிறிது சிறிதாகக் காணாமல் போய்க்கொண்டிருக்கும் நன்னெறிகளை உணர்த்துவதற்காகவே கோப்பெருஞ்சோழனின் பாத்திரப்படைப்பு படைக்கப்பட்டுள்ளது.<br><br>1. **கருத்து** : அரசர் அறவோரை மதிக்க வேண்டும் என்பதை உணர்த்துவதற்காக கோப்பெருஞ்சோழனின் பாத்திரப்படைப்பு படைக்கப்பட்டுள்ளது<br>**சான்று**: அறவோர் புல்லாற்றூர் எயிற்றியனாரை மதித்து அவரின் அறிவுரைக்குச் செவி சாய்க்கிறார்<br>**ஆசிரியரின் நோக்கம் :** எவ்வளவு பெருமை வாய்ந்தவராக இருந்தாலும் அறவோரை மதிக்க வேண்டும் என்ற பண்பை உணர்த்தவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.<br><br>**2. கருத்து** : வீரமும் மானமும் அரசனின் தனிச்சிறப்பு என்பதை உணர்த்துவதற்காக கோப்பெருஞ்சோழனின் பாத்திரப்படைப்பு படைக்கப்பட்டுள்ளது<br>**சான்று**: தன் சொந்த மக்களால் வஞ்சிக்கப்பட்டார்**;** படைத்தலைவனும் படையும் துரோகம் செய்தும் வீரம் குறைவின்றி வாளேந்தி போர் புரியத் தயாராகிறார். இருப்பினும் நாட்டு நலன் கருதி**,** இழந்த மானத்தைக் காத்துக் கொள்ளும் பொருட்டு வடக்கிருக்கத் துணிகிறார்.<br>**ஆசிரியரின் நோக்கம் :** நாடாளும் அரசனுக்கு இருக்க வேண்டிய வீரம்**,** மானம் போன்ற பண்புகளை உணர்த்தவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.<br><br>**3. கருத்து** : நாட்டின் நலனே அரசனின் தலையாய கடமை என்பதை உணர்த்துவதற்காக கோப்பெருஞ்சோழனின் பாத்திரப்படைப்பு படைக்கப்பட்டுள்ளது<br>**சான்று** தன்னை வஞ்சித்தவர்களைக் கொல்ல வேண்டும் என்று : .நினைத்தாலும் நாட்டு நலன் கருதி அவ்வெண்ணத்தைக் கைவிட்டார்<br>**ஆசிரியரின் நோக்கம் :** நாட்டு நலனுக்கு முக்கியத்துவம் கொடுப்பதே நல்ல அரசனுக்கு அழகு என்பதை உணர்த்தவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.<br><br>4. **கருத்து** : ஒத்த உணர்வினால் உண்டான உண்மை நட்பின் மேன்மையைப் புலப்படுத்த கோப்பெருஞ்சோழனின் பாத்திரப்படைப்பு படைக்கப்பட்டுள்ளது<br>**சான்று**: வடக்கிருக்க முடிவு எடுத்த பொழுது தனக்கு அருகில் | முன்னுரை : 2<br>கருத்துகள் : 15<br>முடிவுரை : 2<br>மொழி : 1<br><br>(20 புள்ளி) |

| | | |
|---|---|---|
| | பிசிராந்தையாருக்கும் இடம் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறார் ; பிசிராந்தையார் கட்டாயம் வருவார் என்று கோப்பெருஞ்சோழன் நம்பினார்.<br>**ஆசிரியரின் நோக்கம் :** ஒத்த உணர்வினால் மட்டுமே உண்டான உண்மை நட்பு சந்தேகம் கொள்ளாது என்பதைக் காட்டவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.<br><br>**5. கருத்து** : அரசன் நீதி வழுவாதவர் என்பதைக் காட்டுவதற்காக கோப்பெருஞ்சோழனின் பாத்திரப்படைப்புப் படைக்கப்பட்டுள்ளது<br>**சான்று**: துரோகம் செய்த தன் மகன்களையும் தன் மதிப்பிற்குரிய படைத்தலைவனையும் சிறைப்பிடிக்க ஆணையிட்டார்<br>**ஆசிரியரின் நோக்கம்** : அரசன் நீதி வழுவாதவர் என்பதைக் காட்டுவதற்காகவும் நீதியின் முன் அனைவரும் சமமே என்பதை உணர்த்த இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.<br><br>**முடிவுரை**<br>நட்பும் தலைமைத்துவமும் எத்துணை மேன்மையானது என்பதைக் கோப்பெருஞ்சோழனின் கதைப்பாத்திரத்தில் இருந்து அறிய முடிகிறது. | |
| 13 | **பிசிராந்தையார் கதைச்சுருக்கம்**<br><br>**முன்னுரை :**<br>**நாடகம் –** பிசிராந்தையார்<br>**நாடகாசிரியர் –** புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்<br>**கருப்பொருள் –** அறமும் உயர்நட்பும்<br>**தலைப்பைத் தொட்டு ஒரு வாக்கியம் –** தற்காலத் தலைமுறையினருக்குப் பல்வேறு நெறிகளை உணர்த்துவதற்காகவே பிசிராந்தையார் நாடகம் உருவம் கண்டுள்ளது<br><br>**1)** பிசிராந்தையார், சோழமன்னனின் நட்பின் மேன்மை கருதி தன் பேரனுக்குக் கோப்பெருஞ்சோழன் எனப் பெயர் வைத்தது குறித்துப் புதுப்புலவரும் புலவர் 'க'வும் சிறப்பித்துப் பேசுதல்<br>**2)** அறிவுடைநம்பி காற்று, மழையால் பாதிக்கப்பட்ட மக்களின் நலன் காக்கச் செல்லுதல். பச்சைக்கிளியின் மரணம் குறித்த விசாரணை நடத்துதல்<br>**3)** இளங்கோச் சோழனின் பதவி ஆசை; ஆட்சியைப் பிடிக்கச் சதித்திட்டம் தீட்டுதல்<br>**4)** கோப்பெருஞ்சோழனின் புதல்வர்கள் தந்தைக்கு எதிராகப் போருக்குத் தயாராகுதல்<br>**5)** பாண்டிய நாட்டின் மீது சோழ இளவரசர்கள் தொடுக்க நினைத்த போர் பிசிராந்தையாரின் பாடலால் தடைப்பட்டுப்போனது. புல்லாற்றூர் எயிற்றியனாரின் அறிவுரையால் சோழனும் போர் எண்ணத்தைக் கைவிட்டார்<br>**6)** பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழன்,பொத்தியார் வடக்கிருந்து உயிர் துறத்தல்<br>**7)** சோழ இளவரசர்கள் தமது தவற்றுக்காக மன்னிப்புக் கேட்டல்<br>**8)** உலகம் பிசிராந்தையார், கோப்பெருஞ்சோழனின் நட்பைப் புகழ்ந்து பாடுதல்<br><br>**முடிவுரை**<br>பல நல்ல நெறிகளைக் கொண்டுள்ள இந்நாடகத்தின் | முன்னுரை : 2<br><br>கருத்துகள் : 15<br><br>முடிவுரை : 2<br><br>மொழி : 1<br><br><br>(20 புள்ளி) |

| | | |
|---|---|---|
| | இடம்பெற்றுள்ள அனைத்துக் கருத்துகளையும் நம் மனதில் தாங்கி நம் வாழ்வில் கடைப்பிடிக்க உறுதி பூணுவோமாக | |
| 14 i | **முருகய்யா ( பாத்திரப்படைப்பு)**<br><br>**1. கருத்து** : எளிமையான வாழ்வை வாழ்வதில் எவ்வித தவறும் இழிவும் கிடையாது என்று உணர்த்துவதற்காக முருகய்யாவின் பாத்திரப்படைப்பு படைக்கப்பட்டுள்ளது<br>**சான்று**: உணவு, உடை என எல்லாவற்றிலும் புலனடக்கம் எளிமையைப் போற்றுகிறார், ஆடம்பரத்தை வெறுக்கிறார்.<br>**ஆசிரியரின் நோக்கம் :** புலனடக்கத்தினால் சிக்கலும் துன்பமும் குறைவு என்பதைக் காட்டவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.<br><br>**2. கருத்து** : மனைவியின் சுயமுன்னேற்றத்திற்குக் கணவன் நல்ல வழிகாட்டியாகத் திகழ முடியும் என்பதை உணர்த்துவதற்காக முருகய்யாவின் பாத்திரப்படைப்பு படைக்கப்பட்டுள்ளது<br>**சான்று**: படிப்பறிவில்லாத சுடர்விழிக்குச் சிறந்த வழிகாட்டியாக இருக்கிறார். கல்வி, சுதந்திரம் அளித்து நல்ல கொள்கைகளையும் கற்றுக் கொடுத்துள்ளார்.<br>**ஆசிரியரின் நோக்கம் :** மனைவியின் சுயமுன்னேற்றத்திற்குக் கணவன் நல்ல வழிகாட்டியாகத் திகழ முடியும் என்பதை உணர்த்துவதற்காக இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.<br><br>**3. கருத்து** : அறிவில் உயர்ந்தோரை, சான்றோரைப் போற்றுதல் நன்மையே பயக்கும் என்பதை உணர்த்துவதற்காக முருகய்யாவின் பாத்திரப்படைப்பு படைக்கப்பட்டுள்ளது<br>**சான்று**: அறநூல்கள் படிக்கும் பழக்கம் தனக்கு மட்டுமின்றி சுடர்விழிக்கும் கற்றுக்கொடுத்துள்ளார். திரு.விக -வின் சொற்பொழிவின் மூலம் தானப்பனுக்குள் மாற்றத்தை ஏற்படுத்தினார்<br>**ஆசிரியரின் நோக்கம் :** உயர்ந்த மனிதர்களின் உறவு நம் வாழ்வில் உயர்வையே கொண்டு வரும் என்பதை உணர்த்த இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது. | 10 |
| 14 ii | **உத்திமுறை -** வாடா மலர்<br><br>**1. பின்னோக்கு உத்தி** - கடந்த கால நிகழ்ச்சிகளை நினைவுகூர்தல்<br>**எ** அடுக்கடுக்காகப் .குழந்தைவேல் கதை சொல்லும் காலக்கட்டம் : **கா.** பல கதைகள், தொடர்பின்றி பொருத்தமின்றி தனக்குத் தோன்றுவதையெல்லாம் குழந்தைவேல் கூற தானப்பன் கேட்டுக் கொண்டிருப்பான் எத்தனையோ ஆண்டுகளுக்கு முன் நடந்ததை . குழந்தைவேல் எண்ணிப் பார்க்கிறான்<br><br>2. **கடித உத்தி**கடிதங்களின் வழி கதையை நகர்த்திச் செல்வது -<br>**எகா.:1 .** தானப்பன் குழந்தைவேலுவுக்கு தனது நிகழ்கால நிலையை விளக்கிக் கடிதம் அனுப்பியிருந்தான் | 10 |

| | | |
|---|---|---|
| | **எகா.:2 .** பூங்கொடியின் தந்தை பூங்கொடிக்கு எழுதிய கடிதம் . அண்ணனையும் அம்மாவையும் நம்பி வாழ்வைக் கெடுத்துக் கொள்ள வேண்டாம் என்று அறிவுறுத்தி கடிதம் எழுதியிருந்தார்<br><br>**3. முன்னோக்கு உத்தி -** எதிர்காலத்தில் நடக்கப் போகும் நிகழ்வை முன்கூட்டியே நாவலாசிரியர் குறிப்பால் உணர்த்துவது<br>**எ.கா.**அன்று இரவு தானப்பன் தன் மனைவியோடு போராடி அவளைக் கொன்று விட்டதாகக் கனவு கண்டு அலறி எழுகிறான்; வீணான கற்பனைகள் கூடாது என தன்னைச் சமாதானப்படுத்திக் கொள்ளுகிறான் .பின்னாளில் தானப்பனும் கனகமும் மரணம் அடையப் போகின்றனர் என்பதை முன்கூட்டியே இஃது உணர்த்துவதாக இக்கனவு நாவலில் வருகிறது | |
| 15 i | **மோகனாவின் பண்புநலன்**<br><br>**1. கொடுமைக்காரி**<br><br>**எ.கா** தானப்பன், சுடர்விழி செய்கின்ற தவறுகளுக்குக் கடுமையான தண்டனை அளிக்கிறாள் சுடர்விழியின் படிப்பை நிறுத்தினாள்<br><br>**2. பணத்தாசை மிக்கவள்**<br><br>**எ.கா** கணவனின் மறைவிற்குப் பிறகு எல்லா பணத்தையும் கட்டிக்கொண்டு ஊருக்குச் சென்றாள். தானப்பன் மீது நீதிமன்ற வழக்கு தொடுத்து பணம், சொத்தில் பங்கு கேட்கிறாள்<br><br>**3. கோப உணர்ச்சிக்கு ஆட்படுபவள்**<br><br>**எ.கா** குழந்தைவேலுடன் தானப்பனைப் பேசவிடாமல் தடுத்துக் கடுஞ்சொற்களால் திட்டுதல். சுருட்டு வாங்க மறுத்த தானப்பனைக் கயிற்றால் அடித்தல் | 10 |
| 15 ii | **இடப்பின்னணி – வாடா மலர்**<br><br>1. **கல்லூரி விடுதி**<br>**எ.கா** கருணாகரன் என்கிற தீய குணம் கொண்டவனுடன் ஒரே அறையில் இருந்த காலம். பழனிச்சாமியின் நல்ல நட்பு<br><br>**2. குடியேற்றம்**<br>**எ.கா** முருகய்யாவின் சொந்த ஊர், சுடர்விழியின் மகப்பேற்றுக்காக வந்திருந்த போது திரு.வி.க-வின் உரையைக் கேட்ட பின் தானப்பனின் மனமாற்றத்திற்குக் காரணமான ஊர்<br><br>3. **தானப்பன் வீடு**<br>**எ.கா** தானப்பன், சுடர்விழி தன் தாயுடன் கவலையின்றி இன்பமாக வாழ்ந்த இடம். மாற்றாந்தாயுடன் தானப்பனும் சுடர்விழியும் கொடுமைகள் அனுபவித்த இடம் | 10 |

## தொகுதி 4

[எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்]

### பாகம் – ஒன்று

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**பிரிவு ஒன்று – கவிதை**

குணம்விட்டுக் **குறிகள் கெட்டுக்**
குவலயம் தன்னில் ஆன்றோர்
இனம்விட்டுச் சிறுமை செய்,தீ
இயல்பினர் தம்மை நாடிப்
பணங்கண்டு பல்லி ளிக்கும்
பாங்கினைப் பெற்றாய், அன்பால்
உனக்கொன்று சொல்வேன், நெஞ்சே
உயர்ஞான நெறிநிற் பாயே!

\- **கவிஞர் பொன்முடி**

1. இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **பாடுபொருள்** யாது? (2 *புள்ளி*)

2. இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **ஓசைநயங்கள்** இரண்டனை எழுதுக. (4 *புள்ளி*)

3. i) '**குறிகள் கெட்டு**' என்பதன் பொருள் யாது? (2 *புள்ளி*)

பணங்கண்டு பல்லி ளிக்கும்
பாங்கினைப் பெற்றாய், அன்பால்
உனக்கொன்று சொல்வேன், நெஞ்சே
உயர்ஞான நெறிநிற் பாயே!

ii) இவ்வடிகளில் கவிஞர் கூற வரும் **அறிவுரை** யாது ? (2 *புள்ளி*)

[10 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

4. பிசிராந்தையார் நாடக ஆசிரியரின் **இயற்பெயரைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

5. i) பிசிராந்தையார் நாடகத்தில் **சோழ மன்னனின் மகன்கள்** இருவரைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

   ii) பிசிராந்தையார் நாடகத்தின் **காலப்பின்னணி** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

6. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

| | |
|---|---|
| ஒற்றன் : | அயலரசின் செய்தி கொண்டு வந்தாரை ஒன்றும் செய்ய மாட்டீர்கள் என்று நம்பியதால் இப்பணியை நான் மேற்கொண்டேன். இது கோப்பெருஞ்சோழன் அளித்தது.<br>*(என்று திருமுகத்தைப் பாண்டியனிடம் நீட்டப் பாண்டியன் வாங்கிப் படிக்கின்றான்)* |
| அரசன் : | "அறமிலாப் பாண்டியன் அறிவுடை நம்பிக்குக் கோப்பெருஞ் சோழன்:<br>அறமில்லை, ஆட்சித் திறமில்லை உம்மிடத்தில்!<br>அறிவில்லை, நல்ல நெறியில்லை உன்பால்! நிலை<br>தவறிற்று; கொலை பெருகிற்று நின்நாட்டில்!<br>உன் ஆட்சியை என்னிடம் ஒப்படைக்க வேண்டும்.<br>இல்லையானால் போருக்கு வருக. எல்லைக்கண்<br>படையோடு நிற்கின்றேன்." |
| பாண்டியன் : அறிவுடை நம்பி | நானும் படையுடன் இதோ வந்துவிட்டேன். இழித்துப்<br>பேசிய சோழன் வாயைக் கிழித்துப் போடுகின்றேன்.<br>இதையும் சொல் போ!<br>*(ஒற்றன் ஓடுகின்றான்)*<br>படைத்தலைவரே. நம் படை முழுவதும் திரட்டுக<br>விரைவில்! **எல்லையில் கால் வைக்குமுன்** நாம் எதிர்த்துத் தாக்க வேண்டும்.<br>அமைச்சரே, தெருத்தோறும் கோப்பெருஞ்சோழ உருவத்தை வைக்கோலால் புனைந்து நிறுத்தும்படி செய்க.<br>கோப்பெருஞ்சோழன் மேல் நமக்குள்ள வெறுப்பைக் காட்ட அப்புல்லுருக்களில் தீ வைக்க இதோ நான் பிசிருக்குப் போய் வந்துவிடுகின்றேன். ( போதல் )<br>(காட்சி 24, பக்கம் 103-104)<br>(உமா பதிப்பகம்) |

(i) இச்சூழலில் வெளிப்படும் **பாண்டியன் அறிவுடை நம்பியின் பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **உத்திமுறை** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(iii) **"எல்லையில் கால் வைக்குமுன்"** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது ? (3 புள்ளி)

[15 புள்ளி]

## பிரிவு மூன்று : நாவல்

7. வாடா மலர் நாவலாசிரியரின் **புனைபெயரைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

8. i) வாடா மாலர் நாவலில் **குழந்தைவேல் மகளின் பெயரைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

   ii) வாடா மலர் நாவலின் **மொழிநடை** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

9. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

அப்போது குப்பைத் தொட்டியில் எறியப்பட்ட எச்சில் இலைகளுக்காக ஏழைத் தமிழ்ச் சிறுவர் இருவர் ஓடி வந்தார்கள். அவர்களிடமிருந்து தப்பிய சில இலைகளுக்காக நாய்கள் இரண்டு வந்தன. சிறுவர் இருவரும் ஒத்துப் போனார்கள். ஆனால், நாய்கள் ஒன்றை ஒன்று சீறின; ஊண்பதைவிட உறுமுவதில் நேரத்தைக் கழித்தன. அவற்றை உற்றுப் பார்த்துக் கொண்டிருந்த தானப்பன், "நல்ல நாய்கள்" என்றான்.

"ஏன்? என்ன புதுமை கண்டாய்?" என்றேன்.

" நேற்று இரவு ஒரு பெரிய வீட்டுக்குப் போயிருந்தேன். தெருவில் நாய் ஒன்று என்னைத் தொடர்ந்து வந்து குரைத்தது. நான் விரைந்து நடக்க நடக்க, பின்னேயே துரத்தி வந்தது. நடக்காமல் நின்று உற்றுப் பார்த்தேன். தொலைவிலேயே நின்று குரைத்தது. கையில் ஒரு கல் எடுத்து அதை நோக்கிச் சென்றேன். வாலை மடக்கியபடியே திரும்பித் திரும்பிப் பார்த்துக் குறைத்துச் சென்றது. அதன் குரல் ஒடுங்கியது. **உலகம் இப்படித்தான்** என்று உணர்ந்தேன். நாம் அஞ்சி அடங்கி நடக்கிற வரையில் மற்றவர்கள் மிரட்டுகிறார்கள்; ஏய்க்கிறார்கள். எதிர்த்து நின்று நம் வல்லமையைக் காட்டத் தொடங்கினால், அடங்கிவிடுகிறார்கள்.

"காந்தியடிகள் முதலான உயர்ந்த சான்றோர்கள் அடக்குமுறையை மதிக்கவே இல்லை. உரிமைக்குத்தான் மதிப்புக் கொடுத்தார்கள்" என்றேன்.

"அவர்கள் பிறருக்கு அடங்கவும் இல்லை. பிறரை அடக்கவும் இல்லை. அப்படி எல்லார்க்கும் ஒத்த உரிமை தந்து வாழ்கிறவர்கள்தான் மனிதர்கள். ஆனால், இந்தச் சமுதாயத்தில் எல்லாத் துறையிலும் நாய்களையே பார்க்கலாம். கோடியில் ஒருவர்தான் மனிதராக இருக்கிறார்" என்றான். பிறகு என் கைகளை விட்டு விடைபெற்றான்.

(அத்தியாயம் 20, பக்கம் 183-184)
(மல்டி எடுகேஷனல் புக் எண்டபிரஸ் 2020)

(i) இச்சூழலில் வெளிப்படும் தானப்பனின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(ii) இச்சூழலில் காணப்படும் **படிப்பினை** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 புள்ளி)

(iii) **"உலகம் இப்படித்தான்"** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 புள்ளி)

(iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 புள்ளி)

[15 புள்ளி]

## பாகம் இரண்டு

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கட்டுரையாக மூன்று கட்டுரைகள் எழுதுக.

### பிரிவு ஒன்று : கவிதை

### பெண்கள் விடுதலைக் கும்மி

பெண்கள் விடுதலை பெற்ற மகிழ்ச்சிகள்
பேசிக் களிப்பொடு நாம்பாடக்
கண்களிலே ஒளி போல உயிரில்
கலந்துஒளிர் தெய்வம் நல் காப்பாமே. (கும்மி)

கும்மி யடி! தமிழ்நாடு முழுதும்
குலுங்கிடக் கைகொட்டிக் கும்மியடி!
நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின
நன்மை கண்டோம் என்று கும்மியடி! (கும்மி)

ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமைஎன்று
எண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்;
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற
விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார். (கும்மி)

மாட்டை அடித்து வசக்கித் தொழுவினில்
மாட்டும் வழக்கத்தைக் கொண்டு வந்தே,
வீட்டினில் எம்மிடம் காட்டவந்தார், அதை
வெட்டி விட்டோம் என்று கும்மியடி! (கும்மி)

நல்ல விலைகொண்டு நாயை விற்பார், அந்த
நாயிடம் யோசனை கேட்பது உண்டோ?
கொல்லத் துணிவுஇன்றி நம்மையும் அந்நிலை
கூட்டிவைத்தார் பழி சூட்டி விட்டார். (கும்மி)

கற்பு நிலைஎன்று சொல்லவந்தார், இரு
கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்;
வற்புறுத்திப் பெண்ணைக் கட்டிக் கொடுக்கும்
வழக்கத்தைத் தள்ளி மிதித்திடுவோம். (கும்மி)

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும்
பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்;

எட்டும் அறிவினில் ஆணுக்கு இங்கேபெண்
இளைப்பில்லை காண்என்று கும்மியடி!(கும்மி)
வேதம் படைக்கவும் நீதிகள் செய்யவும்
வேண்டி வந்தோம் என்று கும்மியடி!
சாதம் படைக்கவும் செய்திடுவோம்; தெய்வச்
சாதி படைக்கவும் செய்திடுவோம். (கும்மி)

காதல் ஒருவனைக் கைபிடித்தே, அவன்
காரியம் யாவிலும் கைகொடுத்து,
மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்
மாட்சிபெறச்செய்து வாழ்வமடி! (கும்மி)

**மகாகவி சுப்பிரமணிய பாரதியார்**

10 மேற்காணும் கவிதையின் **கருத்துகளைத் தொகுத்து** எழுதுக. [20 புள்ளி]

**அல்லது**

11. மேற்காணும் கவிதையை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**காவியமும் ஓவியமும்**

எழுத வேண்டுமென் றுணர்வு தூண்டப்
படிப்பறை சென்று பற்றினேன் தூவல்**;**
பழந்தாள் பொறுக்கிப் படியச் செய்தே
உணர்வுக் கலவையை ஓட விட்டேன்**;**
என்னை மறந்தே எழுதும் வேளையில்

ஏதோ ஒன்றென் உடலில் உரசும்
உணர்வு தோன்றினும் உளந்திருப் பாமல்
பாட்டாய்க் கனிந்து படைத்த வேளையில்
பாட்டுத் தேனைப் பாய்ச்சிய தூவல்
பறிபோ யிற்றுப் பதறி எழுந்தேன்!
புத்தம் புதிய புத்தகத் தினிலே
என்னிடம் பறித்த எழுது கோலால்
என்மகன் ஏதோ எழுத லுற்றான்!
காற்றொடு காற்றாய்க் கடலொடு கடலாய்ப்
பூவொடு பூவாய்ப் புனலொடு புனலாய்
ஒன்றிப் பாட்டாய் உணர்வின் எல்லையில்
நின்றிவ் வுலகை மறந்த வேளையில்
பிள்ளைப் பாசமா பிறக்கும்**?** உடனே
விரைந்து நூலை வெடுக்கெனப் பிடுங்கினேன்**;**

தூவலைப் பற்றித் தொடர்ந்தேன் பணியை.
வெம்பிய மகன்குரல் விழுந்தது செவியில்
மனமோ படைப்பின் வழியில் நடந்ததால்
மகனின் குரலோ மங்கித் தேய்ந்தது.
உணர்வு முற்றும் உருவங் கொண்டதும்
உற்ற பெருமிதம் உரைத்தல் கூடுமோ**?**
உலகெலாம் கையில் ஒடுங்கிய மகிழ்வில்
படைத்தஎன் பாட்டைப் படிக்கத் தொடங்கினேன்.
**'**அத்தான்**'** என்றொரு குரல்செவி மேவத்
திரும்பிப் பார்த்தேன்**;** மனையாள் ஆங்கே**,**
**"**உங்கள் திருமகன் உயர்கை வண்ணம்
பாரும்!" என்று பல்லெலாம் தெரியச்
சிரித்து நின்றாள்**;** திரும்பினேன்! அட்டா!

எந்தக் கலைஞனும் எழுதிட முடியா
ஓவியக் காட்சிகள் ஒளிர்ந்தன சுவரில்!
அடுப்புக் கரியுடன் அருமை மகன்தான்
ஆங்கே அருங்கலை மணிபோல்
தேங்கும் மகிழ்ச்சி சிறக்கநின் றனனே!
கவிஞர் முரசு நெடுமாறன்

(i) இக்கவிதையில் காணப்படும் **நயங்கள்** மூன்றனை விளக்கி எழுதுக**.** (10 *புள்ளி*)

(ii) இக்கவிதையில் காணப்படும் **படிப்பினைகள்** மூன்றனை விளக்கி எழுதுக**.**

(10 *புள்ளி*)

[20 புள்ளி]

**பிரிவு இரண்டு : நாடகம்**

12 (i) இளங்கோச் சோழனின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

(ii) பிசிராந்தையார் நாடகத்தின் **மொழிநடைகள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

**அல்லது**

13 i) பிசிராந்தையார் நாடகத்தில் பச்சைக்கிளியின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

ii) பிசிராந்தையார் நாடகம் உமக்குள் ஏற்படுத்திய **தாக்கங்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

[20 புள்ளி]

**பிரிவு மூன்று : நாவல்**

14 வாடா மலர் நாவலில் குழந்தைவேலின் **பாத்திரப்படைப்பை** ஆராய்ந்து எழுதுக. [20 புள்ளி]

**அல்லது**

15 வாடா மலர் நாவலின் **கதைச்சுருக்கத்தை** எழுதுக.

[20 புள்ளி]

**முற்றுப் பெற்றது**
**SOALAN TAMAT**

## விடைப்பட்டி
## தொகுதி 4

| எண் | விடை | புள்ளி |
|---|---|---|
| .1 | அறிவு | 2 |
| .2 | ஓசைநயம்<br>**எதுகை**<br>கு**ண**ம்விட்டுச் – இ**ன**ம்விட்டுச்<br>ப**ண**ங்கண்டு – உ**ன**க்கொன்று<br><br>**மோனை**<br>**கு**ணம்விட்டுக் – **கு**வலயம்<br>**இ**னம்விட்டுச் – **இ**யல்பினர்<br>**ப**ணங்கண்டு – **பா**ங்கினைப்<br>**உ**னக்கொன்று – **உ**யர்ஞான<br><br>**சந்தம்**<br>குணம்விட்டு – இனம்விட்டு<br><br>(ஏதேனும் 2) | 4 |
| 3 i) | இலக்கின்றி / குறிக்கோளின்றி/ இலட்சியமின்றி/ நோக்கமின்றி | 2 |
| 3 ii) | • நாம் நல்ல வழியில் செல்ல வேண்டும்<br>• நல்ல பழக்கவழக்கங்களைக் கடைபிடிக்க வேண்டும்<br>• தீய பழக்கவழக்கங்களிலிருந்து ஒதுங்கி இருக்க வேண்டும்ஈடுபடக்கூடாது/<br>• நாம் எதனையும் அறிவால் உணர்ந்து செயல்படும் மிக உயரிய வழியில் நடக்க வேண்டும்.<br><br>(ஏதேனும் 1) | 2 |
| 4 | கனக சுப்புரத்தினம் | 2 |
| 5 i) | • இளங்கோச் சோழன்<br>• செங்கோச் சோழன் | 2 |
| 5 ii) | மூவேந்தர் ஆட்சிக்காலம் / சேர,சோழ,பாண்டிய ஆட்சிக்காலம்/ அதிகாலை/ காலை/ நண்பகல்/நடுப்பகல்/ முன்மாலை/ மாலை/ முதுமாலை/ பின்னிரவு/ முன்னிரவு/ நள்ளிரவு<br>(ஏதேனும் 1) | 2 |
| 6 i) | • துணிவு மிக்கவர்<br>• சமயோசித அறிவு கொண்டவர் | 2 |
| 6 ii) | ஓலை உத்தி/ நிரட்சி உத்தி | 2 |
| 6 iii) | சோழனின் படை பாண்டிய நாட்டிற்குள் வருவதற்கு முன் | 2 |
| 6 iv) | பாண்டிய நாட்டு ஒற்றன் மூலம் சோழனின் படை முள்ளிக்கோட்டத்தின் எல்லையை அடைந்து விட்டது என்று பாண்டியன் அறிவுடை நம்பி அறிகிறான். மாபெரும் புகழ்பெற்ற சோழனின் நிலையை எண்ணி பாண்டியன் கலங்குகிறான். இதில் ஏதோ சூழ்ச்சி உள்ளது என்று கூறி பாண்டிய அரசரை அமைச்சர் அமைதிப்படுத்துகிறார். | 3 |

| | | |
|---|---|---|
| 7 | மு. வரதராசன் | 2 |
| 8 i) | நறுமலர் | 2 |
| 8 ii) | பேச்சுவழக்கு/ வருணனை/ மொழியணிகள்/ வசைமொழி/ இலக்கிய நடை/ உருவகம்/ திசைச்சொற்கள்(ஆங்கிலம்)/ செய்யுள்<br>(ஏதேனும் 1) | 2 |
| 9 i) | • தனது கருத்தில் உறுதியாக இருப்பவன்<br>• விழிப்புடன் செயல்பட நினைப்பவன<br>• துணிவு மிக்கவன்<br>(ஏதேனும் 2) | 2 |
| 9 ii) | நாம் மற்றவர்களுக்கு அடிமையாக வாழக்கூடாது | 2 |
| 9 iii) | இக்காலத்தில் எல்லாத்துறைகளிலும் மற்றவர்களை அடக்கி ஒடுக்கி வாழ விரும்புபவர்களே அதிகம். | 2 |
| 9 iv) | குழந்தை வேல் திருமணம் முடிந்த தானப்பனுக்குத் தன் அம்மா வீட்டில் விருந்துக்கு ஏற்பாடு செய்கிறான். விருந்து முடிந்து விடைபெறும் போது, தங்களுக்குள் உள்ள நட்பு நீடித்து இருக்க வேண்டும் என்ற விருப்பத்தைக் கூறுகிறான் தானப்பன். அப்பொழுது எச்சில் இலைகளை இரண்டு ஏழைச்சிறுவர்கள் எடுத்துச்செல்கிறார்கள். பின்னர் நாய்கள் எச்சில் இலைகளுக்காக சண்டை இடுவதைக் கண்டு, உரையாடும் போது இச்சூழல் இடம்பெறுகிறது. | 3 |
| 10 | **தொகுத்தல்: தெரிநிலை,புதைநிலைக் கருத்துகள்**<br>முன்னுரை :-<br>கவிதைத் தலைப்பு : பெண் விடுதலைக் கும்மி<br>கவிஞர் : சி.சுப்பிரமணியன்<br>பாடுபொருள் : பெண்ணுரிமை<br>கேள்வியையொட்டிய வாக்கியம் : சிந்திக்கத் தூண்டும் வகையில் பெண் விடுதலையைப் பற்றி முன்வைக்கிறார் கவிஞர்.<br><br>கருத்துகள் : தெரிநிலைக் கருத்துகள்<br><br>1. பெண்கள் பல வகையான அடக்குமுறைகளிலிருந்தும் அடிமைத் தனத்திலிருந்தும் விடுபட்டு விட்டார்கள். விடுதலை பெற்றுவிட்டதைப் பற்றிப் பேசி மகிழ்ந்து பாடுகின்றவேளையில் நம் உயிரில் கலந்து அருள் தரும் தெய்வம் துணை நிற்கட்டும்.<br><br>2. தமிழ்நாடு முழுமையும் பெண்கள் விடுதலையை எண்ணி மகிழ்ந்திட கும்மியடித்துக் கொண்டாட வேண்டும். பெண்ணினத்தை அடிமைப்படுத்திய தீய சக்திகள் விலகி நல்வினைகள் சூழ்ந்ததை எண்ணிக் கொண்டாட வேண்டும்.<br><br>3. பெண்கள் கல்வி பெறுவது ஆகாது என்று எண்ணம் கொண்டவர்களெல்லாம் அழிந்து போனார்கள்மேலும்., பெண்கள் வெளி உலகம் அறியாமல் இருக்கவேண்டும் என்ற மாறுபட்ட எண்ணம் கொண்ட மனிதர்கள் அவமானப்பட்டது பெண்ணினத்திற்குக் கிடைத்த விடுதலை. | முன்னுரை : 2<br><br>கருத்துகள் : 15<br><br>முடிவுரை : 2<br><br>மொழி : 1<br><br>(20 புள்ளி) |

| | | |
|---|---|---|
| | 4. மாட்டை அடித்துத் துன்புறுத்தி தொழுவத்தில் கட்டி வைக்கும் வழக்கத்தைப் போன்று வீட்டில் பெண்களிடமும் வன்முறை நிகழ்த்த வந்தவர்களை வீழ்த்தியதை எண்ணி கும்மியடித்துக் கொண்டாடி மகிழவேண்டும்.<br><br>5. அதிக விலை கொடுத்து நாய்கள் விற்றாலும் அவற்றிடம் ஆலோசனைகள் கேட்கப்படுவதில்லை இப்படி இழிவாகக். கருதப்பட்ட பெண்களைக் கொல்ல துணிச்சல் இன்றி நம்மையும் இத்தகைய செயல்களுக்கு உடந்தையாக்கினர். அதேவேளையில் பெண்களின் மீது தீராப் பழியைச் சுமத்திவிட்டனர்.<br><br>6. கற்பெனப்படுவது ஆண்,பெண் இருவருக்கும் பொதுவானதே எனும் புரிதலை முன்னெடுக்க வேண்டும் பெண்களின் அனுமதியின்றிக். கட்டாயத் திருமணங்கள் செய்துவைக்கும் வழக்கத்தை அடியோடு போக்கிடவேண்டும்.<br><br>**7.** உலகில் உயர் பதவிகள் கொண்டு வழிநடத்துவதும் பொது ஒழுங்கமைப்பை உறுதி செய்யும் விதிகளை அமைப்பதிலும் பெண்கள் முனைந்துவிட்டார்கள்ஆணுக்கு . இணையான அறிவை உடைய பெண் எந்நிலையிலும் குறைந்தவளில்லை என்பதை எண்ணி மகிழ்ந்து கொண்டாடவேண்டும்.<br><br>**8.** வாழ்க்கையின் நெறிகளை இயற்றவும் அறத்தை நிலைநாட்டவும் பெண்கள் புறப்பட்டுள்ளனர் என்பதை எண்ணிக் கொண்டாட வேண்டும்பெண்களால் சமைக்கவும் . முடியும் அதேவேளையில் . .கடவுளுக்கு நிகரான தலைமுறையை உருவாக்கவும் முடியும்<br><br>9. தன் மனத்திற்குப் பிடித்த ஆணைத் திருமணம் செய்து அவன் செயல்களுக்குத் துணையாக நிற்கவேண்டும். பெண்கள் குறித்த பழமைச் சிந்தனைகளை நீக்கி அவர்களின் வாழ்க்கை நிலையை உயரச் செய்யவேண்டும்.<br><br>**புதைநிலைக் கருத்துகள்**<br>1. பெண்கள் எல்லா நிலைகளிலும் தங்களின் நிலையை உயர்த்திக்கொள்ள வேண்டும்.<br>2. ஆண் பெண் சமநிலைப் போக்கு மேலோங்க வேண்டும்.<br>3. பெண் விடுதலையின் அவசியம் உணர்த்தப்படுகிறது.<br>4. திருமணத்தை உறுதிசெய்யும் முடிவைப் பெண்களிடமும் விட வேண்டும்.<br><br>முடிவுரை<br>பாரியில் பெண்கள் சிறந்து விளங்க வேண்டும். | |
| 11 i | **நயங்கள்:**<br><br>**ஓசை நயம்**<br>**1. எதுகை**(சீர் எதுகை) :கவிதையின் தொடக்கச் சீர்களின் முதலெழுத்தின் அளவும் இரண்டாம் எழுத்தின் ஓசையும் ஒன்றிவருவது எதுகையாகும் அடிகளில் எதுகை வருதல் அடி. எதுகை எனவும் சீர்களில் எதுகை வருதல் சீர்எதுகை எனவும் பெயர் பெறும்.<br>• வே**ண்**டுமென் – தூ**ண்**ட<br>• பு**த்**தம் – பு**த்**தகத் | 10 |

- காற்றொடு – காற்றாய்க்
- கடலொடு – கடலாய்க்
- புனலொடு – புனலாய்
- வெடுக்கெனப் பி -டுங்கினேன்

**2. மோனை :**கவிதையின் தொடக்கத் சீர்களின் முதல் எழுத்து ஓசையால் ஒன்றிவருவதே மோனையாகும்.அடிகளில் மோனை வருதல் அடிஎதுகை எனவும் சீர்களில் மோனை வருதல் சீர்மோனை எனவும் பெயர் பெறும்.

- **ப**டிப்பறை – **ப**ற்றினேன்
- **ப**ழந்தாள் – **ப**டியச்
- **உ**ணர்வுக் – **ஓ**ட
- **என்**னை –**எ**ழுதும்
- **ஒ**ன்றென் -**உ**டலில் – **உ**ரசும்
- **உ**ணர்வு -**உ**ளந்திருப்
- **பா**ட்டாய்க் – **ப**டைத்த
- **பா**ட்டுத் – **பா**ய்ச்சிய
- **ப**றிபோ**ப-**தறி
- **பு**த்தம் -**பு**திய – **பு**த்தகத்
- **என்**னிடம் – **எ**ழுது
- **என்**மகன் -**ஏ**தோ – **எ**ழுத
- **கா**ற்றொடு **கா -**ற்றாய்க் -**க**டலொடு **– க**டலாய்ப்
- **பூ**வொடு -**பூ**வாய்ப் -**பு**னலொடு – **பு**னலாய்
- **ஒ**ன்றிப் – **உ**ணர்வின்
- **பி**ள்ளைப் – **பி**றக்கும்
- **வி**ரைந்து – **வெ**டுக்கெனப்
- **தூ**வலைப் – **தொ**டர்ந்தேன்
- **வெ**ம்பிய – **வி**ழுந்தது
- **ம**னமோ -**வ**ழியில்
- **ம**கனின் – **ம**ங்கித்
- **உ**ணர்வு – **உ**ருவங்
- **உ**ற்ற – **உ**ரைத்தல்
- **உ**லகெலாம் – **ஒ**டுங்கிய
- **ப**டைத்தஎன் -**பா**ட்டைப் – **ப**டிக்கத்
- **உ**ங்கள் – **உ**யர்கை
- **பா**ரும் – **ப**ல்லெலாம்
- **சி**ரித்து – **தி**ரும்பினேன்
- **எ**ந்தக் – **எ**ழுதிட
- **ஓ**வியக் **ஒ-**ளிர்ந்தன
- **அ**டுப்புக் – **அ**ருமை
- **ஆ**ங்கே – **அ**ருங்கலை
- **தே**ங்கும் -**சி**றக்கநின்

**3. இயைபு :**சீர்களின் இறுதி அசை ஒன்றிவருவது**.** கவிதை அடியில் இறுதியிலிருந்து இரண்டாம் எழுதுது ஒன்றி வருவதாகும்.

- கட**லாய்** – புன**லாய்**

- எல்லை**யில்**வேளை - **யில்**

**அணி நயம்**

1. **உவமை அணி:** ஒன்றன் பண்பு தொழில், பயன் ஆகியவை நன்கு விளங்குமாறு ஒத்ததை ஒப்பிட்டுக் கூறுவது உவமையணி இதில் . முதலில் உவமையும் அடுத்துஉவமைப்படுபொருளும் வரும்.

- அருங்கலை மணிபோல்
- காற்றொடு காற்றாய்
- கடலொடு கடலாய்
- பூவொடு பூவாய்
- புனலொடு புனலாய்

2. **உருவக அணி :**உவமையும் பொருளும் வேற்றுமை இன்றி ஒன்றென கொள்வது உருவகம் உருவக .அணியில் முதலில் உவமைப்படுபொருளும் அடுத்து உவமையும் வரும்.

- பாட்டுத்தேனை - இனிமையான பாட்டு

3. **உயர்வி நவிற்சி அணி :**இயற்கைக்கு அப்பால் நம்பவியலாத அளவு உயர்த்தியோ தாழ்த்தியோ மிகையாகக் கூறுவது.

- உலகெலாம் கையில் ஒடுங்கிய மகிழ்வில்
- எந்தக் கலைஞனும் எழுதிட முடியா
- ஓவியக் காட்சிகள் ஒளிர்ந்தன சுவரில்!

4. **தன்மை நவிற்சி அணி :**ஒன்றன் தன்மையை அப்படியே இயல்பாக அழகுபட நவில்வது தன்மை நவிற்சி அணியாகும்.

- எழுத வேண்டுமென் றுணர்வு தூண்ட
  படிப்பறை சென்று பற்றினேன் தூவல்

**பொருள் நயம்**

**1. தெரிபொருள்**

தந்தை எழுதுவதைப் பார்த்த மகன் தானும் எழுத விரும்பித் தந்தையிடமிருந்து எழுதுகோலைப் பறித்து எழுத முற்படுவதைத் தந்தை தடுத்த போதும் மனம் தளராத மகன் அடுப்புக்கரி கொண்டு சுவற்றில் அற்புதமாக ஓவியம் தீட்டியதைக் கவிஞர் நயமாகக் கூறுகின்றார்.

**2. புதைபொருள்**

படைப்புணர்வுக்கு வயது வேறுபாடில்லை ஆகவே, குழந்தைகளின் படைப்பின் ஆர்வத்தைத் தடைசெய்யாது ஆதரிக்க வேண்டும் என்பதைக் கவிஞர் நயமாகக் கூறுகின்றார்.

**சொல்நயம்**

- உணர்வுக் கலவையை
- பாட்டுத் தேனை
- அருங்கலை மணிபோல்
- தேங்கும் மகிழ்ச்சி
- மங்கித் தேய்ந்தது

| | | |
|---|---|---|
| | • உளந்திருப்பாமல்<br>• உயர்கை வண்ணம்<br>• வெம்பிய மகன் குரல்<br>• ஒடுங்கிய மகிழ்வில்<br>• குரல் செவிமேவ<br><br>(ஏதேனும் 3) | |
| 11 ii | **படிப்பினை:**<br>1. பிள்ளைகளின் கலையுணர்வைக் கட்டுப்படுத்துவது அவர்களின் ஆர்வத்தை மழுங்கச் செய்யும். **(படிப்பினை)** எந்த சூழ்நிலையிலும் பிள்ளைகளுக்குக் தொடர்ந்து கலையுணர்வை ஊக்குவிக்க வேண்டும். **(விளக்கம்)** ஆகவே, பெற்றோர் பிள்ளைகளுக்குக் கலையுணர்வு ஆர்வத்தை கட்டுப்படுத்தாமல் கொடுப்பதை உறுதி செய்ய வேண்டும். **(வலியுறுத்தல்)**<br><br>2.எந்த வேளையிலும் பிள்ளைகளின் எதிர்பார்ப்பிற்கு முன்னுரிமை கொடுக்கவேண்டும்.<br>3.பிள்ளகளின் கலைப்படைப்புகளை மதிக்கக்கூடிய மனப்பக்குவம் இருத்தல் நலம்.<br>4. உயர்ந்த கலையுள்ளம் வேண்டும்.<br>5.குழந்தையின் உளவியலை அறிந்து செயல்படவேண்டும்<br><br>***மேற்காணும் முதல் படிப்பினையின் உதாரணத்தைக் கொண்டு மற்ற படிப்பினைகளையும் விளக்குக.**<br><br>*(ஏதேனும் 3)* | 10 |
| 12 i) | **இளங்கோச் சோழனின் பண்புநலன்**<br><br>**1)தந்தையை இகழ்ந்து பேசுபவன்**<br>எ.கா: பிசிராந்தையாரிடம் தன் தந்தையைப் (சோழன்) பற்றிக் குறை கூறுகின்றான்.<br>எ.கா: பாண்டிய நாட்டின் கொலைக்குச் சோழ மன்னனும் சோழ நாடும் காரணம் என பொய்யுரைத்து இகழ்கின்றான்.<br>எ.கா: சோழன் முதுமை அடைந்துவிட்டதாகவும் பதவி ஆசை கொண்டவனென்றும் குறை கூறுகிறான்.<br><br>**2)ஆட்சி மேல் ஆசை கொண்டவன்**<br><br>எ.கா: இளங்கோ, மணியிடையிடம் தான் சோழ நாட்டு அரசனாவேன் என்று ஆசை வார்த்தைகள் கூறுகிறான்.<br>எ.கா: தன் தந்தையிடம் பதவி விலகி அரச பொறுப்பை ஒப்படைக்க வேண்டும் என்று படை அனுப்புகிறான்.<br>எ.கா: பதவியைப் பிடிப்பதற்காகப் பல சூழ்ச்சிகளைச் செய்கிறான். பிசிராந்தையாரிடம் பொய்யுரைத்தல், சோழனுக்கு அறிவுரை கூறச்சொல்கிறான்.<br><br>**3)தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்கும் தன்மை உடையவன்** | 10 |

| | | | |
|---|---|---|---|
| | எ.கா: தன் தந்தையிடம் செய்த தவற்றை உணர்ந்து மன்னிப்புக் கேட்கின்றான்.<br><br>**4)வஞ்சக எண்ணம் கொண்டவன்**<br>எ.கா: அரியணை ஏறும் பேராசையால், பரூஉத்தலையாரை நயவஞ்சகமாகத் தன் பக்கம் இழுக்கிறான்.<br><br>*(ஏதேனும் 3)* | |
| 12 ii | **பிசிராந்தையார் நாடகத்தின் மொழிநடை**<br><br>**1)இலக்கிய நடை**<br>(இலக்கிய நயத்தோடு ஆசிரியர் படைத்திருக்கும் வரிகள்)<br>எ.கா: தூக்கிய கத்தி அவளின் துணுக்குற்ற விழி கண்டும் தாக்கத் துணிந்த துண்டா? ஏந்திய கொடுவாள் கண்ட ஏந்திழையின் மாந்தளிர் மேனி நடுங்கக் கண்டும் மாய்ந்திடச் செய்யும் மனமும் வருமா?<br>எ.கா: காற்றும் மழையும் கை கோர்த்து ஆடி மகிழ்ந்தபடி துடுக்குத் தனத்தையும் தொடங்கி விட்டன. என்ன இது? பூக்களின் இதழும் ஈக்களின் குரலும் நனைந்தன.<br><br>**2) பேச்சு வழக்கு**<br>(அன்றாட வாழ்வில் மக்கள் இயல்பாகப் பேசும் மொழியாகும்)<br>எ.கா:<br>பச்சைக்கிளி: பள்ளிக்குச் செல்வது உனக்குப் பெருங்கசப்பு, சென்றுவிட்டால் அங்குச் சிறிது நேரம் தங்கியிருப்பதும் பிடிக்கிறதில்லை.<br>பொன்னன்: அப்பா இலந்தைப் பழம் கொண்டாருவாங்க.<br>எ.கா:<br>ஓடைப்பூ: ஐயோ! ஐயோ! என் வாழ்வு என்ன ஆவது மாமா? கொண்டை நிறையப் பூ வைத்துக் கொள்வதில் உனக்கு விருப்பமில்லையா? நெற்றி நிறையப் பொட்டிட்டுக் கொள்வதில் உனக்கு விருப்பமில்லையா?<br>உடையப்பன்: ஒரு மீன், ஒரே மீன் அகப்படட்டுமே!<br><br>**3)காதல் மொழி**<br>(அன்பில் இணைந்த இருவரிடையில் எழும் அன்புமொழி)<br>எ.கா:<br>பச்சைக்கிளி: என் நாணம் என் வாயை அடைக்க வேண்டாம். நான் உன்னைத்தான் மணப்பேன்.நீயும் அப்படித்தானே?<br>மான்வளவன் : அப்படியானால் நம் பெற்றோருக்குத் அறிவிப்போம் நம் கருத்தை.<br>எ.கா:<br>மணியிடை: வராதிருந்தாலும் வருத்தம் உண்டாகாது.<br>இளங்கோ: வந்ததால்?<br>மணியிடை: பிரியத்தானே நேரும்? என் மனம் படும்பாடு எனக்கல்லவா தெரியும்? | 10 |

| | | |
|---|---|---|
| | **4)வருணனை**<br>(ஒன்றின் தன்மையையும் இயல்பையும் சுவைபட அழகிய மொழியில் வெளிப்படுத்துதல்)<br><br>எ.கா:<br>பாண்டியன்:தூங்காமணி விளக்கத்தைத் தூக்கிக் கொண்டு ஓடிய கள்ளனைப்போல வெள்ளிய நிலாவை அள்ளிக் கொண்டு போய் மறைத்தது கருமுகில், நள்ளிருள் உலகுக்குத் திரையிட்டது.<br>எ.கா:<br>பிசிராந்தையார்: அன்னச் சேவல்! அன்னச் சேவல்! ஆடுகொள் வென்றி அடுபோர் அண்ணல் நாடுதலை யளிக்கும் ஒண்முகம் போலக் கோடுகூடு மதியம் முகிழ்நிலா விளங்கும்<br>**5) சந்தநடை/ அடுக்கு மொழி**<br>(ஒத்த ஓசையுடைய சொற்களை அடுக்கிச் சுவைபடக் கூறுதல்)<br>எ.கா:<br>மேற்படியார்: இரும்படி உன் நெஞ்சம் என்றேன். ஒரு பணம் தரும்படி கேட்டாள். அரிசி வரும்படியிருந்தால் தானே! திரும்படி உன் ஆத்தாள் வீட்டுக்கு என்றேன். பெரும்படி வருந்தினாள். அங்கிருந்து முடியவில்லை. இங்கு வரும்படி நேர்ந்தது.<br>எ.கா:<br>பிசிராந்தையார்: மேற்படியார் கீழ்ப்படியாராகி விட்டார்.<br><br>எ.கா:<br>முளரி: பொன்னை நடுவிற் சுமந்த புன்னை, அண்டையில் அலறி மாணிக்கத் தென்னை<br><br>**6)வசைமொழி**<br>(கோபத்தைக் காட்டும் கடுஞ்சொற்களைப் பயன்படுத்தி ஒருவரைத் திட்டுதல்)<br>எ.கா:<br>அரசன்: அடே, ஆள எண்ணமா? இல்லை மாள எண்ணம் கொண்டுவிட்டாய்? முன்னேறித் தாக்குவோம். ஏறுங்கள் அண்டியூர்ச்சாலை நோக்கி.<br>எ.கா:<br>பாண்டியன்: நானும் படையுடன் இதோ வந்துவிட்டேன்.இழித்துப் பேசிய சோழன் வாயைக் கிழித்துப் போடுகின்றேன் இதையும் சொல் போ!.<br><br>**7)மொழியணிகள்**<br>(பழமொழி, மரபுத்தொடர், இணைமொழி, உவமைத்தொடர்)<br>எ.கா:<br>உவமைத்தொடர்:<br>ஒன்றையொன்று தொடரும் கடலலை போல்<br>சிங்கத்தைக் கண்ட நரிகள் போல<br>இரட்டைக் கிளவி: | |

| | | |
|---|---|---|
| | கடகட, தகதக<br><br>சிலேடை:<br>நகை தந்து நகை பறித்தார்<br><br>**8) இசைமொழி**<br>(பாராட்டுதல்)<br>எ.கா:<br>பாண்டியன்: பாவேந்தரின் மதிப்பைப் பெற்ற கோப்பெருஞ்சோழன் எத்துணை<br>நற்பண்புள்ளவனாயிருக்க வேண்டும்! அப்பெரியோனா இங்ஙனம் வஞ்சப் போர்க்கு முந்துவான்?<br>*3 ஏதேனும்))* | |
| 13 i) | **பச்சைக்கிளி பண்புநலன்**<br><br>**1)பெற்றோரிடம் உண்மையைக் கூறும் இயல்புடையவள்**<br>எ.கா:<br>தன் தாயாரிடம் தூயனைப் பற்றிய உண்மையைக் கூறுகிறாள்.<br><br>**2)அழகை இரசிப்பவள்**<br>எ.கா:<br>மான் (மான்வளவன்) ஆடுவதைக் கண்டு பச்சைக்கிளியும் தன்னை மறந்து கை கால்களை அசைத்து நடனமாடுகிறாள்.<br><br>3**)செய்ந்நன்றி மறவாதவள்**<br>எ.கா:<br>தன்னைக் காப்பாற்றிய தூயனை வீட்டிற்கு அழைத்துச் சென்று பெற்றோரிடம் அறிமுகப் படுத்துகிறாள்.<br><br>தூயனுக்கு வீட்டில் தங்குவதற்கு இடமளிக்க வேண்டுமென்று தாயாரிடம் வேண்டுகிறாள். | 10 |
| 13 ii) | **பிசிராந்தையார் நாடகத்தின் தாக்கம்**<br><br>1) நான் செய்த தவறுக்குப் பொறுப்பேற்பேன் .**(கருத்து)**<br>இக்கருத்தின்வழி செய்த தவறுக்குப் பொறுப்பேற்க வேண்டுமேன நான் உணர்ந்தேன். **(தாக்கம்)** ஆகவே, தவறுகள் செய்தால் நான் அதனை ஒப்புக்கொள்வேன். **(தீர்வு)**<br><br>2) பதவி ஆசை, உறவுகளிடையே சிக்கலை உண்டாக்குவது வருத்தமளிக்கிறது.<br><br>3) நட்புக்கு வயது, உருவம், நிறம், தகுதி போன்றவை கிடையாது . மாறாக, ஒத்த உணர்வே முக்கியம் என்பதை உணர்ந்தேன்.<br><br>4) மன்னர் சிறப்பாக ஆட்சி செய்தால் மக்கள் அவருக்காக உயிரையும் கொடுக்க முன்வருவர் என்பதை எண்ணிப் பெருமிதம் கொண்டேன். | 10 |

| | | |
|---|---|---|
| | 5) கணவன் மனைவியிடையே சந்தேக உணர்வு தோன்றினால் அது குடும்பத்தைச் சீரழித்துவிடும் என உணர்ந்து கொண்டேன்.<br><br>6) துன்பத்தையும் நகைச்சுவையோடு ஏற்றுக்கொள்ளும் பக்குவத்தை எண்ணி வியந்தேன்.<br><br>7) அறத்தைப் பின்பற்றி வாழ்வோரை எண்ணி மகிழ்ச்சியடைகிறேன்.<br><br>***மேற்காணும் முதல் தாக்கத்தின் உதாரணத்தைக் கொண்டு மற்ற தாக்கங்களையும் விளக்குக.**<br><br>*(ஏதேனும் 3)* | |
| 14 | **வாடா மலர் நாவலில் குழந்தை வேலின் பாத்திரப்படைப்பு**<br><br>**முன்னுரை:-**<br>நாவல் : வாடா மலர்<br>ஆசிரியர்: மு.வரதராசன்<br>கருப்பொருள் :நல்வாழ்விற்கு அன்பபே ஆதாரம்<br>கேள்வியையொட்டிய வாக்கியம் :இந்நாவலில் குழந்தை வேலின் பாத்திரப்படைப்பை கவிஞர் விளக்குகிறார்.<br><br>**கருத்துகள்:**<br>**1. நல்ல நட்பின் தன்மைகளை உணர்த்தப் படைக்கப்பட்டுள்ளது**<br>எ.கா<br>-குழந்தைவேல், தன் பால்ய நண்பனான தானப்பன்மீது மிகுந்த அன்பும் அக்கறையும் கொண்டவனாக இருக்கிறான்.<br>-தானப்பனின் இன்ப துன்பங்களில் முழுமையாகப் பங்கு கொள்கிறான்.<br>-தானப்பனுக்குத் துன்பம் வந்தபோதெல்லாம் அதனைக் களைய முற்படுவதோடு அவன் துன்பத்தை எண்ணித் தானும் துன்பம் அடைகிறான்.<br>-சந்தர்ப்பச் சூழ்நிலை தானப்பனின் வாழ்க்கைப் போக்கை மாற்றியதை எண்ணி இரக்கப்படுகிறான்; அவனை அதிலிருந்து காப்பாற்றவும் முனைகிறான்.<br>-நல்ல நண்பனிடம் இருக்க வேண்டிய தன்மைகளை உணர்த்தவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.<br><br>**2.நல்ல மகனின் பொறுப்புகளை உணர்த்தப் படைக்கப்பட்டுள்ளது**<br>எ.கா<br>-குழந்தைவேல், தன் பெற்றோருக்குச் செல்ல மகனாக இருக்கிறான்.<br>-இருந்தபோதிலும், தன் பெற்றோரின் விருப்பத்திற்கு இணங்கி, அடங்கி நடக்கிறான்.<br>-தன் பட்டப்படிப்பை முடித்த பின்னரும்கூட தனது வாழ்க்கைத்துணை, தொழில் போன்றவற்றை நிர்ணயம் செய்வதில் தன் பெற்றோரின் ஆலோசனையைக் கேட்டு நடக்கிறான்.<br>-மனைவி, தன் பெற்றோரை மதிக்காமல் நடக்கும் காலத்திலும் மிக நல்ல மகனாக, அவர்களின் உள்ளம் கோணாதவாறு நடந்து கொள்கிறான். | முன்னுரை : 2<br><br>கருத்துகள் : 15<br><br>முடிவுரை : 2<br><br>மொழி : 1<br><br>(20 புள்ளி) |

-ஒரு நல்ல மகனின் பொறுப்புள்ள குணங்களை உணர்த்தவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

3.**நல்ல மாணவனின் கடமைகளைப் புலப்படுத்தப் படைக்கப்பட்டுள்ளது**

எ.கா

-குழந்தைவேல், தன் இளமைப் பருவத்தைச் சுதந்திரமாக ஆடிப்பாடிக் கழித்தாலும் கல்வியில் கவனம் உள்ளவனாகவே இருக்கின்றான்.

-பட்டணத்தில் உள்ள கல்லூரியில் சேர்ந்து படிக்கும் காலத்தில் பலதரப்பட்ட பழக்கவழக்கங்களையுடைய மாணவர்களைச் சந்திக்கிறான்.

-இருப்பினும், நல்ல பழக்கவழக்கங்களை உடையவர்களுடன் மட்டும் நட்பு கொள்வதோடு கல்விகேள்விகளில் சிறந்து விளங்குகின்றான். -பி.ஏ. தேர்வில் முதல் வகுப்பில் தேறுகின்றான்.

-படிக்கும்போது பெறும் தகுதியே எதிர்கால வாழ்வுக்கு அடிப்படை என்பதால் மாணவர்கள் தம் கடமை உணர்ந்து படிக்க வேண்டும் என்பதைத் தெளிவுபடுத்தவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

**4.இல்லற வாழ்க்கைச் சிக்கலைச் சமாளிக்கும் முறைகளை விளக்கப் படைக்கப்பட்டுள்ளது**

எ.கா

-குழந்தைவேல், மிக நல்லவனாக இருந்தபோதும் அவனது இல்லற வாழ்வின் தொடக்கத்தில் பல சிக்கல்களைச் சந்திக்கும் சூழல் ஏற்படுகின்றது.

-மனைவியின் பிடிவாத குணத்தாலும் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து கொள்ளும் தன்மையாலும் மனதளவில் மிகுந்த வேதனைக்கு ஆளாகின்றான். இருப்பினும், ஒவ்வொரு சிக்கலையும் பொறுமையாகவும் சாதுர்யமாகவும் எதிர்கொண்டு இறுதியில் வெற்றி பெறுகிறான்.

-இருவேறு சூழலில் வளர்ந்தவர்கள் இல்லற வாழ்வில் இணையும்போது ஏற்படும் சிக்கல்களை விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையின்வழி களைய முடியும் என்பதைக் காட்டவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

**5. அன்பான வளர்ப்புமுறையும் வழிகாட்டலும் அவசியம் என்பதை உணர்த்தப் படைக்கப்பட்டுள்ளது**

எ.கா

-குழந்தைவேலின் தாயும் தந்தையும் மிகவும் நல்லவர்களாகவும் அன்பானவர்களாகவும் இருக்கின்றனர்.

-எனவே, குழந்தைவேல் சிறு வயது முதற்கொண்டு தாய்தந்தையரின் குறைவில்லாத அன்பிலும் வழிகாட்டலிலும் வளர்கின்ற சூழல் அமைகின்றது.

-அதனால்,அவனிடம் அன்பு, அடக்கம், பொறுமை, ஒழுக்கம் போன்ற நல்ல குணங்கள் வேரூன்றுகின்றன.

-இந்தக் குணங்களே பின்னாளில் அவன் தன் வாழ்க்கைச் சிக்கல்களை நல்ல முறையில் களைந்து வாழ்வைச் சீராக நடத்துவதற்கு உதவுகின்றன.

-குழந்தைகளுக்கு அன்பும் வழிகாட்டலும் அவசியம் என்பதைப் புலப்படுத்தவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| | **6.கொள்கைப் பிடிப்பு உள்ளவர்களே ஒழுக்கமாக வாழ முடியும் என்பதை உணர்த்தப் படைக்கப்பட்டுள்ளது**<br>எ.கா<br>உலகம் நல்லவர்களையும் கெட்டவர்களையும் தன்னகத்தே கொண்டது.<br>-எனவே, ஒருவர் நல்லவராகவும் ஒழுக்கமாகவும் வாழ வேண்டுமானால் மிகத் தெளிந்த மனத்துடன் கொள்கைப் பிடிப்போடு இருக்க வேண்டும்.<br>-குழந்தைவேல் அத்தகைய கொள்கைப் பிடிப்புள்ளவனாகப் படைக்கப்பட்டுள்ளான்.<br>-தானப்பன் தன் நெருங்கிய நண்பன் என்ற போதிலும் அவனிடமிருக்கும் தீய பழக்கங்களைக் குழந்தைவேல் வெறுக்கிறான்.<br>-அவன் தேர்தலில் ஈடுபடும்போது அதிலிருந்து விலகி நிற்கிறான். -அறவழியில் மட்டுமே பொருள் ஈட்ட வேண்டுமென்ற எண்ணமும் இருப்பதால் வரவுக்கேற்ற செலவு செய்து ஆடம்பரமில்லாமல் எளிமையாக வாழ்கிறான்.<br>-ஒழுக்கமாக வாழ விரும்புவோர் கொள்கைப் பிடிப்போடு இருக்க வேண்டும் என்பதை உணர்த்தவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.<br><br>முடிவுரை<br>வாடா மலரில் நாவலாசிரியர் குழந்தை வேலின் பாத்திரப்படைபை வெளிப்படுத்துவது போல இன்றைய இளையோர் சமுதாயம், அறநெறியைப் பின்பற்றி மிக உயரிய வழியில் நடக்க வேண்டும்.<br><br>*(ஏதேனும் 5)* | |
| 15 | **வாடா மலரின் நாவலின் கதைச்சுருக்கம்**<br>**முன்னுரை:-**<br>நாவல் : வாடா மலர்<br>ஆசிரியர்: மு.வரதராசன்<br>கருப்பொருள் :நல்வாழ்விற்கு அன்பபே ஆதாரம்<br>கேள்வியையொட்டிய வாக்கியம் :இந்நாவலின் கதைச்சுருக்கம் வாசகர்களை இந்நாவலை முழுமையாக வாசிக்க தூண்டும் வகையில் அமைந்துள்ளது.<br><br>**கதைச்சுருக்கம்**<br><br>-குழந்தைவேலும் தானப்பனும் இளமைக்காலம் தொட்டே நெருங்கிய நண்பர்கள். விளையாடுதல், பள்ளிக்குச் செல்லுதல் என இருவரும் ஒன்றாகவே பொழுதைக் கழிக்கின்றனர். இருவரது குடும்பத்தினரும் அன்பாய்ப் பழகி வருகின்றனர்.<br><br>-இதற்கிடையில், தானப்பனின் தாய் இறந்துவிடவே அவனது தந்தை மறுமணம் செய்து கொள்கிறார்.<br><br>-தானப்பனும் அவனது தங்கை சுடர்விழியும் சித்தியின் கொடுமைகளைத் தாங்கிக் கொண்டு வளர்கின்றனர். குழந்தைவேலும் அவனது | முன்னுரை : 2<br><br>கருத்துகள் : 15<br><br>முடிவுரை : 2<br><br>மொழி : 1<br><br><br>(20 புள்ளி) |

| | | |
|---|---|---|
| | பெற்றோரும் தானப்பன், சுடர்விழியின் நிலையைக் கண்டு வருத்தம் கொள்கிறனர்; ஆதரவாக இருக்கின்றனர்.<br><br>-சித்தியின் கொடுமை தாளாது ஒருநாள் தானப்பன் ஊரைவிட்டுச் சென்னைக்கு ஓடிவிடுகிறான். நெருங்கிய நண்பனைப் பிரிந்த குழந்தைவேல் அவனது நினைவால் வாடுகிறான்.<br><br>-நீண்ட நாள்களுக்குப் பிறகு தானப்பனிடமிருந்து கடிதம் வருகிறது. இறுதியில் சென்னையில் உணவுச் சிப்பந்தியின் மூலம் தானப்பனைப் பற்றிய உண்மைகளை அறிகிறான்<br><br>-சென்னைக் கல்லூரியில் மேற்படிப்பைத் தொடங்கிய குழந்தைவேல் பி.ஏ. தேர்வைச் சிறப்பாக எழுதிய பிறகு ஊர் திரும்புகிறான்.<br><br>-எதிர்பாராதவிதமாக இரயில் நிலையத்தில் தானப்பனைச் சந்திக்கிறான்; ஊருக்குத் திரும்பி வருமாறு குழந்தைவேல் வற்புறுத்த தானப்பன் மறுக்கிறான். இதனிடையே, குழந்தைவேலுக்கு முன்னாள் கலெக்டர் மகளான பூங்கொடியுடன் திருமணம் நடைபெறுகிறது.<br><br>-ஒருநாள், தானப்பனுடைய தந்தை மரணமடைகிறார். தானப்பன் ஊருக்குத் திரும்பி தந்தையின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்கிறான்.<br><br>-திருமணமாகிச் சென்ற சுடர்விழி ஆறாம் மாதத்தில் மகப்பேற்றுக்காகத் தாய் வீட்டிற்கு வருகிறாள். கணவர் முருகய்யாவைப் போலவே சுடர்விழியும் எளிமையான வாழ்க்கைக் கொள்கையைக் கடைப்பிடிப்பதைக் கண்டு குழந்தைவேல் வியக்கிறான்.<br><br>-இதனிடையே, தனிக்குடித்தனம் செல்ல வேண்டுமெனப் பூங்கொடி வற்புறுத்தியதால் குழந்தைவேலின் பெற்றோரும் அதற்கு ஏற்பாடு செய்கின்றனர்.<br><br>-சில காலங்களுக்குப் பிறகு தானப்பன் புலால் உணவுக்கடையைத் திறந்து பெரிய அளவில் நடத்துகிறான்; நல்ல வருமானம் ஈட்டுகிறான்.<br><br>-தானப்பனின் திருமணத்தைப் பலரும் வலியுறுத்தவே, தானப்பன் தனது கட்சி உறுப்பினரான வச்சிரநாதனின் பணவசதி படைத்த உறவுக்காரப்பெண்ணைத் திருமணம் செய்து கொள்கிறான்.<br><br>-தன் மனைவி கனகம், வச்சிரநாதனுடன் நெருங்கிய பழக்கம் கொண்டிருப்பது தானப்பனுக்குத் தெரியவருகிறது. இதனால் இருவருக்கும் மனக்கசப்பு ஏற்படவே தானப்பன் அவளைத் தாய் வீட்டிற்கே அனுப்பி வைத்துவிடுகிறான். பின்னர், நீதிமன்றத்தின் மூலம் மணவிலக்கும் பெறுகிறான்.<br><br>-மனந்திருந்திய பூங்கொடி குழந்தைவேலுவின் பெற்றோருடன் மீண்டும் கூட்டுக்குடும்பமாக வாழ முடிவெடுக்கிறாள். | |

| | | |
|---|---|---|
| | -முரட்டுத்தன்மை இல்லாத அமைதியான எளிமையான வாழ்க்கை வாழ முற்படும் தானப்பன் தேர்தலில் இனிப் போட்டியிடப்போவதில்லை எனவும் உணவுக்கடையை விற்றுவிட்டு பஸ் தொழிலை மட்டுமே இனி நடத்துவதாகவும் முடிவெடுக்கிறான்.<br><br>-அவனது மனைவி கனகம், தான் திருந்திவிட்டதாகக் கூறி மீண்டும் தானப்பனுடன் வாழ வேண்டுகிறாள்; தானப்பனும் அவளைத் தன் வீட்டில் இருக்க சம்மதிக்கிறான்.<br><br>-மனைவி என்ற தகுதியை இழந்துவிட்ட கனகம் தனது எதிர்கால வாழ்க்கையைக் கருதி பஸ் தொழிலில் பங்கு கேட்கிறாள்; தானப்பன் கொடுக்க மறுக்கிறான்.<br><br>-ஒருநாள் திடீரென்று தானப்பனின் வீட்டுச் சமையலாள், தானப்பன் இறந்துவிட்ட செய்தியைக் கதறி அழுது கொண்டே கூறுகிறான்.<br><br>-காவல் அதிகாரிகளின் விசாரணையில், மணமுறிவுக்குப் பிறகு ஏற்பட்ட போராட்டம் பின்பு பணப்போராட்டத்தில் வந்து முடிந்ததால் கனகம் வெறுப்பின் உச்சத்தில் பாலில் நஞ்சு கலந்து தன் உயிரையும் தானப்பனின் உயிரையும் போக்கியது தெரியவருகிறது.<br><br>-தானப்பனின் மறைவுக்குப் பிறகு, முருகய்யா தனது ஆசிரியர் தொழிலைவிட்டு விட்டு பஸ் கம்பெனியை நடத்தும் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார்.<br><br>-தானப்பனின் விருப்பப்படி அவன் வாங்கியிருந்த நிலத்தில் பள்ளிக்கூடம் கட்டி முடிக்கிறார்.<br><br>-அக்கட்டடத்திற்கு 'வாடாமலர்' எனப் பெயரிடப்படுகிறது.<br><br>-அந்தக் கட்டடத்தில் முதல் நிகழ்ச்சியாக மனோன்மணியின் திருமணம் நடைபெறுகிறது. | |

## தொகுதி 5

[எல்லா விடைகளும் பாடப்பகுதியை ஒட்டியே அமைதல் வேண்டும்]

**பாகம் - ஒன்று**

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளிலுள்ள எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.

**பிரிவு ஒன்று : கவிதை**

தாமரை மொட்டுக்குள்ளே - அழகு
தங்கிக் கிடக்குதடி! - கதிர்
சாமரை வீச்சினிலே - விரிந்து
**சஞ்சலம் போக்குதடி!**

வீடு துலக்கும்பெண்கள் - குளிர்முகம்
வீசும் ஒளியழகில் - வான்
நாடு விட்டுநகரும் - முழுமதி
நாணி முகம்வெளுத்தே!

\- **கவிஞர் வாணிதாசன்**

1. இக்கவிதைக் கண்ணிகள் இடம்பெற்றுள்ள கவிதையின் **மையக்கரு** யாது? (2 *புள்ளி*)

2. இக்கவிதைக் கண்ணிகளில் காணப்படும் **நயங்கள்** இரண்டனை எழுதுக. (4 புள்ளி)

3. i) **சஞ்சலம் போக்குதடி** என்பதன் பொருள் யாது? (2 *புள்ளி*)

வீடு துலக்கும்பெண்கள் - குளிர்முகம்
வீசும் ஒளியழகில் - வான்
நாடு விட்டுநகரும் - முழுமதி
நாணி முகம்வெளுத்தே!

ii) இவ்வடிகளில் நிலாவின் முகம் வெட்கத்தால் வெளுத்தது எனக் கவிஞர் கூற **காரணம்** யாது? (2 *புள்ளி*)

[10 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

4. பிசிராந்தையார் நாடகாசிரியரின் **அடையைக்** குறிப்பிடுக. (2 புள்ளி)

5. i) பிசிராந்தையார் நாடகத்தில் **பச்சைக்கிளியின் பெற்றோர்** யாவர்? (2 புள்ளி)

   ii) பிசிராந்தையார் நாடகத்தின் **கருப்பொருள்** யாது? (2 புள்ளி)

6. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

கோப்பெருஞ்சோழன் :*(எண்ணத்தில் ஆழ்ந்தவனாக) ஆம்! (வாளை உறையில் போட்டு இருக்கையில் அமர்கிறான்)* இனி என் நிலை என்ன? இருக்க வேண்டுமா இவ்வுலகில் நான்? அரண்மனையின் அமைப்பையும் வேலைப்பாட்டின் அருமையையும் நோக்கியபடி எழுந்து செல்லுகின்றான். மன்னி முதலில் அனைவரும் உடன் தொடர்கின்றார்கள்) தூய்மை கெடாமல் இருக்க அரண்மனையை நாடோறும் துடைத்துவர வேண்டும். வாய்மை கெடாதிருக்க ஆளுவோன் மனமானது மாசுகொள்ளாதிருக்க வேண்டும்.

*(மற்றொருபுறம் போகின்றான் மன்னன். உடன் செல்லுகின்றனர் மற்றவர்களும்)*

அறமன்றம் : அரசன் என்பவன் அறிவிற் சிறந்தாரை மதிக்க வேண்டும். பெருங்குடி மக்களைச் சிறிதும் இகழக்கூடாது. நான் மக்களையா பெற்றேன்? **நரிகளைப் பெற்றேன்**. எனக்குப் பின்?

சோழ மன்னி : ஏன் இவைகள்? நீங்கள் எங்கே போகின்றீர்கள் அத்தான்? அதோ பாருங்கள். உணவுண்ண அழைப்போர் உங்கள் முகநோக்கி நிற்கின்றார்கள்.

கோப்பெருஞ்சோழன்: அதுதான் முடியாது. அது மட்டுமன்று என் தடக்கைகள், இனிச் செங்கோல் தாங்காது. இவ்வுடல் வடக்கிருந்து உயிர்விடும்.

(காட்சி 29, பக்கம் 115-116)
(உமா பதிப்பகம்)

i) இச்சூழலில் வெளிப்படும் கோப்பெருஞ்சோழனின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

ii) இச்சூழலில் காணப்படும் **படிப்பினை** ஒன்றனை எழுதுக. (2 புள்ளி)

iii) **'நரிகளைப் பெற்றேன்'** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 *புள்ளி*)

iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 *புள்ளி*)

[15 புள்ளி]

**பிரிவு மூன்று : நாவல்**

7. வாடா மலர் நாவலாசிரியரின் **கொள்கையைக்** குறிப்பிடுக. (2 *புள்ளி*)

8. i) வாடா மலர் நாவலில் **பெண் கதைப்பாத்திரங்கள்** இருவரைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

ii) வாடா மலர் நாவலின் **காலப்பின்னணி** ஒன்றனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

9. கீழ்க்காணும் பகுதியை வாசித்துத் தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

என்னால் பேசாமல் இருக்க முடியவில்லை. "ஏன் இப்படி வாயில் வந்தபடி பேசுகிறீர்கள்? உங்கள் கட்சிக்கு ஆள் வேண்டும். கட்சியை வலுப்படுத்தி நீங்கள் முன்னேறப் பார்க்கிறீர்கள். அதுதான் உங்கள் முதல் நோக்கம். அதற்குத் துணையாக இருந்தால் எங்களைப் போற்றுவீர்கள். இல்லாவிட்டால் தூற்றுவீர்கள். ஊர் நன்மை மட்டுமே முதல் நோக்கமாக இருந்தால், இந்தப் பகுதிக்கு யாரொருவர் நிற்கிறாரே, அவரே, வெற்றி பெறட்டும் என்று விடுங்கள். பார்க்கலாம். ஆகவே. **அறுவடை உங்கள் நோக்கமே தவிர**, எங்கள் குறிக்கோள் என்று சொல்லாதீர்கள்" என்றேன்.

"சரி, சரி. விட்டுவிடுங்கள். கோபித்துக் கொள்ள வேண்டா. அதோடு நிற்கட்டும்" என்று மற்றவர்கள் அமைதி கூறினார்கள்.

"உங்கள் சொற்படி நடந்தால் நல்லவர்கள். இல்லையானால் துரோகிகள். இப்படித் தூற்றும் வழக்கம் கூடாது" என்றேன்.

அவர்கள் மறுபடியும் ஆறுதலாக ஏதோ சொல்லிவிட்டு விடைபெற்றார்கள்.

தானப்பன் எப்படித்தான் அவர்களோடு இருந்து பொதுத்தொண்டு செய்தானோ என்று எண்ணிக் கொண்டே வீட்டினுள் சென்றேன்.

(அத்தியாயம் 26, பக்கம் 274-275)
(மல்தி எடுகேஷனல் புக் எண்டர்பிரைஸ் 2020)

i) இச்சூழலில் வெளிப்படும் குழந்தைவேலின் **பண்புநலன்கள்** இரண்டனைக் குறிப்பிடுக. (2 *புள்ளி*)

ii) இச்சூழலில் காணப்படும் **உத்திமுறையை** எழுதுக. (2 *புள்ளி*)

iii) **'அறுவடை உங்கள் நோக்கமே தவிர'** என்பதன் சூழலுக்கேற்ற பொருள் யாது? (2 *புள்ளி*)

iv) இச்சூழலுக்கான **காரணம்** யாது? (3 *புள்ளி*)

[15 புள்ளி]

## பாகம் – இரண்டு

கீழ்க்காணும் மூன்று பிரிவுகளுள் ஒவ்வொரு பிரிவிலிருந்தும் ஒரு கட்டுரையாக மூன்று கட்டுரைகள் எழுதுக.

### பிரிவு ஒன்று : கவிதை
### சூரியன் வருவது யாராலே?

சூரியன் வருவது யாராலே?
சந்திரன் திரிவதும் எவராலே?
காரிருள் வானில் மின்மினிபோல்
கண்ணிற் படுவன அவை என்ன?
பேரிடி மின்னல் எதனாலே?
பெருமழை பெய்வதும் எவராலே?
யாரிதற் கெல்லாம் அதிகாரி?
அதை நாம் எண்ணிட வேண்டாவோ?

தண்ணீர் விழுந்ததும் விதையின்றித்
தரையில் முளைத்திடும் புல்ஏது?
மண்ணில் போட்டது விதையொன்று
மரஞ்செடி யாவது யாராலே?
கண்ணில் தெரியாச் சிசுவைஎல்லாம்
கருவில் வளர்ப்பது யார்வேலை?
எண்ணிப் பார்த்தால் இதற்கெல்லாம்
ஏதோ ஒருவிசை இருக்குமன்றோ?

எத்தனை மிருகம்! எத்தனைமீன்!
எத்தனை ஊர்வன பறப்பனபார்!
எத்தனை பூச்சிகள் புழுவகைகள்!
எண்ணத் தொலையாச் செடிகொடிகள்!
எத்தனை நிறங்கள் உருவங்கள்!
எல்லா வற்றையும் எண்ணுங்கால்
அத்தனை யும்தர ஒருகர்த்தன்
யாரோ எங்கோ இருப்பதுமெய்.

அல்லா வென்பார் சிலபேர்கள்;
அரன்அரி யென்பார் சிலபேர்கள்;
வல்லான் அவன்பர மண்டலத்தில்;
வாழும் தந்தை யென்பார்கள்;
சொல்லால் விளங்கா ‘நிர்வாணம்’
என்றும் சிலபேர் சொல்வார்கள்;
எல்லா மிப்படிப் பலபேசும்
ஏதோ ஒருபொருள் இருக்கிறதே!

அந்தப் பொருளை நாம்நினைத்தே
அனைவரும் அன்பாய்க் குலவிடுவோம்.
எந்தப் படியாய் எவர்அதனை
எப்படித் தொழுதால் நமக்கென்ன?
நிந்தை பிறரைப் பேசாமல்
நினைவிலும் கெடுதல் செய்யாமல்
வந்திப் போம் அதை வணங்கிடுவோம்;
வாழ்வோம் சுகமாய் வாழ்ந்திடுவோம்.

**நாமக்கல் கவிஞர் வெ,ராமலிங்கம் பிள்ளை**

10 மேற்காணும் கவிதையின் **தெரிநிலைக் கருத்துகளை** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

அல்லது

11 கீழ்க்காணும் கவிதையை வாசித்து, தொடர்ந்துவரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**காடு**

கல்தோன்றி மண்தோன்றிக் கடின மாகிக்
காசினியை உருச்செய்த பின்னர்ப் பச்சைப்
புல்தோன்றிச் செடிதோன்றிக் கொடியும் தோன்றிப்
பூதமென வளர்ச்சியுள மரமும் தோன்றி
எல்லாமொன் றாய்ச்சேர்ந்து வீசுங் காற்று
எரிகதிரோன் குளிர் நிலவாள் நுழையா வண்ணம்
வல்லடர்த்தி இருள் சேர்ந்த தென்பாம் காடே
மனிதகுல முதல் தலையோர் வாழ்ந்த வீடே!

காட்டிலுள்ள நன்மரங்கள் வீடாய் மாறும்
கனிகளெலாம் நமக்குணவாய்ச் சுவைகொ டுக்கும்!
பாட்டிசைக்க நமக்கெல்லாம் கற்றுத் தந்த
பறவைவருந் தும்தம்மின் கூட்டில் வாழ்ந்து
ஆட்டத்தை மயில்பாம்பு மானின் கூட்டம்
அவற்றிடம்நாம் கற்றோமே; எண்ணிப் பார்த்தால்
காட்டிலுள்ள ஒவ்வொன்றும் பயனை நல்க
நாட்டிலுள்ள நாம்யார்க்கும் பயனற் றோமே!

நண்பகலில் காடுபெறும் இருளே இன்று
நந்தமிழின் இருளாம்; நள் ளிரவுப் போதில்
சொன்னஅந்தக் காட்டினிலே சேரி ருட்டுத்
துயருறுநம் தமிழ்க்குலத்து வாழ்வி ருட்டே!
நண்பகலில் நள்ளிரவில் அமைதி யின்றி
நடுக்காட்டில் பலசத்தம் கேட்டல் போல
ஒன்றுபடும் குணமில்லாத் தமிழ் மக்கள்
உறையுமிடத் தில்நாளும் சத்தம் கேட்கும்.

பெண்ணவளின் மேனியிலே சேர்ந்த ஆடை
பிடிப்பாக உடல்தழுவி இருத்தல் போன்று,
வன்மரத்தோ டிணைந்தபடி கொடிகள் ஏறும்;
வளர்ந்தபெரு மரங்களின்வேர் நீண்டே பக்கம்
நின்றிருக்கும் மரவேரில் நன்றாய்ப் பின்னும்;
நினைத்தபடி தடையிற்படர் கொடிக ளுள்ளே
சென்றுவிளை யாடும்சில உயிர்கள்! தாயைச்
சேர்ந்திருக்கும் பிள்ளைவிளை யாடல் போன்று!

மானமுள்ள வாழ்க்கைக்குக் கவரி மானே
வாய்த்திடுநல் உவமையென்பார்? அஞ்சா மைக்குக்
கானகத்துப் புலிசிங்க வாழ்வைச் சொல்வார்!
காதலுக்கும் கற்பிற்கும் அன்றில் பண்பே
வானகத்தார் பண்பினுக்கும் மேலாம் என்பார்;
மானிடர்க்கு வாழ்வுநெறி கற்றுத் தந்த
கானகமே! என்னகமே! குளிர்ந்த நெஞ்சால்
கவின்தமிழால் வாழ்த்துகிறேன் வாழ்க வாழ்க!

**கவிஞர் பாதாசன்**

i) இக்கவிதையில் காணப்படும் **நயங்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

ii) இக்கவிதை உமக்குள் ஏற்படுத்திய **தாக்கங்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

[20 புள்ளி]

## பிரிவு இரண்டு : நாடகம்

12 பிசிராந்தையார் நாடகத்தில் பிசிராந்தையாரின் **பாத்திரப்படைப்பினை** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

அல்லது

13 பிசிராந்தையார் நாடகத்தின் **துணைக்கருப்பொருள்களை** விளக்கி எழுதுக. [20 புள்ளி]

## பிரிவு மூன்று : நாவல்

14 i) வாடா மலர் நாவலில் மீனாட்சி அம்மாளின் **பண்புநலன்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

ii) வாடா மலர் நாவலின் **துணைக்கருப்பொருள்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

அல்லது

15 i) வாடா மலர் நாவலில் கனகத்தின் **பண்புநலன்கள் மூன்றனை** விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

ii) வாடா மலர் நாவல் உமக்குள் ஏற்படுத்திய **தாக்கங்கள்** மூன்றனை விளக்கி எழுதுக. (10 *புள்ளி*)

[20 புள்ளி]

**வினாத்தாள் முற்றுப் பெற்றது**
**KERTAS SOALAN TAMAT**

## விடைப்பட்டி

### தொகுதி 5

| எண் | விடை | புள்ளி |
|---|---|---|
| 1 | காலைப் பொழுதின் அழகு | 2 |
| 2 | **அணிநயம்**<br><br>1. உருவக அணி : வான் நாடுவிட்டு நகரும், கதிர் சாமரை வீச்சினிலே<br><br>2. தற்குறிப்பேற்ற அணி : முழுமதி நாணி முகம்வெளுத்தே, கதிர் சாமரை வீச்சினிலே<br><br>3. திரிபு அணி : தாமரை - சாமரை, வீடு நாடு -<br><br>**ஓசைநயம்**<br><br>1. எதுகை : தா**ம**ரை சா -**ம**ரை<br>: வீ**டு** - நா**டு**<br><br>2. மோனை : **தா**மரை -**த**ங்கிக்<br><br>3. சந்தம் : தாமரை - சாமரை<br>: வீடு - நாடு<br><br>4. இயைபு அழகு தங்கிக் : **கிடக்குதடி**<br>: விரிந்து சஞ்சலம் **போக்குதடி**<br><br>**சொல்நயம்**<br><br>• அழகு<br><br>**பொருள் நயம்**<br><br>தெரிபொருள் : சூரிய ஒளிபட்டு மலரும் தாமரை, பெண்களின் ஒளிமுகங்கண்டு வெட்கப்பட்டு மறையும் நிலா.<br><br>புதைபொருள் : பரபரப்பான வாழ்க்கைச் சூழலில் வாழ்ந்தாலும் இயற்கையைப் போற்றும் மனம் வேண்டும்.<br><br>*(ஏதேனும் 2)* | 4 |
| 3 i) | மனக்கலக்கம் நீக்குதல் / மனக்கவலை நீக்குதல் | 2 |
| 3 ii) | பெண்கள் முகங்களில் ஒளிவீசும் அழகைக் கண்டு நிலா முகம் வெட்கத்தால் வெளுத்தது. | 2 |
| 4 | பாவேந்தர் | 2 |

| | | |
|---|---|---|
| 5 i) | அப்பா: பட்டுக்குடை, அம்மா: முத்துநகை | 2 |
| 5 ii) | அறமும் உயர்நட்பும் | 2 |
| 6 i) | தன் மகன்களின் செயலால் மனம் வருந்துபவர், நல்லாட்சி அமைய விரும்புபவர். | 2 |
| 6 ii) | நாட்டு மக்களுக்கு நல்லாட்சி தேவை. | 2 |
| 6 iii) | கோப்பெருஞ்சோழன், சூழ்ச்சிகள் நிறைந்த தன் மகன்களைக் குறிப்பிடுகிறார். | 2 |
| 6 iv) | ஆட்சியைக் கைப்பற்ற முயன்று தோல்வியடைந்த மகன்களைக் கொன்றொழிப்பதாகச் சோழன் கூறுகிறான். ஆனால், சோழன் மனைவியோ தன் பிள்ளைகளுக்கு நல்லது சொல்லித் திருத்துவதாகக் கூறுகிறாள். மன்னனுக்குப் பின் ஆட்சியை ஏற்க உள்ள பிள்ளைகளைக் கொன்றால் பழியே மிஞ்சும் என்று புலவர் நினைவுறுத்துகிறார். | 3 |
| 7 | மொழிப்பற்று | 2 |
| 8 i) | மோகனா, சுடர்விழி, கனகம், பூங்கொடி, நறுமலர், மீனாட்சி அம்மாள், மனோன்மணி, மாணிக்கவள்ளி, வள்ளியம்மா<br><br>*(ஏதேனும் 2)* | 2 |
| 8 (i) | காலை நேரம் / மாலை நேரம் / இரவு நேரம் / ஆடிமாதம் / வெயில் காலம் / ஆனி மாதம் | 2 |
| 9 i) | தன் கருத்தைத் துணிவுடன் வெளிப்படுத்துபவன், அரசியலில் நேர்மையை விரும்புபவன். | 2 |
| 9 (i) | உரையாடல் உத்தி | 2 |
| 9 (ii) | தேர்தலின் வெற்றியே கட்சிக்காரர்களின் இலக்கு எனக் குழந்தைவேல் கூறுகிறான். | 2 |
| 9 (v) | தானப்பன் நகர்மன்றத் தேர்தலில் போட்டியிட மறுத்துவிட்டான். தானப்பனுக்குப் பதில் குழந்தைவேலைத் தேர்தலில் நிற்கும்படி கட்சி உறுப்பினர்கள் வற்புறுத்துகிறார்கள். ஆனால், குழந்தைவேல் தன் அப்பாவின் விருப்பத்திற்குக் கட்டுப்பட்டு அவர்களிடம் மறுப்புத் தெரிவிக்கிறான். | 3 |
| 10 | தெரிநிலைக் கருத்துகள் :<br><br>முன்னுரை :-<br><br>• கவிதைத் தலைப்பு :சூரியன் வருவது யாராலே?<br>• கவிஞர் :நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை<br>• பாடுபொருள் : இறை நம்பிக்கை<br>• கேள்வியையொட்டிய வாக்கியம் : இறைவனின் ஆற்றலைப் | முன்னுரை : 2<br><br>கருத்துகள் : 15<br><br>முடிவுரை : 2<br><br>மொழி : 1 |

| | | |
|---|---|---|
| | போற்றும் சிந்தனைகளை கவிஞர் முன்வைக்கிறார் .<br><br>கருத்துகள் :<br>1. சூரிய உதயம், சந்திரனின் வான் வீதி உலா, நட்சத்திரங்களின் மினுமினுப்பு, இடி மின்னல் ஆகிய இயற்கை நிகழ்வுகள் யாவைக்கும் ஏதோ ஒரு காரணம் இருக்கத்தான் செய்கின்றன. அதை நாம் எண்ணிப் பார்க்க வேண்டும்.<br>2. இவ்வுலகில் பல உயிர்கள் தோன்றி முழு வளர்ச்சிப் பெற ஏதோ ஒர் ஆற்றல் இருக்கின்றது என்பதை நாம் உணர வேண்டும்.<br>3. காட்டிலுள்ள செடி கொடிகளும் விலங்குகளும் பல வகையான உருவமைப்புகளிலும் வண்ணங்களிலும் இருக்கின்றன. இவற்றை நாம் சிந்திக்க வேண்டும்.<br>4. இவ்வாறான பல படைப்புகளைப் படைக்கும் அந்தச் சக்தியை வெவ்வேறு மதத்தினர் வெவ்வேறு பெயரிட்டு அழைக்கிறார்கள்; வணங்குகிறார்கள்.<br>5. எந்த முறையில் அச்சக்தியை அழைத்தாலும் சரி வணங்கினாலும் சரி ஒருவரையொருவர் இழித்தும் பழித்தும் பேசாமலும் கெடுதல் நினைக்காமலும் ஒற்றுமையாக அப்பரம்பொருளைப் பக்தியுடன் வணங்குவோம்.<br><br>முடிவுரை :<br>உலகில் நம்மை மீறிய சக்தி ஒன்றிருப்பது மறுக்கவியலாத உண்மையாகும். ஆதலால், அச்சக்தியை மதித்தும் பிற உயிர்களை நேசித்தும் வாழ வேண்டும்<br>*(ஏற்புடைய முடிவுரை)* | (20 புள்ளி) |
| 11 i) | இக்கவிதையில் காணப்படும் ஓசைநயம் :<br><br>**1. மோனை -**கவிதையின் தொடக்கச் சீர்களில் முதல் எழுத்து ஓசையால் ஒன்றிவருவதே மோனையாகும். அடிகளில் மோனை வருதல் அடிமோனை எனவும், சீர்களில் மோனை வருதல் சீர்மோனை எனவும் கூறப்படுகிறது.<br>எ.கா : **க**ல்தோன்றி – **கா**சினியை<br>**பு**ல்தோன்றி – **பூ**தமென<br>**கா**ட்டிலுள்ள – **க**னிகளெலாம்<br>**பா**ட்டிசைக்க - **ப**றவை<br><br>**2. எதுகை -**கவிதையின் தொடக்கச் சீர்களிண் முதலெழுத்தின் அளவும் இரண்டாம் எழுத்தின் ஓசையும் ஒன்றிவருவது எதுகையாகும். அடிகளில் எதுகை வருதல் அடிஎதுகை எனவும் சீர்களில் எதுகை வருதல் சீர்எதுகை எனவும் பெயர் பெறும்.<br>எ.கா : க**ல்**தோன்றி – பு**ல்**தோன்றி<br>எ**ல்**லாமொன் – வ**ல்**லடர்த்தி<br>கா**ட்**டிலுள்ள – பா**ட்**டிசைக்க<br>ஆ**ட்**டத்தை - கா**ட்**டிலுள்ள<br><br>**3. சந்தம் -** சொற்களிலுள்ள ஒலிக்கூறுகள் – ஓசைப் பகுதிகள் ஒரே தாள அளவுக்குப் பொருத்த அமைவதே சந்தமாகும்.<br>எ.கா : காடே – வீடே | 10 |

| | | |
|---|---|---|
| | காட்டிலுள்ள - நாட்டிலுள்ள<br><br>**4. முரண் தொடை -** சீர்கள் பொருளால் முரண்பட்டு வருவது முரன் தொடை. அஃதாவது எதிர் எதிர் கருத்துகளாக அமைந்து வருதல்.<br>எ.கா : எரிகதிரோன் – குளிர்நிலவாள்<br>காட்டிலுள்ள – நாட்டிலுள்ள<br>நண்பகலில் – நள்ளிரவில்<br>பயனை நல்க – பயனற் றோமே | |
| 11 ii) | இக்கவிதை ஏற்படுத்திய தாக்கங்கள் (பாதிப்புகள்) :<br><br>1. காட்டிலுள்ள எல்லா வகை உயிரினங்களும் மனிதர்களுக்குப் பல வகைகளில் பயனுள்ளவைகளாக அமைகின்றன.**(கருத்து)** இதன் வாயிலாக இயற்கை சார்ந்த விழிப்புணர்வு எனக்கு ஏற்படுகின்றது.**(உணர்வு)** மனிதர்களாகிய நாமும் பிறந்தோம் வாழ்ந்தோம் மடிந்தோம் என்றில்லாமல் மற்றவர்களுக்குப் பயனுள்ளவர்களாக வாழ வேண்டும்.**(தீர்வு)**<br><br>****பிற விடைகளும் மேற்காணும் வகையில் 'கருத்து, உனர்வு, தீர்வு' என மூன்று கூறுகளை உள்ளடக்கி இருத்தல் அவசியம்.***<br><br>2. கவிதை தந்த இயற்கை உணர்வோடு இசைந்ததில் என் மனம் மகிழ்ச்சியுற்றது.<br>3. துயருறும் தமிழர்களின் வாழ்வைக் காட்டுடன் இணைத்துப் பார்க்க வைக்கிறது. | 10 |
| 12 | பிசிராந்தையாரின் பாத்திரப்படைப்பு :<br><br>முன்னுரை :-<br><br>• நாடகம் :பிசிராந்தையார்<br>• ஆசிரியர் :புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்<br>• கருப்பொருள் :அறமும் உயர்நட்பும்<br>• கேள்வியையொட்டிய வாக்கியம் :வாழ்க்கைக்கு முக்கியமான பல்வேறு நெறிகளை உணர்த்துவதற்காகவே பிசிராந்தையாரின் பாத்திரப்படைப்பு படைக்கப்பட்டுள்ளது<br><br>கருத்துகள் :<br><br>**1. கருத்து** உண்மை நட்பின் தன்மையை உணர்த்துவதற்காக : .பிசிராந்தையாரின் பாத்திரப்படைப்பு படைக்கப்பட்டுள்ளது<br>**சான்று** நேராகக் கண்டிராத : தன் நண்பன் வடக்கிருந்த போது தயக்கம் சிறிதுமின்றி பிசிராந்தையாரும் கோப்பெருஞ்சோழனோடு வடக்கிருக்கத் துணிந்தார்.<br>**ஆசிரியரின் நோக்கம்** நட்பில் நேரடி தொடர்போ பழக்கமோ : முக்கியமில்லை, ஒத்த உணர்வே முக்கியமானது என்பதைத் தெளிவுப்படுத்தவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.<br><br>**2. கருத்து** ம :ன்னன் மீதும் மக்கள் மீதும் அன்பும் அக்கறையும் கொண்டவராக புலவர் இருக்கவேண்டும் என்பதை | முன்னுரை : 2<br><br>கருத்துகள் : 15<br><br>முடிவுரை : 2<br><br>மொழி : 1<br><br>(20 புள்ளி) |

| | | |
|---|---|---|
| | உணர்த்துவதற்காக இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.<br>**சான்று** அமைச்சனைப் போலவும் நல்லாசானைப் போலவும்: பிசிராந்தையார் ஆலோசனை கூறுகிறார்.<br>பச்சைக்கிளியின் கொலை வழக்கில் குற்றவாளிகளைக் கண்டுபிடித்து, அக்குற்றவாளிகள் தம் தவற்றை உணர்ந்து திருந்தும்படி செய்தார்<br>**ஆசிரியரின் நோக்கம்** மன்னன் மீதும் மக்கள் மீதும் அன்பும் : அக்கறையும் கொண்டவராக புலவர்கள் இருக்கவேண்டும் என்பதை உணர்த்துவதற்காக இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது<br><br>**3.** **கருத்து** அரசவைப் புலவர் அறவழியில் நிற்பவராய் இருக்க : வேண்டும் என்பதை உணர்த்தவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது<br>**சான்று**: பிசிராந்தையாரின் பாடலைக் கேட்டுப் புத்தி தெளிந்த பாண்டியன் கோப்பெருஞ்சோழனின் மேல் படையெடுக்கும் எண்ணத்தைக் கைவிட்டான்<br>**ஆசிரியரின் நோக்கம்** அரசவைப்புலவர் அறவழியில் நிற்பவரய் : இருந்தால் அரசன் நீதி வழுவாமல் ஆட்சி செய்யலாம் என்பதை உணர்த்தவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது<br><br>**4.** **கருத்து** : தலைமைப் பொறுப்பில் இருப்பவர்களிடம் வரையறைக்குட்பட்டுப் பழகுதலை உணர்த்தவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது<br>**சான்று** பிசிராந்தையார் : பாண்டிய மன்னனின் ஈடுபாட்டைப் பெற்றிருந்தாலும் நாட்டின் முடிவெடுக்கும் உரிமையில் தலையிடாமல் இடைவெளி காத்து இருக்கிறார்<br>**ஆசிரியரின் நோக்கம்** : தலைமைப் பொறுப்பில் உள்ளவர்களுடன் எவ்வாறு பழக வேண்டும் என்பதை உணர்த்துவதற்காகவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது<br><br>**5.** **கருத்து** ஈகைத்திறனை வாழ்க்கையில் கைக்கொள்ள வேண்டும் : என்பதைக் காட்ட இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது<br>**சான்று**: வறுமை நிலையைக் கூறிய மேற்படியாருக்குப் பிசிராந்தையார் தனது பதக்கத் தொங்கலைக் கழற்றிக் கொடுக்கிறார்<br>**ஆசிரியரின் நோக்கம்** பிறருக்குக் கொடுப்பதால் ஏற்படும் : இன்பம் அளவிடற்கரியது என்பதை உணர்த்தவே இக்கதைப்பாத்திரம் படைக்கப்பட்டுள்ளது.<br><br>முடிவுரை :<br><br>அறவாழ்வுக்குப் பற்றுக்கோடாகக் கொள்ள வேண்டிய அறநெறிகளை மாணவர்களுக்குத் தெளிவுறுத்தும் விதமாக பிசிராந்தையாரின் கதைப்பாத்திரம் இந்நாடகத்தில் அமைந்துள்ளது.<br><br>*(ஏற்புடைய முடிவுரை)* | |
| 13 | துணைக்கருப்பொருள்:<br><br>முன்னுரை :-<br><br>• நாடகம் :பிசிராந்தையார்<br>• ஆசிரியர் :புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் | |

- கருப்பொருள் :அறமும் உயர்நட்பும்
- கேள்வியையொட்டிய வாக்கியம் :இந்நாடக ஆசிரியர் துணைக் கருப்பொருள்கள் மூலமாகப் பல்வேறு சிந்தனைகளை முன்வைக்கிறார்.

கருத்துகள் :

**1. நட்பைப் போற்றுதல்.**

சோழநாட்டு மன்னன் கோப்பெருஞ்சோழனும் பிசிராந்தையாரும் நெருங்கிய நண்பர்கள். ஆனால், இதுவரை ஒருவரையொருவர் கண்டதில்லை.இவர்கள் உடலால் நெருங்கியதில்லை; உள்ளத்தால் நெருங்கியவர்கள்.
என் நண்பன் என்னைத்(கோப்பெருஞ் சோழன்) தேடி வருவார்.தான் துயர் கொண்டு வாடிக் கண்டிப்பாக வருவார் என்று கூறுகிறார்.
பிசிராந்தையாரோடு வடக்கிருந்து உயிர் துறக்கிறார்.

**2. உதவும் மனப்பான்மை**

துன்பத்தில் உள்ளவர்க்கு உதவும் மனப்பான்மையின் மேன்மை நாடகத்தில் வலியுறுத்தப்படுகிறது. அறிவுடை நம்பி, பிசிராந்தையார், மேற்படியார் ஆகியோரின் மூலம் இச்சிந்தனை வெளிப்படுகிறது.
காற்றும் மழையும் வலுத்தபோது ஆராய்ச்சி மணியின் ஒலி கேட்கிறது. துன்பத்தில் உள்ள மக்களைக் காப்பாற்ற பாண்டியன் அறிவுடை நம்பி தன் உயிரைத் துச்சமாக எண்ணி அரண்மனைக்கு வெளியே ஓடுகிறான்.
அதுபோலவே, பிசிராந்தையார் அச்சூழலில் ஆராய்ச்சி மணியை அடிக்கிறார். அவரோடு புலவர் மேற்படியாரும் இருக்கிறார். மூவரும் கடுங்காற்றால் தூக்கி வீசப்படுகின்றனர். தன்னலம் மறந்து நாட்டு மக்களின் நலனுக்கு மூவரும் முக்கியத்துவம் தருகின்றனர்.

**3. நீதியை நிலைநாட்டுவதில் உறுதி**

பாண்டிய நாட்டில் கர்ப்பிணிப் பெண் கொலை செய்யப்படுகிறாள். அந்தப் பெண்ணுக்கு நீதி கிடைக்க பாண்டியன் உறுதி கொள்கிறான்.
அந்தக் கொலையால் தன் நல்லாட்சிக்குக் களங்கம் நேர்ந்ததாக எண்ணி வேதனையுறும் பாண்டியன், அமைச்சரிடம் விசாரணைக்குக் கட்டளையிடுகிறான்.
உயிர் துறப்பதாக அமைச்சர் பொறுப்பு ஏற்கிறார். அதன்படி, மூன்று நாள்களுக்குள் குற்றவாளியைக் கண்டுபிடிக்க முடியாவிட்டால் அமைச்சருக்குத் தூக்கு என அறிவிக்கப்படுகிறது.
இந்த அணுகுமுறையால் குற்றவாளிகள் சரணடைகின்றனர்.

**4. பழிக்கும் இகழ்ச்சிக்கும் அஞ்சுதல்**

பாண்டியன் அறிவுடை நம்பி, தன் பரம்பரைப் புகழைக் காக்கும் பொருட்டுப் பிசிராந்தையாரின் துணையோடு நாட்டு மக்களை நல்லவர்களாகவும் செல்வந்தர்களாகவும் வாழச் செய்கிறான்.
பச்சைக்கிளி கொலை செய்யப்பட்டதால் மக்கள் பாண்டியன் ஆட்சியை இகழ்ந்து பேசுகிறார்கள். பழிக்கும் இகழ்ச்சிக்கும் அஞ்சும் மன்னன் அதைக் கேட்டு வருந்துகிறான்.
ஆட்சிக்கு நேர்ந்த களங்கத்தைப் போக்க விரைந்து நடவடிக்கை எடுக்கிறான். குற்றவாளிகளை விசாரித்துத் தீர்ப்பு வழங்குகிறான்.

**5. மக்களின் மனவலிமை நாட்டின் பலம்**

ஒரு நாட்டில் தீமையே நிகழவில்லை என்றால் அந்நாட்டு மக்களால் திடீரென்று அயலாரால் நிகழும் தீமையை எதிர்க்க இயலாது; திடீரென்று ஏற்படும் இயற்கைச் சீற்றங்களைத்

முன்னுரை : 2

கருத்துகள் : 15

முடிவுரை : 2

மொழி : 1

(20 புள்ளி)

| | | |
|---|---|---|
| | தாங்கவும், அவற்றைப் போக்கவும் வலிமை இல்லாமல் போய் விடுகிறது.<br>எனவே, ஒரு நாட்டில் தீயவர்களும் சிலர் இருக்க வேண்டும். அப்போதுதான் மக்கள் வலிமையை வளர்த்துக் கொள்வார்கள்.<br><br>முடிவுரை :<br>இந்நாடகத்தில் வெளிப்படுத்தும் துணைக் கருப்பொருள்கள் வாசகர்களிடையே சிந்தனை மாற்றத்தை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.<br>*(ஏற்புடைய முடிவுரை)* | |
| 14 i) | மீனாட்சி அம்மாளின் பண்புநலன்கள்<br><br>**1. அன்பானவர்**<br><br>விளையாட்டில் மும்முரமாய் இருக்கும் குழந்தைவேல் சாப்பிடாமல் இருப்பதைப் பொறுக்க மாட்டாதவராய், உரத்த குரலில் கூப்பிட்டுச் சோறு உண்ணச் செய்கிறார்.<br><br>தனிக்குடித்தனம் கேட்கும் பொருந்தாத பெண் தன் மகனுக்கு மனைவியாக அமைந்துவிட்டதை எண்ணி வருந்துகிறார்<br><br>குழந்தைவேலின் தனிக்குடித்தனத்திற்குத் தேவையான அனைத்து உதவிகளையும் செய்கிறார்.<br><br>சுடர்விழியின் மகப்பேற்றுக்கு உதவி செய்ய அவளது வீட்டில் தங்கியிருந்த நிலையில் தன் கணவருக்கு முறையாக உணவு கிடைக்கப்பெறுகிறதா எனக் குழந்தைவேலிடம் விசாரிக்கிறார்.<br><br>**2. அண்டை அயலாரோடு நெருக்கமாகப் பழகுபவர்.**<br><br>தனக்காக நீலநிறச் சேலை ஒன்று எடுத்தபோது தானப்பனின் சித்திக்கும் அதே நிறத்தில் இன்னொரு சேலையும் எடுத்துக் கொடுக்கிறார்.<br><br>தன் வீட்டில் செய்யும் சிற்றுண்டிகளைத் தானப்பன் வீட்டிற்கும் கொடுக்கிறார்.<br><br>தானப்பனின் சித்தி மகப்பேற்றுக்காகத் தாய் வீட்டுக்குச் சென்றுவிட்ட பிறகு, தானப்பன் குடும்பத்தினரைத் தங்கள் வீட்டிலேயே சாப்பிடுமாறு கூறுகிறார்.<br><br>**3. பிறர் நலத்தில் அக்கறை கொண்டவர்.**<br><br>சுடர்விழி தன் சித்தியின் கொடுமைக்கு ஆளாவதை எண்ணி வருந்துகிறார்.<br><br>தனக்குப்பின் ஆட்சியில் அமரும் தம் மக்களுக்கு அறங்களை எடுத்துக்கூறி நல்வழிப்படுத்த வேண்டுமெனவும் எயிற்றியனாரிடம் வேண்டுகிறான்.<br><br>தந்தையின் மரணத்திற்குப் பிறகு குழந்தைவேலின் வீட்டிற்குத் தன கணவரோடு சுடர்விழி வந்தபொழுது இனி தங்கள் வீடுதான் அவளுக்குத் தாய்வீடு எனவும் அடிக்கடி வந்து போக வேண்டுமெனவும் கூறுகிறார். | 10 |

| | | |
|---|---|---|
| | **4. பெருந்தன்மை மிக்கவர்.**<br><br>பூங்கொடி வீட்டில் எந்த வேவையும் செய்யாவிடில் பார்ப்பவர்கள் ஏதாவது கூறிய பொழுது காலப்போக்கில் அவள் பொறுப்புகளைக் கற்றுக் கொள்வாள் எனவும் கூறுகிறார்.<br><br>தனிக்குடித்தனம் குழந்தைவேலின் தந்தை அவளது தாய்வீட்டிலிருந்து அழைத்து வந்த பொழுது மருமகளிடம் அன்பாய்ப் பேசி மனக்கசப்பை மாற்றுகிறார்.<br><br>*(ஏதேனும் 3)* | |
| 14 ii) | துணைக்கருப்பொருள்:-<br><br>கருத்துகள்:<br><br>**1. நல்ல நட்பைப் போற்றுதல் (தானப்பன் , குழந்தைவேல்)**<br><br>குழந்தைவேல், தானப்பன் நட்பு பால்ய வயதில் தொடங்கி இறுதிவரைக்கும் தொடருகிறது.<br><br>குழந்தைவேல் தானப்பனின் இன்ப துன்பங்களில் முழுமையாகப் பங்கு கொள்கிறான். தானப்பனுக்குத் துன்பம் வந்தபோதெல்லாம் அதனைக் களைய முற்படுவதோடு அவன் துன்பத்தை எண்ணி தானும் துன்பமடைகிறான்<br><br>சந்தர்ப்பச் சூழ்நிலை தானப்பனின் வாழ்க்கைப் போக்கை மாற்றியதெண்ணி இரக்கப்படுகிறான்; அவனை அதிலிருந்தௌ காப்பாற்றவும் முனைகிறான்.<br><br>திருமண விருந்திற்குப் பிறகு தானப்பன் குழந்தைவேலிடம் தங்கள் நட்பு இருபது ஆண்டுகளுக்கு முன் இருந்தது போலவே இருக்க வேண்டுமெனக் கூறுகிறான்.<br><br>**2. மாற்றாந்தாய் கொடுமை ( சித்தி மோகனா)**<br><br>சுடர்விழி பக்கத்து வீட்டாரான தாயாரம்மா கொடுத்த முறுக்கைச் சாப்பிட்டதற்காகக் கன்னத்தில் அறைகிறாள்.<br><br>தானப்பன் பாலைக் கைதவறி கீழே கொட்டியதால் அவன் முகத்தில் இடுக்கியால் அடிக்கிறாள்.<br><br>வீட்டு வேலைகளைச் செய்வதற்கும் தன் குழந்தையைப் பார்த்துக் கொள்வதற்கும் சுடர்விழியின் உதவி தேவைப்படுவதால், பெண்ணுக்குப் படிப்புத் தேவையில்லை என்று கணவரிடம் சொல்ல அவளைப் பள்ளிக்கூடம் போகாமல் நிறுத்துகிறாள்.<br><br>**3. இரக்க குணம் (குழந்தைவேல் பெற்றோர்)**<br><br>சித்தியின் கொடுமையால் தானப்பனும் சுடர்விழியும் போதுமான உணவு கிடைக்காமல் வாடுவதை அறிந்து அவர்களுக்கு உணவளிக்கிறார்கள்.<br><br>பூங்கொடி கடுங்காய்ச்சலால் வருந்தியபொழுது, இரவும் பகலும் | 10<br><br>[20 புள்ளி] |

| | | |
|---|---|---|
| | அருகிலேயே இருந்து கவனித்துக் கொள்கிறார்கள்<br><br>தானப்பன் பள்ளி செல்லும் வேளையில் பசி மயக்கத்தால் விழுந்த விசயத்தை அறிந்து, இனிப் பசியாய் இருக்கும்போது தங்கள் வீட்டிற்கு வந்து சாப்பிடுமாறும் உணவைக் கேட்பதற்கும் கூச்சப்படத் தேவையில்லை எனவும் கூறுகிறார் குழந்தைவேலின் அப்பா.<br><br>பூங்கொடியின் தந்தை படம் எடுத்து நலிந்து போனதை அறிந்து அவர் மீது இரக்கம் கொள்கிறார்; கடன் கொடுத்த பணத்தைப் பற்றி இனிப் பேச வேண்டாமெனக் குழந்தைவேலுக்கு அறிவுறுத்துகிறார் குழந்தைவேலின் அப்பா.<br><br>*(ஏதேனும் 3)* | |
| 15 i) | கனகத்தின் பண்புநலன் :<br><br>**1. மேற்கத்திய நாகரித்தைப் போற்றுபவள்**<br>• குழந்தைவேல் குடும்பத்தினர் ஏற்பாடு செய்திருந்த திருமண விருந்தில் சில உணவு வகைகளைத் தொடாமலே இருந்ததைத் தானப்பன் சுட்டிக்காட்டிய பொழுது மேல் நாட்டாரின் பழக்கவழக்கங்கள் அப்படித்தான் என்கிறாள்.<br><br>**2. ஆடம்பரத்தை விரும்புபவள் .**<br>• வெளியே செல்லும் பொழுது பளபள என மின்னும் சரிகை மிகுந்த புடவையும் கழுத்து நிறைய பொன்னும் வைரமும் அணிந்து கொண்டு செல்கிறாள்.<br><br>**3. ஆண்களிடம் நெருங்கிப் பழகுபவள்**<br>• குழந்தைவேல் தனக்கு நெருங்கிய நண்பன் என தானப்பன் அறிமுகப்படுத்திய பொழுது சற்றும் கூச்சப்படாமல் அவனிடம் நிறைய பேசுகிறாள்.<br>• தானப்பன் வீட்டில் இல்லாத நேரத்தில் வச்சிரநாதனுடன் நெருக்கமாகப் பேசிப் பழகுகிறாள்.<br>• கவர்ச்சியாக உடை உடுத்தி வச்சிரநாதனுடன் அவனது வீட்டிற்குச் செல்கிறாள்.<br>• தானப்பன் வீட்டில் இல்லை எனத் தெரிந்ததும் திரும்பிப் போக குழந்தைவேல் முயன்றப்போது அவனை உள்ளே அழைத்துத் தன்னுடன் பேசிக் கொண்டிருக்கும்படி நெருங்கி வற்புறுத்துகிறார்; குழந்தைவேல் அவனது செயலை விரும்பாமல் உடனே அங்கிருந்து கிளம்புகிறான்.<br><br>**4. சினிமா மோகம் கொண்டவள்**<br>• குழந்தைவேல் ஏற்பாடு செய்திருந்த திருமண விருந்தில் கலந்து கொண்ட பொழுது உணவை முரையாக உண்ணாமல், ஊரில் அப்போது வந்திருந்த ஒரு சினிமா படத்தைப் பற்றியும் அதில் நடித்த நடிகர்களைத் தான் சந்தித்த விசயத்தையும் அவர்களது பழக்க வழக்கங்களையும் திறமைகளையும் விரிவாகப் பேசுகிறாள்.<br><br>**5. பொறுப்பற்றவள்**<br>• தானப்பனின் வீட்டிற்கு உணவுக்காக சென்றுவிட்டு திரும்பும்பொழுது குழந்தைவேலின் தந்தை, கனகம் குடும்பத்தில் அக்கறை இல்லாதவளாகவும் விருந்தினர்களை வரவேற்று கவனிக்காமல் இருப்பதையும் குழந்தைவேலிடம் சுட்டிக்காட்டுகிறார்.<br>• குழந்தைவேல் தானப்பனை பார்க்க வீட்டிற்கு வரும்பொழுது | 10 |

| | | |
|---|---|---|
| | அவனிடமே தானப்பன் வீட்டில் இருக்கிறாரா எனக் கேட்ட வேளையில் அவளது பொறுப்பற்ற தன்மையைக் குழந்தைவேல் உணருகிறான்.<br><br>**6. ஒழுக்கத்தைப் போற்றாதவள்**<br>• குழந்தைவேல் ஏற்பாடு செய்திருந்த திருமண விருந்தில் கலந்துகொண்ட பொழுது கவர்ச்சியாக உடுத்தியிருக்கிறாள்.<br>• தானப்பன் வீட்டுச் சமையலாள், குழந்தைவேலிடம் கனகத்தின் முறையற்ற நடவடிக்கைகளைப் பற்றி கூறி வருந்துகிறான்.<br><br>**7. ஆணவம் மிகுந்தவள்**<br>• கல்லூரியில் படித்தப் பெண்ணாக இருக்கும் அவள், தானப்பனுடந் நடந்த சண்டையில் அவனைப் பார்த்து படிக்காத ஆள் என துச்சமாக பேசுகிறாள்.<br><br>*(ஏதேனும் 3)* | |
| 15 ii) | தாக்கம் :<br><br>1. வாழ்க்கையில் முன்னேற தீய பழக்கவழக்கங்கள் நமக்குத் தடைகளாக அமைகின்றன.**( கருத்து)** இக்கருத்தின்வழி, தீயபழக்கங்களுக்கு அடிமையாகக் கூடாது என்பதை உணர்ந்தேன்.**(தாக்கம்)** எனவே, வாழ்க்கையில் தீயப்பழக்கவழக்கங்களுக்கு அடிமையாகாமல் ஒழுக்கத்தை பேண வேண்டும்.**(தீர்வு)**<br><br>****பிற விடைகளும் மேற்காணும் வாகையில் 'கருத்து, தாக்கம், தீர்வு' என மூன்று கூறுகளை உள்ளடக்கி இருத்தல் அவசியம்.***<br><br>2. நட்பைப் போற்ற வேண்டும் என்பதை உணர்ந்தேன்.<br>3. ஒருவர் துன்பம் விளைவித்தாலும் அவரையும் அவரைச் சார்ந்தவர்களையும் வெறுக்காமல் அன்பு காட்டுவதை எண்ணி வியந்தேன். | 10<br><br>[20 புள்ளி] |

# இலக்கியக் கலைச்சொற்கள்

| | கலைச்சொல் | விளக்கம் |
|---|---|---|
| 1. | புதினம் Novel | கற்பனை கலந்த நீண்ட புனைக்கதை |
| 2. | **உலுக்கல்** kejutan | கதையோட்டத்தில் வாசகர்கள் எதிர்பாராது வெளிப்படும் சில மாற்றங்கள்/ நிகழ்வுகள்/ சம்பவங்கள்/ திகைப்பூட்டும் சம்பவங்கள் |
| 3. | சிக்கல் /**பூசல்** / போராட்டம் konflik | பாத்திரங்களுக்கிடையே எழும் கருத்து வேறுபாடுகள் (தனிநபர்-தனிநபர்) (தனிநபர்- சமுதாயம்) (தனிநபர்–தனக்குத்தானே ) |
| 4. | அழகுமொழி Bahasa bunga | இனிய சொல், உவமை, உருவகம் போன்றவற்றைக் கொண்டு அமையும் மொழிநடை |
| 5. | ஒப்புமை Analogi | இரு வேறு பொருள்களில் காணும் ஒற்றுமையை ஒப்பிட்டுக் காட்டுவது |
| 6. | வீழ்ச்சி நிலை Anti Klimaks | கதையின் உச்சத்திலிருந்து திடீரென வீழ்ச்சி அடையும் நிலை |
| 7. | எதிர்மறைப் பாத்திரம் Watak antagonis | கதையில் வில்லங்கத்தை உருவாக்குபவர்/ முதன்மைக் கதைப்பாத்திரத்தோடு மோதல்களை உருவாக்குபவர் |
| 8. | சொல்லாட்சி Diksi | ஒரு படைப்பாளர் தான் வலியுறுத்த விரும்பும் கருத்தைத், தெளிவாக வெளிப்படும் வகையில் தேர்ந்தெடுத்துக் கையாளும் பொருத்தமான சொற்களின் பயன்பாடு. |
| 9. | சாரம் Abstrak | படைப்பிலக்கியத்தின் கருப்பொருளை விளக்கப்படுத்தும் சுருக்க வடிவம். |
| 10. | ஏரணமின்மை Absurd | நடைமுறை வாழ்வில் ஏற்றுக்கொள்ள முடியாத, அறிவுக்குப்பொருந்தாதவை. |
| 11. | உணர்த்தப்படும் செய்தி Amanat/ Mesej | அறம் மற்றும் நன்னெறி தொடர்பான பல்வேறு செய்திகளைப் படிப்போருக்குப் படைப்பாளர் உணர்த்தும் செய்தியாகும். |
| 12. | கிளைநிகழ்ச்சி Episod | ஒரு நாடகத்தில் துணைக் கதைக்கருவுடன் தொடர்புடைய ஒரு நிகழ்வு. |
| 13. | முருகியல் Estetika | இலக்கியப் படைப்புகளில் வெளிப்படும் அழகியல் தன்மைகள். இதனை மொழிநடை, சொல்லாட்சி ஆகியவற்றில் காணலாம். |
| 14. | சூழ்ச்சி Helah/ Trick | எதிர்மறை கதைப்பாத்திரங்கள் தம் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்வதற்காக மேற்கொள்ளும் தந்திர நடவடிக்கைகள். |
| 15. | பின்நோக்குநிலை Imbas Kembali | முந்தைய நிகழ்ச்சிகளைப் பின்னோக்கிப் பார்த்தல். |
| 16. | முன்நோக்குநிலை Imbas muka | எதிர்காலத்தில் நடக்கப்போகும் சம்பவங்களை முன்னறிவது. |

# இலக்கியக் கலைச்சொற்கள்

| | கலைச்சொல் | விளக்கம் |
|---|---|---|
| 17. | அகத்தூண்டல் Inspirasi | படைப்பிலக்கியம் ஒன்றை உருவாக்கும்வகையில் படைப்பாளன் ஒருவனுக்குப் புறக்கூறுகள் வழியோ, ஆழ்ந்த சிந்தனையின் வழியோ ஏற்படும் உந்துசக்தி. |
| 18. | வஞ்சகப் புகழ்ச்சி Ironi | ஒருவரைப் பழிப்பது போல் புகழ்வது அல்லது புகழ்வது போல் பழிப்பது. |
| 19. | மனவெளிப்பாடு Intuisi | படைப்பிலக்கியங்களை வாசிக்கும் வாசகனிடையே சுயமாக ஏற்படும் உள்ளுணர்வு. |
| 20. | உச்சக்கட்டம் Klimaks | நெருக்கடி அல்லது சிக்கல் உச்ச நிலையை அடையும் கட்டம். |
| 21. | இன்பியல் Komedi | நகைச்சுவை, நையாண்டி , எள்ளல் முதலானவற்றை உள்ளடக்கி மகிழ்ச்சிகரமான முடிவைக் கொண்டு நிறைவுறும் படைப்புகள். |
| 22. | முரண் Kontradiksi | பொருள்களை மாறுபடக் கூறுவது. |
| 23. | நெருக்கடி நிலை Krisis | நாடகம் அல்லது கதையில் போராட்டம் தீவிரமடைந்து மிக உயர்ந்து, இனி அது தீர்வதற்குச் சிக்கல் அவிழ வேண்டியதுதான் என்று உணர்த்துகிற குறுகிய காலக் கட்டமேயாகும். |
| 24. | திறனாய்வு Kritikan | ஒரு படைப்பின் நிறை குறைகளை நடுநிலை நின்று ஆய்தல். |
| 25. | கதைநிரல் Kronologi நிரட்சி Naratif | காலம், இடம் ஆகியவற்றுக்கு உட்பட்டு கதை, சம்பவங்கள் தடைபடாமல் சொல்லப்பட்டு நிறைவு பெறுவதை குறிக்கும். (முதல் அத்தியாயத்தில் தொடங்கி இறுதி அத்தியாயத்தில் நிறைவு பெறும்) |
| 26. | தொன்மம்( புராணிகம் ) Mitos | வரலாறும் நம்ப முடியாத அதீத கற்பனையும் கலந்த பழங்கதை |
| 27. | நடப்பியல் Realisme | காவியப்பண்புகளும் அதீத கற்பனைகளும் கலவாமல் நிகழ்கால மனிதர் வாழ்வியலை உள்ளபடி பதிவு செய்தல் |
| 28. | கதை ஊசல் Saspens | படிப்பவர்களுடைய / பார்ப்பவர்களின் ஆர்வத்தைத் தூண்டுவதற்காகக் கையாளப்படுகின்ற உத்திமுறை |
| 29. | எள்ளல் Satira | குறிப்பிட்ட நபரைப் பற்றிய நையாண்டி கலந்த படைப்பிலக்கியம் |
| 30. | உணர்ச்சி வெளிப்பாடு Sentimental | கதைப்பாத்திரங்கள் இரக்க உணர்வை, ஏக்கத்தை, கோபத்தை, துன்பத்தை, துயரத்தை, இயலாமையைத் தாங்கள் ஏற்ற பாகத்தின் வழி காட்டுவது. |
| 31. | நோக்குநிலை Sudutpandangan | ஒரு கதாசிரியர் தந் கதையை வாசகர்களுக்குச் சொல்ல எடுத்துக் கொண்ட ஒரு முறை அல்லது பாணியாகும். ( தன்மை நோக்கு, படர்க்கை/ புற நோக்குநிலை ) |
| 32. | துன்பியல் Tragedi | கதைப்பாத்திரங்களுக்கு எதிர்பாராமல் நிகழும் துயரச் சம்பவங்கள் |
| 33. | புதைநிலை Tersirat | படைப்பிலக்கியங்களில் புதைந்திருக்கும் கருத்துகள். ஆழ்ந்து நோக்க வேண்டும் |

***மூலம்: கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு/ தேர்வு வாரியம்***

# ஆசிரியர் குழு

**இரவிச்சந்திரன் சுப்ரமணியம்**
**இரமணி தருமன்**
**பிரேமா சுப்பையா**
**நிர்மலா கிருஷ்ணன்**
**இரவி புருசோத்தமன்**
**தேவகி அய்யாவு**
**ரேவதி நல்லமுத்து**
**சுதா இராமகிருஷ்ணன்**
**சுபாஷினி ஜெய்சீலன்**
**நிஷா முனியாண்டி**
**இரவிசங்கரி மணிவண்ணன்**
**சுரேஷ் கனகராஜன்**




# நன்றி

**கலைத்திட்ட மேம்பாட்டுப் பிரிவு, மலேசியக் கல்வியமைச்சு**

**தேர்வு வாரியம், மலேசியக் கல்வியமைச்சு**

**கருவள மற்றும் தொழில்நுட்பப் பிரிவு, மலேசியக் கல்வியமைச்சு**

**ஜொகூர் மாநில இடைநிலைப்பள்ளித் தமிழாசிரியர்கள்**

## Penghargaan

**BAHAGIAN PEMBANGUNAN KURIKULUM, KPM**

**LEMBAGA PEPERIKSAAN, KPM**

**BAHAGIAN SUMBER DAN TEKNOLOGI PENDIDIKAN, KPM**

**GURU-GURU MATAPELAJARAN KESUSASTERAAN TAMIL**




KEMENTERIAN PENDIDIKAN
JABATAN PENDIDIKAN NEGERI JOHOR

Pautan Maklumbalas Pengguna Modul Menggilap Permata 3.0

https://forms.gle/x3xhqzk5q2X56UuN6

**HAKCIPTA JPNJ**

**Tidak dibenarkan mengeluar ulang mana mana kandungan dalam modul ini dalam apa jua bentuk sama ada secara elektronik, fotokopi atau mekanikal atau cara lain sebelum mendapat keizinan bertulis daripada Jabatan Pendidikan Negeri Johor**

**SEKTOR PEMBELAJARAN**
**JABATAN PENDIDIKAN NEGERI JOHOR**